உ

கடவுள் துணை.

வியாசன் விபரீதம்.



ரிஜிஸ்டர் காபிரைட்

இதன் விலை அணா ¼

இஃது,

சிறுமணவூர்,

முனிசாமிமுதலியாரால்

சேகரிக்கப்பட்டு,

தமது

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1906.

உ

வியாசன் விபரீதம்.

முனிசாமி முதலியாரால்

உ

கடவுள் துணை.

புதிய புஸ்தகங்களின்

விளம்பரம்.

வியாசன் விபரீதம்	0	4	0
நாரதன் கலகம் முதல்பாகம்	0	6	0
நாரதன் கலகம் இரண்டாம்பாகம்	0	4	0
அகடவிகடசம்சாரி	0	4	0
சண்டாளர் சகவாசம்	0	8	0
கொழுந்தன் கிளிப்பு	0	6	0
பங்காருக்கதை	0	6	0
பதிவிரதைகள் சரித்திரம்	0	12	0
பிரபஞ்சவுற்பத்தி	2	0	0
இங்கிலீஷ் தமிழ் வைத்தியசிகாமணி	3	0	0

போலீசு ஆக்ட்டு	0	4	0
ஸ்டாம்பு ஆக்ட்டு	0	8	0
தஸ்தாவேஜுகள் சட்டம்	1	4	0
இந்தியன் பினல்கோடு	3	0	0
கிராமமுன்சிப்கோடு	3	0	0
இந்துலா	2	0	0

சிறுமணவூர்

முனிசாமிமுதலியார் அச்சுக்கூடம்,

பெரம்பூர் பாரக்ஸ் போஸ்ட்,

மதராஸ்.

3

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 9-AUG 1909 MADRAS

உ

கடவுள்துணை.

வியாசன் விபரீதம்.

கணபதிதுதி.

நீடாழியுலகத்துமறைநாலொடைந்தென்றுநிலைநிற்கவே
வாடாததவவாய்மைமுனிராஜன்மாபாரதஞ்சொன்னநாள்
ஏடாகவடமேருவெற்பாகவங்கூரெழுத்தாணிதன்
கோடாகவெழுதும்பிரானைப்பணிந்தன்புகூர்வாமரோ.

கலைமகள்துதி.

பொருப்பிலேபிறந்துதென்னன்புகழிலேகிடந்துசங்கத்
திருப்பிலேயிருந்துவையையாற்றிலேதவழ்ந்தபேதை
நெருப்பிலேநின்றுகற்றோர்நினைவிலேநடந்தோரேன
மருப்பிலேபயின்றபாவைமருங்கிலேவளருகின்றாள்.

கண்ணபிரான்துதி.

கையிலாழி யெடுத்தருள் கண்ணனை
மையுலாமழை வண்ணனைப்·பாண்டவர்
உய்யவந்து தயஞ்செய்த பாநுவை
வையமுண்டசெவ் வாயனை வாழ்த்துவாம்.

வேதவியாசர் உற்பவம்.

கடல்சூழ்ந்த நெடிய உலகத்தில் நீர்வளம், நிலவளம் பெற்று குடிவளமுதலிய யாவும் விளங்குகின்ற நாடெவற்றினும் சிறப்புற்றிருக்கின்றது சேதிநாடு. அந்தச் சேதிநாட்டிலிருந்து உலகமுழுதும் தன்னை வணங்கச் செங்கோல் நடாத்திவருகின்றவன் இரவிகுலதிலகனான வசுவென்பவன். அவ்வசு மந்திரி முதலானவர்கள் தன்னைச் சூழ்ந்துவர வெளிப்பட்டு காட்டிற்சென்று வேட்டையாடி இளைப்பாற முனிவர்கள் தவஞ்செய்கிற ஒரு பெரிய சோலையில் வந்தான் அச்சோலையில் தவஞ்செய்துகொண்டிருக்கிற முனிவர்களை அவ்வரசன் பார்த்து தவத்துக்கு மிஞ்சின பொருள் யாதொன்றுமில்லை யாதலால் நாமும் தவஞ்செய்யவேண்டுமென்று கருதி மந்திரி முதலானவர்களை அழைத்து ஓ அன்பினர்களே இதுவரைக்கும் நான் அரசுசெய்து வந்ததுபோல் யாவர்க்கும் ஒருகுறைவு வராமல் அரசு செலுத்துங்களென்று கூறி தனது முத்திரைமோதிரத்தைக் கொடுத்துவிட்டான். மந்திரி முதலானவர்கள் அரசன் முகக்குறிப்பைக் கண்டு தடுத்துப்பேசச் சக்தியில்லாதவர்களாகி அரசன் கட்டளைப்படி சேதிநாட்டில்வந்து யாதொரு குறைவும் வராமல் அரசு செலுத்திவந்தார்கள். இங்கே வசுவென்பவன் முனிவர்களிடத்திற்சென்று வணங்கி அவர்கள் கிருபையினால் தவநிலை சேர்ந்து அநேகநாள் தவஞ்செய்திருந்தான். இப்படி அருமையான தவஞ்செய்கிற வசுராஜனுக்குமுன் இந்திரன் வந்து ஓ வசுராஜனே உலகிலுள்ள எல்லா அரசர்களிலும் நீ மநு சாஸ்திரவிதி பிசகாமல் செங்கோல் நடாத்தி தருமதேவதையை நாலுபாதத்தில் நடக்கச்செய்து குடிகளைக் காப்பாற்றி வருகிறவன். அப்படிப்பட்ட நீ தவநிலைசேர்ந்து தவஞ்செய்கிற காரணமென்னவென்று வினவ வசுராஜன் இந்திரனை வணங்கி ஓ ஐயனே தவத்துக்கு மிஞ்சின பொருள் வேறொன்றுமில்லையென்று நினைத்து சஞ்சலத்திற் கிடமாகிய உலகத்தை நீங்கி இத்தவத்தைச் செய்யக் கருதினேனென்றான்.

இந்திரன் ஓ வசுராஜனே தவத்துக்குயர்ந்தபொருள் வேறொன்றுமில்லை என்பது உண்மைதான். அத்தவம் அரசனால் பெருகவேண்டுவதாதலால் அத்தவத்துக்கும் உயர்ந்தது அரசன்றோ! அந்த அரசை மநுநெறிவழுவாமல்நடாத்திவந்தால் அதைவிட மேலான பயன் என்னவிருக்கின்றது? ஆதலால் உனக் கென்னவரம் வேண்டுமோ அந்த வரத்தைக் கொடுக்கிறேன் அதைப் பெற்று முன்போலவே அரசு செலுத்திவாவென்று கூற வசுராஜன் ஓ ஐயனே எங்கெந்தலோகங்களைக் காண நான் விரும்புகிறேனோ அந்தந்த லோகங்களைக் காண வேண்டுமென்று சொல்ல இந்திரன் அவ்வரசன் கருத்தின்படி ஒரு திவ்ய விமானங் கொடுத்து சத்துருவை நாசஞ்செய்ய ஒரு காலதண்டமும், கமலமாலையும், சொர்ணகிறமும் பாலித்து இந்திரன் தனதிருப்பிடத்திற் சென்றான். வசுராஜன் அவ்வரத்தைப் பெற்றுக்கொண்டு தவநிலைவிட்டுத் தன் நாட்டிற்சென்று காவிகாம்பர சடாதார தண்டகமண்டலங்களை நீக்கி கங்கை முதலாகிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து நல்ல வஸ்திரங்களை யுடுத்தி மகரகுண்டல ஆகேயூர கடக கங்கண முதலான ஆபரணங்களை யணிந்து மல்லிகை முல்லை முதலாகிய பரிமளமிகுந்த நறுமலர்மாலைகள்சூடி சந்தனம புனுகு கஸ்தூரி கற்பூர சவ்வாது பூசி நவரத்னமிட்டிழைத்த சிங்காசனத்தில் இனிது வீற்றிருந்து தேசத்தரசர்களெல்லாம் வணங்க வேதவேதியர்கள் பல ஆசிகள் கூற மகுடாபிஷேகனாகி மநுசாஸ்திரவிதி பிசகாமல் முன்போலவே அரசுசெலுத்தி தனக்கு நானாவரங் கொடுத்த இந்திரனுக்கு மகிழ்வுண்டாகச் சிறந்த திருவிழா நடாத்திவந்தான். அதனாலே நீர்வளம் நிலவளம் மிகுதியாகி குடிவளமிகுந்தது. இச்செய்கையை மற்ற அரசர்கள் கண்டுங் கேட்டும் அவரவர்கள் தனித்தனியே இந்திரனுக்குத் திருவிழா நடத்தினார்கள் அதனாலே இந்திரனுக்கு அதிக மகிழ்ச்சியுண்டாகி எல்லா வளமும் பெருகும்படி நீர்வளத்தைப் பெருகச்செய்தான் இப்படி உலகமுழுதுஞ் சுகமடைந்தது.

இப்பால் அந்த வசுராஜன் இந்திரன் கொடுத்த விமானத்தின்மீதிலேறி தன் கருத்தில் நினைத்த லோகங்களுக்கெல்லாம் சென்று அவிடத்திலிருக்கும் அதிசயங்களைப் பார்வையிட்டுக்கொண்டு அரசுசெலுத்தி வருகிறநாளில் ஒருநாள் மந்திரி முதலானவர்கள் புடைசூழ வேடிக்கையார்த்தமாய் வெளிப்பட்டு தன்னகரத்தின் மருங்கில் இருக்கிற மிகவுங் குளிர்ச்சியையுடைய சுத்தமதியென்னும் பெயர்பெற்ற நதியருகில்வந்து அவ்விடத்திலிருக்கிற விநோதங்களைப் பார்த்துக்கொண்டு வருகிறபோது தனது பராக்கிரமத்தை மந்திரிகளுக்கும் மற்றவர்களுக்கும் அறிவிக்கவேண்டி அங்கே உயர்ந்து பருத்திருந்த கோலாகலமென்கிற வெற்பைத் தன் காலினால் எற்றி அந்நதியில் தள்ளித் தன்னகரத்திற் சென்றான். பின்பு சுத்தமதியென்கிறநதி போகத்தை யனுபவிக்கக்கருதி ஒரு பெண்ரூபந்தரித்து கோலாகலமென்னும் வெற்பைக் கணவனாகக்கொண்டு கூடி வசுபதத்தனென்று ஒரு புத்திரனையும் கிரியையென்று ஒரு புத்திரியையும் பெற்றாள். அந்த இரண்டு மக்களையும் மிகுந்த அன்புடன் வளர்த்துவருகிறநாளில் கிரியையென்பவள் பேதைப்பருவம் பெதும்பைப்பருவங் கடந்து மங்கைப்பருவமான காலத்தில் ஒருநாள் தன்னந்தனியே அந்நதியினருகில் விளையாடிக்கொண்டிருந்தாள். அந்தத்தருணத்தில் முன்போல வசுராஜன் வேடிக்கையார்த்தமாய் அந்நதியருகில் வந்து விநோதங்களைப் பார்த்துவருகிறபோது நதியருகில் விளையாடித் திரிகிற கிரியையென்பவளைக் கண்டு இந்தக் கன்னிகை யார் மகாரூபவதியாய் இரதியைப்போல் பிரகாசிக்கிறாள் இவள் வதனமோ சந்திரவிம்பம், குழலோ முகில், நெற்றியோ மூன்றாம்பிறை, புருவமோ கருப்புவில், கண்ணோ கருவிளமலர், நாசியோ குமிழம்பூ, கன்னமோ கண்ணாடி, வாயோ சேதாம்பல், பல்லோ முல்லை, கழுத்தோ கமுகு, முலையோ மலை, தோளோ வேணு, முன்கையோ மகரயாழ், அகங்கையோ தாமரை, இடையோ அந்தரம், அல்குலோ அரவப்படம், தொடையோ வாழைத்

தம்பம், மூழந்தாளோ ரெண்டு, கணைக்காலோ வரால், பா
தமோ புத்தகம், இவளுக்கொப்பு இவளையன்றி வேறொரு
வரில்லையென்று அதிக மையலாகிப் பிரமைகொண்டு அந்தக்
கிரிகை விளையாடுகிறதைப் பார்த்து அரசன் சித்திரப்பிரதி
மெய்போல் நிற்கிறதை மந்திரிகள் அறிந்து ஓ! ஓ! நமது அ
ரசன் அக்கன்னிகையின்மேல் மையலாகிறனென்று குறிப்
பினாலுணர்ந்து அக்கன்னிகையிடத்திற் சென்று ஓ அம்மணி
நீயார் உன் பெயரென்னவென்று வினவ கிரிகை ஓ புண்ணி
யவான்களே நான் இந்த நதியின் புத்திரி என்பெயர் கிரிகை
யென்று கூற்றி அந்நதியி லிறங்கிவிட்டாள். மந்திரிகள் அ
ரசனிடத்தில் வந்து ஓ அரசனே அப்பெண் இந்த நதியின்
புத்திரியாம் அந்த அம்மனுக்குக் கிரிகையென்னும் பெய
ராம் என்றுகூறினார்கள் அதுகேட்ட அரசன் அந்நதியருகிற்
சென்று சொல்லுகிறான் உலகுக்குத்தாயாகி எவர்களையும்பா
துகாக்கின்ற தேவதாசநதி அடியேன் மனங்களிக்க நின்னி
டமாயிருக்கிற கிரிகையென்னும் கன்னிகையை மணஞ்செய்
துகொடுக்கவேண்டு மம்மணியென்று பிரார்த்தித்தான். அந்
தச் சுத்தமதியென்னும் நதி ஒரு பெண்ணுருவந்தரித்து இர
ண்டுமக்களுடன் அரசன்முன்றோன்றி இரண்டுமக்கள்வந்த வி
ர்த்தாந்தத்தையுஞ்சொல்லி ஓ அரசனே நீ மகாபுண்ணியவா
னும் உலகாதிபனுமாதலால் உன் ஸ்துதிக்கு மகிழ்ந்து இந்த
இரண்டு மக்களையும் உனக்குக் கொடுத்தேன் கன்னிகையா
கிய கிரிகையை நீ மணம்புரிந்து இந்தப் புத்திரனைச் சேனாப
தியாய் வைத்துக்கொள்ளென்று கட்டளையிட்டு முன்போல்
நதியுருவமாயினாள். அரசன் கிரிகையென்னுங் கன்னிகை
யை ஐம்பத்தாறுதேசத் தரசர்களும் அறிய வேதவேதியர்
ஆசிகள் பகர மங்கலம்புனைந்து வசுபதத்தனுக்குச் சேனாதி
பத்தியங்கொடுத்து பின்பு கிரிகையோடு பள்ளியறைசேர்ந்து
பஞ்சணைமஞ்சத்திலிருந்து தாம்பூலந்தரித்து ஐந்துவித ஆலி
ங்கனமும், பதினொருவித அதரபானமும், எழுவித நகக்குறி
யும், எழுவிதத் தொழிலும், எட்டுவித தந்தக்குறியும்புரிந்து

அமுதமிருக்கும் பதினைந்து தானத்தையுமுணர்ந்து எட்டுவித தாடனமும், எட்டுவித புட்குரலுமுண்டாக நாற்றியிருபத்தெட்டுவிதக் கரணங்களைப் புரிந்து கலவிப்போரிலுண்டாகும் பதினாறுவித நயமுமியற்றி ஆகமுமாகமும் ஆவியுமாவியும் ஒன்றெனக் கட்டி முத்தமிட்டு அவளது வட்டமிட்ட செப்புத்தனத்தைக் கைத்தலத்திற் பற்றிப் பிடித்துக் குழைத்துக் களித்து இரதியு மதனுமெனக் கூடிக்கலந்து அப் பருவக் கிரிகை மகிழ்வுறச் சிறந்த லீலைகள்புரிந்து சரசவை போக சையோக சம்போகமடைந்து வாழ்ந்துவருகிறநாளில் கிரியையென்பவள் கர்ப்பவதியாயினாள் அரசன் கர்ப்பங்கொண்ட தன் மனைவிக்கு நல்ல மாமிசங்களைக் கொண்டுவந்து கொடுக்கக் கருதி மந்திரிமார்கள், இரதகஜதுரகபதாதிகள், வேடர்கள், நாய்கள், வலைஞர் முதலானவர்கள் புடைசூழ வெளிப்பட்டு காட்டிற்சென்று யானை காடி சிங்கமுதலான பெரிய மிருகங்களை அதஞ்செய்து நல்ல ருசியுள்ள மாமிசமிருகங்களை வதைத்து அதன் மாமிசத்தை யெடுத்து அரசன்மனைக்கு அனுப்பிவித்து சேனைகளோடு மகா விநோதமுள்ள ஒரு சோலையில் வந்திறங்கி அவ்விடத்தில் பெரிய மாளிகையைப்போல் வஸ்திரங்களினாலியற்றி அக் கூடார மாளிகையில் சப்ரகூடமஞ்சமிட்டு அன்றிரவில் சயனித்திருந்தான். அப்போது சந்திரோதயமாயிற்று இளந்தென்றல் வீசிற்று புட்பங்களெல்லாம் பரிமளித்தன அரசன் அதுகண்டு மிகுந்த காமங்கொண்டு கிரியையினது உருவத்தை மனதில் நினைத்துத் தன்னந்தனியே புரண்டு அயர்ந்து நித்திரைசெய்தான் அப்படி நித்திரைசெய்கிறபோது கிரியை வந்து தன்னைக் கூடிக் கலந்ததுபோல் கனவுகண்டு வீரியம் கலிதமாயிற்று உடனே அரசன் விழித்து ஓ ஓ மோசம்வந்தது நாம் காமவெறிகொண்டு நித்திரை செய்ததினால் வீரியம் வெளிப்பட்டது இது வீணாகப்போமானால் மகா குற்ற[illegible]ரிடும் இதற்கென்ன செய்கிறதென்று சற்றுநேரம் ஆலோசித்து தன்னெதிரில் வைத்திருக்கிற வல்லூரு என்கிற பட்சியைச்

சைகைசெய்தழைத்து ஓ பட்சிஅரசே இதோயிருக்கிற வீரி
யத்தை எடுத்துப்போய் என் மனைவிக்குக் கொடுவென்று
கட்டளையிட்டு ஒரு இலையைப் பறித்து வட்டில்போலத் தை
த்து அவ்வீரியத்தை அதிற்புகட்டி அந்த வல்லூருவினிடத்
திற் கொடுத்து அனுப்பினான் அந்த வல்லூரு அவ்வட்டிலை
மூக்கினாலேற்றுக்கொண்டு கிரியையினிடத்துவரக்கருதி யமு
னையாறுவரைக்கும் வந்தது அங்கு ஒரு ஆலமரத்தில் பசியி
னால் கனவருத்தமடைந்து ஒரு இராஜாளி யிருந்தது அஃ
திந்த வல்லூரு செல்கிற அரவந்தெரிந்து பறந்துவந்து பார்
த்து இஃதிரையெடுத்துப் போகின்றதால் இதை மறித்து அ
தைப் பறித்துப் புசிக்கலாமென்று கருதி வல்லூரைத் தடுத்
தது அந்த வல்லூரு இராஜாளியை நோக்கி நீயேன் என்னை
மறிக்கிறாய் நான் அரசன் அலுவலாகச்செல்கிறேன் வீணாய்
வருத்தத்துக் கிடம் வைத்துக்கொள்ளாதே வழிவிடென்று
கூற இராஜாளி சீ சீ நாயென்ன உன்னை விடுவது உன் மூக்
கிலிருக்கிற இரையை நான் புசிக்காமற்போகிறதில்லையென்
றெழும்பிப் பறந்துவந் தடித்தது வல்லூர் அதுகண்டு அட
டா நீ எனக்கொரு அனுமாத்திரமென்று இகழ்ந்து இது
வும் எழும்பிப் பறந்து அந்த இராஜாளியை அடித்தது இப்
படி இவ்விரண்டு பட்சிகளும் போராடுகிறபோது இராஜாளி
யினது மூக்கு அந்த வீரியமிருக்கிற வட்டிலிற்பட்டு இலை
கிழியவே வீரியம் யமுனையாற்றில் இரண்டுதுளியாய் விழுந்
தது உடனே வல்லூர் இராஜாளியை விட்டுவிட்டு அரசனிட
த்துவந்து நடந்த விருத்தாந்தத்தைக் கூறிற்று அதை யரசன்
கேட்டு கனவருத்தமடைந்து அன்றிராத்திரி அங்கிருந்து
மறுநாள்காலமே தன்னகரம்வந்து சேர்ந்து மனைவியைக்
கண்டு மகிழ்ந்து முன்போல் அரசுசெலுத்தியிருந்தான்.

இங்கே யமுனையாற்றில் அப்சரஸ்திரீகளி லொருத்தி
பிரமன் சாபத்தினாலே மச்சமாகி சஞ்சரித்திருந்தாள் அவள்
இரண்டுபிரிவாகவீழ்ந்த அந்த வீரியத்தைப் புசித்தாள் அன்

றுமுதல் அவள் கர்ப்பவதியாகி பிரசவகாலம் சமீபித்திருக்
கிறதருணத்தில் மீன்பிடிக்கிற வலைஞர் வந்து அந்த யமுனை
யாற்றில் வலையை விசிறினார்கள் அப்போது அவ்வலையில்
மீனமாயிருக்கிற அப்சரஸ்திரீ அகப்பட்டாள் அதை வலை
ஞர் பார்த்து இந்த மீன் மிகவும் பெரிதாயிருக்கிறதுமன்றி
இதன் வயிறும் பெருத்திருக்கின்றது இதை நமது அரசனி
டத்தில் சேர்க்கவேண்டுமென்று கருதி அதைத் தாசராஜனி
டத்திற் சேர்த்துவிட்டார்கள் தாசராஜன் அந்த மீனத்தின்
வயிற்றைப் பக்குவமாய்க் கிழித்துப்பார்த்தான் அதில் ஒரு
புத்திரனும் ஒரு புத்திரியு மிருந்தார்கள் புத்திரர்க ளில்லை
யென்று கனவருத்தமடைந்திருக்கிற தாசராஜன் கண்டு பர
மானந்தத்தை யடைந்தவனாய் விழித்தகண் விழித்தபடி பா
ர்த்திருக்கிறதருணத்தில் மீனமாயிருந்த அப்சரஸ்திரீ அந்தர
த்தில் ஒரு திவ்ய விமானத்திற்றோன்றி ஓ தாசராஜனேயெ
ன்று அழைத்து அதோ உன்னருகிலிருக்கிறமீன்வடிவு நான்
தான் அப்புத்திரர்களோ உலகமுழுதும் அரசுசெலுத்தும்
வசுராஜன் வீரியத்தினால் வந்தவர்களென்று அந்த விருத்தா
ந்தத்தைச் சொல்லி பின்னு மவ்வரசனைப்பார்த்து ஓ தாசரா
ஜனே என் வரலாற்றைக் கூறுகிறேன் கேள் அந்தரவாசிக
ளாகிய அப்சரஸ்திரீகளில் நானுமொருத்தி பிரமனிடத்தில்
பூசைக்குப் பணிவிடைப்பெண்ணாயிருந்தேன் ஒருநாள் பூ
சைக்குச் சலந்திரட்ட யமுனையாற்றுக்கு வந்து அந்த ஆற்றி
லிருக்கிற மீன்களின் விநோதங்களைப் பார்த்திருந்து அதனால்
பூசைவேளை தப்பினபின்பு பிரமனிடத்திற் சென்றேன் பிர
மன் என்னைப்பார்த்து ஓ பெண்ணே இந்நேரவரையில் என்
னசெய்தாயென்று கேட்டதின்பேரில் உண்மையைக் கூறி
னேன் அதன்மேல் பிரமன் சினங்கொண்டு நீ மீன் விநோத
ங்களைப் பார்த்திருந்தமையால் அவ்வாற்றிலேயே மீனமாகி
இருவென்று சாபமிட்டார் அதன்மேல் மிகுந்த துன்பமடை
ந்து பிரமனை மிகவும் வேண்டிக்கொண்டேன் பிரமன் மகிழ்
ந்து வசுராஜன் வீரியம் யமுனையாற்றில் விழப்போகிறது அ

தை நீ புசிப்பாய் வலைஞர்கள் பிடித்துத் தாசராஜனுக்குக் கொடுப்பார்கள் தாசராஜன் உன் வயிற்றைக் கிழிப்பான் அப்போது நீ பெற்ற சாபந் தீருமென்று கூறினார் அப்படியே இன்றையதினம் அச்சாபந் தீர்ந்ததென்று கூறி முன்போலப் பிரமனிடத்திற் சென்றாள். அதைக்கேட்ட தாசராஜன் திடுக்கிட்டு இம்மக்கள் நமதரசனாகிய வசுராஜனுக்குப் பிறந்தவைகள் இனி நாம் வைத்திருக்கிறது தகுதியல்ல அரசனிடத்திற்சேர்த்து அரசனிட்ட கட்டளையின்படி நடப்பது உத்தமமென்று கருதி அம்மக்களைப் பொற்றட்டிலேந்தி அரசனிடத்திற் கொண்டுவந்து வைத்து அப்சரஸ்திரீ கூறியவற்றைத் தெரிவித்து நின்றான். அரசன் மகிழ்ந்து மக்களையெடுத்துக்கொண்டு அவருட் புத்திரனுக்கு மச்சராஜனென்று பெயரிட்டு வளர்த்துத் தன் சேனைக்குத் தலைவனாய் வைத்துக்கொண்டு புத்திரியைத் தாசராஜனுக்குக் கொடுத்து அனுப்பினான். தாசராஜன் மிகுந்த களிப்புடன் அந்தப் புத்திரிக்கு மச்சகந்தியென்று பெயரிட்டு வளர்த்துவந்தான் அந்த மச்சகந்தி பேதைப்பருவங்கடந்து பெதும்பைப்பருவத்தையடைந்து தந்தையாகிய தாசராஜனிடத்திற் சென்று வணங்கி ஐயா எனக்கு ஒரு படவு கொடுத்தால் நமது குலாசாரப்படி யமுனையாற்றிலிருந்து வருகிற பெரியோர்களுக்குப் படவு விட்டுக்கொண்டிருக்கிறேனென்ன தாசராஜன் அவ்வாறே சிறியபடவொன்று செய்துக் கொடுத்தான். மச்சகந்தி அப்படவை சிலபேரால் எடுத்து யமுனையில் விடுத்து வருகிற பெரியோர்களுக்கும் மற்றவர்களுக்கும் படவுவிட்டிருந்தாள் இப்படி சிலகாலஞ் சென்றபின்பு ஒருநாளில் பிரமன் மைந்தன் வசிஷ்டன், வசிஷ்டன் மைந்தன் சத்தி. சத்தி மைந்தன் பாரசன். அந்தப் பாரசமகாமுனி தன்னாலே உலகத்துக்கு நன்மை உண்டாகவேண்டுமென்றும் அதற்கு ஒரு புத்திரனைப் பெறவேண்டுமென்றுங் கருதி இருபத்தேழு நட்சத்திரங்களில் ஒரு நட்சத்திரம் உச்சமாகிறது அந்த நட்சத்திரம் உச்சமாகிறகாலத்தில் ஒரு ஸ்திரீயைக் கூடவேண்டு

மென்று யோசித்து அந்தக் காலம் வருகிறபரியந்தம் தவத்திலிருந்தார் அந்தக் காலம் சமீபித்தது அதுகண்டு தவத்தை விட்டெழுந்து நகரங்களுக்குச்செல்ல அதிவேகமாய் வந்தார் குறுக்கே யமுனையைக் கண்டார் அந்த யமுனையோ மிகவும் பெருக்கெடுத்திருந்தது பராசர் அதையறிந்து அவ்வாற்றங்கரையில் படவோடுமிருக்கு மச்சகந்தியருகில் வந்து ஓ பெண்ணே நானொரு கோரிக்கையை உட்கொண்டு நகரங்களுக்குப் போக வந்தேன் வழியில் இந்த ஆறு தோன்றிற்று இதைக் கடந்து போவோமென்றால் பெருக்கெடுத்திருக்கின்றது தயவுசெய்து படவு விடுவையாகில் ஆற்றைக் கடந்து என் கோரிக்கையை முடித்துக்கொள்வேனென. மச்சகந்தி ஓ ஐயா பெரியவரே ஆறோ பெருக்கெடுத்திருக்கின்றது உம்மைமாத்திரம் படவிலேற்றிச் செல்வேனாகில் படவுக்குத்தகுந்த பாரமல்ல ஒருவேளை படவு கவிழ்ந்தால் மோசம் வரும் சற்றுநேர மிருந்தால் யாராவது இன்னுஞ் சிலபேர்கள் வருவார்கள் அப்போது தடையின்றி உம்மை அக்கரையிற் சேர்க்கிறேனென பராசர் மச்சகந்தியைப்பார்த்து ஓபெண்ணே படவுக்குத் தகுந்த பாரம் எவ்வளவோ அவ்வளவுக்கு நான் பாரமாயிருப்பேன் நீ சந்தேகப்படாமல் படவை விடுமென்று கூற மச்சகந்தி இவர் யாரோ மகாத்மாவென்று நினைத்து ஓ ஐயா வாரும் படவிலேறுமென்றாள் பராசர் மகிழ்வடைந்து தமது தவமகிமையால் படவுக்குத் தகுந்த பாரமிருக்க நினைத்துப் படவிலேறினார் மச்சகந்தி படவை யாற்றிற்செலுத்தி வருகிறபோது படவு கனத்திருக்கிறது தெரிந்து இவர் மகாதவசியென்று மனதில் நினைத்து மிகுந்த ஜாக்கிரதையுடன் படவைத் தள்ளிவருகிறாள் படவிலிருந்த பராசர் ஆகாயத்தை நோக்கினார் அப்போது இவர் நாடிய நட்சத்திரம் உச்சத்தில் வருகிறதருணமாயிருந்தது அதைப் பார்த்து கன விருத்தமடைந்து ஓ ஓ நாம் கோரிய காலமாகிற தருணமாயிற்றே இனி என்னசெய்யப்போகிறோமென்று வருத்தப்பட்டு இனி இந்தப் படவைத் தள்ளும் பெண்ணினிடத்தாவது

காலந்தப்பாமல் கூடவேண்டுமென்று நினைத்து மச்சகந்தியைப்பார்த்து ஓ பெண்கள்நாயகமே இவ்வளவு வருத்தப்பட்டுவந்தும் நான் உட்கொண்ட கோரிக்கை நிறைவேற்றுவதற்குக் காலந் தப்பிப்போகின்றது நான் உட்கொண்ட கோரிக்கை யென்னவென்றால் இதோ வானத்திலிருக்கிற நட்சத்திரம் உச்சியில் வருகிறபோது ஒரு ஸ்திரீயைச்சேர்ந்து உடனே ஒரு புத்திரனைப் பெறக் கருதி வந்தேன் நட்சத்திரமோ இன்னுஞ் சற்றுநேரத்திற்குள் உச்சமாகப்போகின்றது நானோ ஆற்றிலிருக்கிறேன் ஆதலால் நீ கிருபைகூர்ந்து திரண்டு பரந்து நிமிர்ந்து வளர்ந்துவருகிற உன் குயம் என் மார்பில் அழுந்த அணைவாயாகில் என் கோரிக்கை நிறைவேறுவதுமன்றி இவ்வுலகத்தில் நீயும் அழிவில்லாத புகழைப் பெறுவாயென்று இனியவார்த்தைகளாற் கூறினார்.

அந்த மொழியைக் கேட்டமாத்திரத்தில் மச்சகந்தி நாணமுற்று ஆ பெரியவராயிருக்கிற இவர் நம்மைப் புணர அழைக்கிறாரென்று மனதில்நினைத்து ஓ ஐயனே நீர் மகாதவசி நானோ இன்னு மங்கைப்பருவ மடையாதவள் என்னைப்பார்த்து உம்மைக் கூடென்று சொல்வது தகுதியா அரும்பைக் கசக்கி முகர்ந்தால் பரிமளிக்குமா அதுபோல் பருவகாலமல்லாத என்னைக் கூடவேண்டுமென்று கருதினது முறைமையா அப்படியல்லவென்று புணர யத்தனித்தாலும் என் உடல்முழுது மச்சகந்தம் நீர்தான் எப்படிச் சகிப்பீர் மேலும் நான் கன்னிகை இதை யோசிக்காமல் இவ்வாறு கூறுகிறது தருமமாவென்ன பராசர் மச்சகந்தியைப் பார்த்து ஓ பெண்ணரசே உன் உடலிலிருக்கு மச்சகந்தம் நீங்கி இன்றுமுதல் பரிமளகந்தியென்று உனக்குப் பெயராகக்கடவது நீ என்னைக்கூடினு முன்போலக் கன்னிகையாகவே இருப்பாயென மச்சகந்தி இவ்வசனத்தைக் கேட்டவுடன் உடல்முழுதும் பரிமளம் வீசுகிறதைப் பார்த்து ஓ ஓ இவர் தவசிரேஷ்டர் மறுக்கக்கூடாதென்று கருதிக் கூறுகிறாள் ஓ சுவாமி தங்கள்

கருத்துக் கிசைந்தபடி நானுஞ் சம்மதித்தேன் ஆனால் நான்
மங்கைப்பருவத்தினளல்ல தாங்கள் நினைத்த நினைப்புக்குத்
தகுதியான காலமு மிடமுமில்லை இது பகற்காலமாகவும்
திவ்ய நதியாயுமிருக்கிறது இதற்கென்ன செய்கிறது என்று
கூற பராசர் மச்சகந்திக்கு மங்கைப்பருவத்தை அநுக்கிர
கஞ்செய்து ஆற்றின் மத்தியில் ஒரு திட்டு தோன்றும்படி
உண்டாக்கி திருநீற்றில் கொஞ்சமெடுத்து ஆகாயத்தில் ஊதி
னார் உடனே ஆயிரங்கதிர்களோடு பிரகாசிக்கிற சூரியனை
மறைக்க மூடுபனி சூழ்ந்தது அப்பனியினால் இரவுபோலாயி
ற்று அப்போது பராசர் மச்சகந்தியைப் பார்த்து ஓ பெண்
கள்நாயகமே உன் கருத்தின்படி மங்கைப்பருவத்தை உனக்
குக் கொடுத்ததன்றி கருத்த யிடத்தையும் காலத்தையும் சே
கரித்தேன் இனித் தடையின்றி என்னைக் கூடென்றுவேண்ட
மச்சகந்தி அதிகமகிழ்ச்சியையடைந்து கருத்தொத்து அந்த
ஆற்றின் மத்தியில் தோன்றிய திட்டில் இறங்கி இருவருங்
கூடிக்கலந்தார்கள் அப்போது பராசருக்கு வீரியங் கலிதமா
யிற்று உடனே பராசர் எழுந்து யாதொன்றும் பேசாமல்
ஆற்றைக் கடந்து நடந்தார் மச்சகந்தி உடனே கர்ப்பவதி
யாகி மூன்றேமுக்கால் நாழிகைக்குள் பரப்பிரமவஸ்துவாகி
யும் என் குருவாகியும் விளங்குகின்ற வேதவியாசர் உதயமா
கினார். இப்படி வேதவியாசர் உதயமானபோதே மான்றோல்
புலித்தோல் காவிகாம்பரசடாடவிதாரராய் வேதத்தைக் கை
யிற்பிடித்துக்கொண்டு உதயமானார் மச்சகந்தி அவரைப்பார்
த்து மகா வியப்படைந்திருக்கிறபோது அவர் தன் தாயை
வணங்கி ஓ அம்மணி என் தந்தை எதோவென்று கேட்டார்
மச்சகந்தி அப்பா மகனே உன் தந்தை அதோ செல்கிறு
ரென வேதவியாசர் தாயைநோக்கி ஓ அம்மா நீ நினைத்த
போது வருகிறேனென்று வாக்குத்தத்தஞ்செய்து தந்தையி
டத்திற்சென்று அவரோடு தாமுந் தவஞ்செய்திருந்தார் அப்
போது சிலகாலமாய் உலகத்தில் காலகதியால் வேதங்கள்
ஒன்றாகக் கலந்து கருத்துகள் வேறாய்ப் பலவிதமாக மாறு

பட்டிருந்தன அந்தவேதத்தை அவ்வேதவியாசர் சிக்கறுத்து இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்று நான்குவகையாகப் பிரித்து பதினெண்புராணங்களை வெளிப்படுத்திப் பின்பு யாவர்களுக்கும் புண்ணியலோகத்தை யளிக்கும் இந்த ஸ்ரீமகாபாரதத்தை நான்குவேதங்களோடு ஐந்தாம்வேதமென்று யாவரு மேற்றுக்கொள்ள ஸ்ரீமகாகணபதி தனது கொம்பை எழுத்தாணியாகவும் மகாமேருவை ஏடாகவும் கொண்டு எழுதிமுடித்தார்.

ஸ்ரீவிநாயகமூர்த்தி இம்மகாபாரதத்தை எழுதவேண்டிய காரண மென்னெனில் பராசரும் வேதவியாசரும் இதற்கு முன்னம் கைலாசபதியைத் தரிசிக்கச் சென்றார்கள் அப்போது கைலாசபதி பராசரைநோக்கி உமக்குப் பின்னிற்கிறவர் யாரென்று வினாவ பராசர் ஓ சுவாமி என்னால் உலகத்துக்கு நலமுண்டாகவேண்டுமென்று கருதி இப்புத்திரனைப் பெற்றேன் இவனுக்கு வியாசனெனப் பெயரிட்டேனென்று கூற சாம்பவமூர்த்தி மகிழ்ச்சியடைந்து ஓ பராசரே இந்த வியாசனால் உலகத்துக்கு உண்டாகும் நலம் என்னென்று வினாவ பராசர் ஓ சுவாமி இப்போது மாறுபட்டிருக்கிற நாலுவேதமும் சீர்ப்பட்டு இவனால் வழங்கப்போகிறதுமன்றி நாலுவேதங்களோடு ஒப்புமைப்பட்டு ஐந்தாம்வேதமென்று பெயர் வகுக்கப்போகிற ஸ்ரீமகா பாரதக்கதையென ஒன்று செய்யப்போகிறான் அதனாலே உலகத்தில் தர்மார்த்த காம மோட்சம் என்கிற புருஷார்த்தங்கள் நான்கும் பரிஷ்காரமாய் விளங்கப்போகிறது என்று கூற சாம்பவமூர்த்தி மகிழ்ந்து இனிமேல் நடக்கப்போகிற ஸ்ரீமகாபாரதத்தை இப்போதே எழுதுகிறதாய் நீர் கூறியபடியால் நமது குமாரனாகிய விநாயகமூர்த்தியை எழுதச்சொல்லுகின்றேன் உமது புத்திரனைச் சொல்லச்சொல்லுமென்றுரைக்க பராசர் அதற்கொத்துக்கொண்டு வியாசரை நோக்கினார் வியாசர் அக்குறிப்புணர்ந்து ஸ்ரீமகா பாரதத்தைக் கூறத்தொடங்கினார் விநா

யகர் எழுதினர் அதுதான் ஆதி பாரதம். பின்பு வியாசர்
கூறியதற்கும் பாரதம் நிறைவேறினதற்கும் ஒத்திருந்தது.
அதனாற்றான் ஸ்ரீமகாபாரதம் எல்லா நூலினும் மேலான சிற
ப்படைந்தது. பின்பு வியாசர் அந்த ஸ்ரீமகா பாரதத்தைச்
சபாலட்சக்கிரந்தமாக்கி எனக்கும் நாரதர், சுகர், தேவலன்,
சுமந்தர் முதலானவர்களுக்குங் கற்பித்து சொற்கலோகத்து
க்கு நாரதனையும், யக்ஷர்களுக்குச் சுகனையும், பிதுர்த்தேவ
தைகளுக்குத் தேவலனையும், பூலோகத்துக்குச் சுமந்தரனை
யும் நியமித்து உமக்குச் சொல்ல இப்போது எனக்குக் கட்
டளையிட்டார் அந்த ஸ்ரீமகா பாரதம் வேதமென்று கொள்
வதற்குக் காரண மென்னெனில் அந்த பாரதவீரர்களோ
திருமால் முதலாகிய தேவர்களாதலால் அப்பாரதத்தை
வேதமென்று கூறப்பட்டது என்று வைசம்பாயனர் திரு
வாய்மலர்ந்தருளினர்.

வியாசன் மகப்பேறு.

கோடாகோடியாகிய வேதங்களையெல்லாம் சிக்கறுத்து
எசுர், இருக்கு, சாமம், அதர்வணமென்று நான்காகப் பிரி
த்து ஜடைசாகைகளுடன் உலகத்திற்கெல்லாம் ஆதாரமாகு
ம்படிச் செய்தருளிய ஆதி சகல தபசுஞ் செய்து திரிகாலக்
கியானியாய் சாபானுக்கிரகசாமர்த்தியமுடையவராய் அதிக
ஞாயமையா யிருக்கப்பட்ட வேதவியாசமகாமுனியானவர்
வெகுநாளாய் பிள்ளையில்லாமல் புத்திரன் வேணுமென்கிற
அபேட்சையினாலே சூரியன் தினமும் பிரதட்சணநமஸ்காரம்
பண்ணிக்கொண்டுவருகின்ற வெள்ளியங்கிரிச்சாரலில் அரு
ந்தவமிருந்து பர்வதராஜபுத்திரியையும் பரமசிவனையும் கரு
த்திலிருத்தி கடுந்தவசு பண்ணிவருங்காலத்திலே சிவனுக்கு

அற்புதமாகிய சில யாகங்களைச் செய்து மந்திரமூலமாய் அவிர்ப்பாகமளித்து சிவனை தியானித்து ஆனந்தக்கண்ணீர்விட்டழுது சரீரம் பொடித்துப் பூரிக்க நாவுகள் குழகுழத்துத் தழும்பேற நெஞ்சம் பஞ்சுபோலாகி வெண்ணெய்போலுருகி உடல்குழைந்து சிவானந்தவெள்ளத்தில் மூழ்கி பரவசத்யமாய் தியானஞ்செய்து தன்னை மறந்தபோது ஏழைபங்காளனுக்குக் கிருபைவந்து யட்ச கின்னர கருட காந்தருவ சித்த வித்தியாதாருடன் அநேகங்கோடி ரிஷிபீஸ்வரர்கள் தோத்திரம்பண்ணிக்கொண்டு மொய்த்துவரும்படியாக சகல ஜீவாத்மகோடிகளையும் ரட்சிக்கப்பட்ட சம்புவாகிய நாதன் ரிஷபவாகனரூடராய் பார்வதியம்மனுடன் மான் மழு சதுர்ப்புஜம் காளகண்டந் திரிநேத்திரத்துடனே காட்சி கொடுக்க அதைப் பார்த்த வேதவியாசர் சூரியனைக்கண்ட செந்தாமரைக்கமலம்போல் அகமகிழ்ந்து முகமலர்ந்து ஆனந்தமாய்க் கூத்தாடி பஞ்சாங்க நமஸ்காரம்பண்ணி சாம்பசிவமூர்த்தியின் திருக்கோலத்தைப் பார்த்து தன்னிலுமடங்காமல் மகிழ்ச்சி பூரித்து ஆனந்தக்கோவை சேர்த்து தோத்தரித்து மகாவிலாச உலாச கைலாசவாசிஸ்ரீசிவ ஸ்வாமியேயென்று உள்ளமுருகி என்புநெகிழ்ந் தன்புதழைத்த வேதவியாசருடையோனேக்கி நீரிழைத்த தவத்திற்கு நாம் மெத்தவு மெச்சினோம் உமது கோரிக்கையைக்கூறினால் கொடுப்போமென்று மொழிந்தார் வேதவியாசர் பணிந்து நிர்மல நிர்க்குண நிராகர நிச்சயமே அடியேனுக்கு ஆத்மக்யானமும் யோக்யமும் அறிவும் பத்தியும் பஞ்சபூதசேஷ்டைகளிலகப்படாப் பண்மையும் மாயையொழித்த மைந்த னொருவனைத் தந்தருளவேண்டுமென்று வருந்திக்கேட்க அப்படியே கொடுத்தேனென்று திருவாக்கருளி வெள்ளியங்கிரிக் கெழுந்தருளினார் இப்பால் வேதவியாசர் தபசிலை நீங்கி கயிலையங்கிரிச்சாரல்விட்டு இமோத்கிரிக்குப் போய் பர்ணசாலை யேற்படுத்திக்கொண்டு வைதிகமடங்கட்டி வாசம்பண்ணிவருநாளையில் ஒருநாள் தீக்கடையுங்கோலை செங்கையிற்பிடித்து அக்கினி பிறக்கும்

படிக்குக் கடைப்போது மைதீட்டிய மயிற்கண்போன்ற
செவ்வரிபறந்த கண்களையுடைய அரம்பையானவள் அவ்வி
டம்வரக் கண்டார் அவளுடைய மதிமுகமும் மதத்த விழிக
ளும் கருட்டிய கடைக்கண்ணும் சுவர்ணகுடம்போற் கதித்
துப் பெருத்த கனதனமும் அல்வயிறும் மாஸ்ரோமவளையு
மாகத் தோற்றிய சுந்தரத்தைக் கண்டு வேதவியாசர் மிகு
மோகங்கொண்டு விலகக்கூடாத மன்மதபாணத்திற்கு இலக்
காகி ஓமத்தீயில் உய்வதாகிடுத்து காமத்தீயில் கருகி மெலி
ந்து கண்பஞ்சடைந்து கலங்கிவருவதை முல்லைக்கொப்பா
கிய பல்லையுடைய வல்லி பரித்து மன்மதன்கணையால் வாடி
வேதவியாசனை நாடி மையல்தீரக் கலவிகூடி மருவவேண்டு
மென் றெருவருபவள்போல நடைகாட்டி கெஞ்சிக்கெஞ்சிக்
கொஞ்சிக்கொஞ்சிப் பஞ்சவர்ணம அஞ்சுகம்போல் அஞ்சி
யஞ்சி வஞ்சி தஞ்சசீயென்று ஆகிசாய் அழகிய கிளியாய்
கனிகொண்டு ஒரு மரத்தின் கிளையிலிருந்தாள்.

வியாசர் வேளின் கணையால் மெலிந்து வேசாரி விரகம்
பொருக்கமாட்டாமல் நேர்ந்தவிடை நேரிழையழகும் அவள்
செருப்பும் காமப்பார்வையின் குறிப்பும் இவருக்குட்புகு
ந்து அவளை நினைந்து நினைந்து உருகும்போது வீரியம் பெ
ருகும்போது அது பூமியில் விழப்படாதென்றும் புண்ணிய
த்தைப்பெண்மணி கையிற் றாங்கியகாலையில் கையழுகிறத்து மெ
ய்யுமசைந்து செருப்புக்கடைந்த குழியில் நிரம்பியது அது
இவருக்குந் தெரியாமல் தன்னைத்தான் மறந்து அரணிக்கோ
லால் ஓயாமற் கடையும்போது அந்தச் சூடும் இந்தச் சூடுங்
கலந்து அக்கினி ஜொலித்தெழுந்ததுபோல மகத்தாகிய திவ்
விய சுகமகாரிஷி பிறந்து இறந்தார் உதயகிரியிலிருக்கும் சூரி
யனும் நாணும்படிக்குச் சுயம்பிரகாச காந்தியுடன் தோன்
றிய சுகனென்னும் சுதனைக்கண்டு வேதாகமசாஸ்திரபுராண
முதலாகிய கலைகளுக்குரிய புருஷர்களும் பெரியோர்களும் அரி
யதவத்திற்குரியோர்களும் மெய்யன்பிறந்தான் எங்க ளையன்
பிறந்தான் பிறந்தானென்று துதித்துக் கொண்டாடினார்கள்.

தருமதேவதை நீதிதேவதை வனதேவதை பூமிதேவதை முதலியபேர்களு மதித்து மகிழ்ந்தார்கள் தேவதுந்துபி முழக்கி புட்பமாரி பொழிந்தார்கள் சகலாத்மகோடிகளுக்கும் தற்செயலாய்ச் சம்பிரமமும் சந்தோஷமும்பிறந்து நித்தியோச்சவங் கொண்டாடினார்கள் பாரிலுள்ள பாவங்கள் பறந்தோடவும் தருமங் குழமித் தலையெடுத்தாடவும் பெரும்பேறுங் கலந்த வைபவத்துடன் ஜனித்த பிள்ளையைப் பார்த்துக் களித்து தீராத வறுமையிலகப்பட்டுத் தேம்பிய ஒருவனுக்கு மாறாத திரவியவாழ்வு வந்தால் அவனுடைய மகிழ்வெப்படியோ அப்படிப்போலும் பிறந்திறந்துழன்ற பிராணஞனது நாள்காளுங் கொஞ்சம் நல்வினைதேடி அதனாற் புண்ணியங்கூடி விவேகம்விளைத்து பந்தம் மந்தரதாங்களெல்லாங் கடந்து திவாதம் அதிதிவதாரத்தில் கடைசியாய்ப் பிறந்து இருவினையொப்ப மலபரிபாகமாய் ஜனனமுளை தீஞ்சு இருவினைப்பயனுங் காஞ்சு உற்பவவிடாய் மாஞ்சு சுவர்க்கலோகத்தையடைந்து ஆனந்தத்தை யடைவதுபோல வேதவியாசர் பிர்மானந்தத்தில்மூழ்கிஎழுந்தார் அந்தக்காலத்தில் தேவர்களும் தேவேந்திரனும் ரிஷிகளும் முனீஸ்வரர்களும் பிர்மதேவனும் சரஸ்வதியும் லட்சுமியும் ஆகாயகங்கையும் பூமிதேவியும் சித்தாத்தியரும் வந்து ஞானமேநிறைந்த சொரூபமாகப்பிறந்த மைந்தனை உவந்து ஏந்தி உச்சிமுகந்து நீராட்டி ஆசிர்வதித்து சட்கர்மப்பிரகாரம் புத்திரோச்சவம் ஜாதககன்மம் காலகிரமமாகநடப்பித்து சாமவேதகானத்தை வீணையில்மீட்டி தேவரம்பைகள பாடிக்கொண்டிருக்க பார்வதிசமேதராகிய பரமசிவன் ரிஷபவாகனரூடராய் நாரதர்முதல் ஞானக்கடலாகிய மோனமுனிவர்கள் முன்னும்பின்னுமொய்த்துவரும்படிக்கு எழுந்தருளிய வேதவியாசருடைய சேய்தனைப் பார்த்து கிருபாசமுத்திரத்துடன் திருவருண்முகூர்த்தஞ்செய்து மதிவளரக் கலைவளருமாறுபோல் மதிவளரக் கலைவளரவென்று வாழ்த்தி மகாதேவியுடன் வெள்ளிவனாக்கெழுந்தருளினர் பிர்மாமுதலான தேவர்களும்போனார்கள்.

இப்பால் சுகப்பிர்மாவானவர் தந்தையைப் பணிந்து திரிகரணசுத்தியால் புத்திசெலுத்தி நிட்டனாமென்கின்ற பிராமணனிடத்தில் வேதாகமசாஸ்திரவித்தி நூலெல்லாங் கற்று புராணச்சாரம் ஆசாரம் விபகாரம் நமஸ்காரம் சிஷ்டாச்சாரம் அதிகாரம் தருமவுபகாரம் யாவுந் தெரிந்து ரிஷிகளெல்லாம் முதன்மையாயிருந்து தனது தந்தையிருக்கின்ற ஆசிரமத்திற்கு வந்து முறைமைப்பிரகாரமிருந்து ரிஷிகளுடன் வாசம்பண்ணி விரிந்த திறமைக்குரிய பெரிய விரதங்களை யனுஷ்டித்து பிரபஞ்ச மயக்கத்தையும் பார்த்துக்கொண்டு ஒருவர்கண்ணிலுந் தோற்றாம லகன்று காரணப்பொருள் போல் நின்று சிலநாட்சென்று உலகமென்பது இவ்வுலகத்திலுள்ள சகல பேதங்களும் தானுமாருய் மாயையல்லது வேறில்லை இனிமேல் அதைக் கூறுவதி லென்ன சிரார்த்தம் பிரம்மம் ஒன்றுதான் நிச்சயபதார்த்த குற்றமற்ற சற்குணனே இது எதார்த்தம் அகிலபுவனசராசரங்களில் உள்ளும் புறம்புமாயுறைந்து விளையாடுவது பரப்பிரம்மமே அவர் அசைந்தாலல்லது அணுவுமசையாது அவரே சுதந்தரன் மற்றவர்கள் யாவரும் பரதந்திரன் ஓ துரந்தரனேயென்று இந்தப்படிக்கு எந்தெந்தத்தருணத்திற் சொல்லவேண்டியதோ அந்தத்தருவாயில் வேதத்தி லெடுத்துக் காட்டினார். (தந்தை சொல்மிக்க மந்திரமில்லை) என்னும் விதிப்பிரகாரம் வியாசரால் அறிந்துக்கொண்ட மெய்ஞானதேசிகன் மறையாச்சிரமத்தில் பிரமசாரியம் கிரகஸ்தன் வானப்பிரஸ்தன் என்று விளம்பியிருக்கின்ற வகை தொகை விரிவு மூன்றையுமறிந்து இதுகளைப் பார்ப்பதினாலும் கேட்பதினாலும் பிரபஞ்ச ஆசாபாசம் பிடித்துக்கொண்டு ஆட்டும் அது சிலருக்குக் கொண்டாட்டம்.

அப்படிப்பட்ட பண்டாட்டங்களை மாற்றுகின்ற ஞானநூலை நவிலும் ஐயாவென்று கேட்டார் மைந்தன் வசனத்தைக்கேட்ட வாதராயணர் நகைத்து சகல கலைக்கியானமும் உருவாய்ச் சமைந்த பிள்ளாய் நீ மேற்சொல்லிய மூன்றாச்சி

ரமங்களினாலும் பற்று வையாமல் புத்தியினால் விலக்கிவிட லாமென்று பார்க்கிறாய் அதை விட்டுவிடப்போமா மேலே ஆகிறவன் முதற்படியிலிருந் தேறுவதா அல்லது மூன்று படியைத்தாண்டி நான்காம்படியிற் காலூன்றி யேறுவதா சொல்லும் தராசின்முட்போன்ற மனதையுடையவர்களானாலும் பாபத்திற்குப் பயமும் தயாரசமும் தண்ணளியும் தலைமையும் தன்னுயிர்போல் சராசரவுயிரும் சமமென் றுன்னி யிருக்குந் தவத்தினையுடையவர்களுக்கும் இந்த ஆச்சிரமமும் மூன்றைத்தள்ளி வேறில்லை இம்மூன்றிலேயே பழகிவரும் போது சகலமும் நாசமாகிய சன்னாசமிருக்கிறது என்று இயம்பிய பிதாவுக்கு பிள்ளை சொல்லுகிறார்.

ஐயா நீர் சொன்னதென்ன இந்த பிரபஞ்சவாழ்க்கைப் போகங்களை விரும்பிய ஆக்கையோர்க்கு நீர் போதிக்கவேண்டியது இதுதான் என்னைக் கூடச் சேர்த்துக்கொண்டு சொல்லவேண்டாம் நானிந்தப் பூவாசை பொன்னாசை பெண்ணாசையை விரும்பினவனல்ல நீர் இதை மறந்துபோம் இந்தப் பிரபஞ்சமானது நல்வினை தீவினைகளின் போகமாய் மருவியிருப்பது நல்வினையாவது தானம் தருமம் பிறருபகாரம் பரோபகாரம் இன்னம் பற்பல சற்காரியங்க ளுண்டாயிருக்கின்றது. (தீவினையாவது) பொய் கொலை களவு கள் காமம் இவைகள்மயமாயிருப்பது. இதுதா னிருவினை. இவைகளின் நல்வினையைச் செய்தவன் இங்கும் அங்கும் வீடு வாசல் மண் மனை பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தம் பாக்கியம் யோக்கியம் சத்தியவாக்கியங்களினாற் சிலாக்கியம் விமானம் தேவசமானம் வெகுமானம் சுகுமானம் விதானம் நிதானத்துடன் உலகாதிபனாகிய மலையோடிருப்பான்.

இந்த வாழ்வினால் அதிசயமென்ன இவன் பெறப்போகிற லாபமென்ன தீவினையைச் செய்தவன் பாபியாய் தரித்திரனாய் நோய்பிடித்து உண்ணல் உடுக்கல் படுக்கை கொடுக்கையற்று வீடுவாசலில்லாமல் கைகால் குறைந்து கவலைமே

விடுவான் அதனாற்குறைவென்ன செல்வத்தினாற் சுகமென்ன
கண்டது எது மகிழ்ந்தது இல்லாமையால் எது துக்கப்பட்
டது எது துயரங்கொண்டது எண்ணிப்பார்க்குமிடத்தில்
இதுவும் பாவமே அதுவும் பாவமே ஒருமரம் இரண்டுபாளை
ஒன்று நன்கு ஒன்று கள்ளு அறிவாளிகளுக்கு சம்பந்தவி
சேடத்தால் இரண்டுமொன்று அறிவில்லாதபேர்களுக்கு அ
துவேறு இதுவேறுதான் சுகத்தினால் நன்மையும் அசுகத்தி
னால் தீமையுமில்லை இவனுடைய பேதமனதானது பிரமா
தத்திற் கொண்டுபோய்விட்டது நினைப்பினால் நெடுந்தூரம்
போன இவன் திரும்பிவந்து எப்படி தேறுவானென்
றால் சாஸ்திரக்கியானத்தைச்சார்ந்து சாதுசங்கமப் பழக்கத்
தினாலேகர்ந்து சங்கதி யின்னதெனத் தேர்ந்து அனுபவத்
தாலறிந்த அறிவாளிகளுக்கு சுகதுக்கமான வினை யிரண்டும்
விலக்குதான் பிறவிக்கிடமே ஐயோ ஆஹா ஆத்மா கடைத்
தேறப்போகிறவழி யீதல்லவே பல்லக்கு குதிரைபண்டிக
ளில் பவனிவந்தாலென்ன பாரெல்லாந்திரிந்து நடந்துவந்தா
லென்ன இருவருக்கும் துன்பயின்பமொன்றே ஒருபிள்ளை
இன்பப்படுகிறான் இந்த இரண்டு பிள்ளைகளையுந் தாய்தகப்
பன் பார்த்து சந்தோஷப்படுவார்களா இல்லையா சர்வாத்மா
வாகிய ஈஸ்வரன் எல்லாரிடத்திலுமிருந்து பார்ப்பது நிஜமா
அபத்தமா நிஜமானால் பிள்ளைகளிற் பேதம் வரவேண்டிய
தென்ன பெற்றவர்களுக்குப் பிள்ளைகளொன்றே சகலாத்ம
கோடிகளுந் தன்னை நினைத்துப் புசிக்கும்படி ஏற்படுத்தியிரு
க்கிறார் அந்தப் புசிப்பு எப்படியும் இவனுக்குக் கிடைக்கக்
காத்திருக்கின்றது பிறத்தல் இறத்தல் அனுபவித்தல் ஆனந்
தப்படுதல் எல்லாம் இருவினையாளராகிய இருவருக்குஞ் சரி
யே இப்படிக்கிருக்க ஈஸ்வரத்தியானம்பண்ணி விதிமையனு
சரித்து நடவாமல் வெகுபேர் கெட்டுப்போகின்றார்கள்
மனோநிச்சயமில்லாமல் வருவித்துக்கொண்டு வாடுகிறார்கள்
விருதாவாய் வாழ்வென்றும் தாழ்வென்றும் பிராந்திபூ
கொண்டு மயங்கி வீழ்கிறார்கள் பிராந்தி மயக்கந்தீர்ந்தால்

மாறிப்போமல்லவோ நிதானமுண்டாகுமே நாம் இன்னான் நமக்கு வீடு இன்னயிடத்தில் நாம் இன்னத்தினால் முழுகிப் போயிருந்தோம் நம்மை இன்னான் கைகொடுத்து அழைத்துவந்து நல்லவிடஞ் சேர்த்தான் இனிமேல் வீட்டுக்குப்போகலாம் இல்லை ஒருவருந் துணையில்லைவிட்டாலும் ஒருபக்கத்தில் வீழ்ந்துகிடந்தால் சிலநேரத்தில் தெளிந்துபோம் இதுபோல் மோனமாய் ஒருமூலையில் விழுந்துகிடந்தாலும் கொண்ட பிராந்தி மயக்கம் விண்டுபோய்விடும் அல்லது அகன்றுபோய்விடும் கடையில் பசிக்கு ஆன்மா உடலுடன் காணப்போகிறது உணவு மற்ற தென்னவிருந்தாலும் பயனில்லையென்று ஞானருக்குமமறிந்து ஈஸ்வரபத்திபண்ணி எந்தவேளையிலுஞ் சிந்தைதெளிந்து களிம்புமாற்றிக் கண்டுணராமல் என் வீணிற் கெட்டுப்போகின்றார் நல்வினை தீவினை சம்பந்தமான விலங்காத விலங்கானது பிறப்பு மாறாமல் வந்துக்கொண்டிருக்கும் இந்த இருவினைகளில் நல்வினை நல்லதென்றும் தீவினை தீயதென்றும் மகிழுவார்கள்.

இவ்விரண்டுவினைக்கும் வித்தியாச மென்னவென்றால் இரண்டு விலங்குதான் விலங்கானாலும் நல்வினை செம்பொன் விலங்கு, தீவினை கரும்பொன்விலங்கு இவ்வளவு தாரதன்மமுடையது இதனுடைய தன்மையறியாமல் உயிர்க்கலங்கள் நல்வினை வேறுவென்று மயங்கி முயங்கி தானதருமம்பண்ணினால் சுகம்பெறலாமென்ன சஞ்சலப்பட்டு அலைகின்றார்கள் ஆனால் கீர்த்தியுண்டு பெருமைபெறலாகும் அப்பவும் புத்ரேஷணையும் தாரேஷணையும் உடலுக்கல்லது உயிருக்கொன்றுமில்லை இப்படிப்பட்ட பெருமையும் புண்ணியமும் வாழ்வும் மென்பாடும் எனக்கு வேண்டாம் சிக்கனத்தில் ஜனனமரண வேதனை யொழிந்து மோட்சமடையவேண்டும் இதற்கு வேண்டிய முத்திசொருபலட்சணமெல்லா மொழிந்து எனக்கு மோசகங் கிடைக்கும் ஆக்கத்தைத் தேகம் ஐயாவென்று சுகப்பிரம்மம் சொல்ல வேதவியாசர் ஓ மெய்யனே ஒரு திருஷ்டாந்தஞ் சொல்லுகின்றேன் கேள்.

சுகருக்கு வியாசர் சொல்லுகின்ற கதை.

விதேகதேசத்திற் கலந்த மிதிலாபுரியில் ஜனகமகாரா
ஜன் துறைத்தனம்பண்ணிக்கொண்டு புத்திர பத்தினி மித்திர
பந்தம் பற்றியதைப்போ லிருந்து பிள்ளைப்பூச்சிபோலும்
புளியம்பழத் தோடுபோலும் பொருந்திய மாயையாகிய மர
த்தை வேர்களைந்து வெட்டி அது மறுபடியும் கிளைத்து எட்
டிப்பாராம லழியும்படியாக விரதாக்கினி கொளுத்தி அவ
னே சிவன்முத்தன் அவனே பிரமசொரூபன் உலகத்தோ
டொத்து வாழ்பவர்களி லொருவன் கலைமுற்றுங் கற்று கற்
றோரோ டிணங்கிக் கல்லாருடன் கலந்து நாலுபேர் நடக்கிற
மார்க்கத்தின்படிக் குட்படாமல் நீறுமூடிய நெருப்புப்போ
லிருப்பவன் அவருக்கொப்பானவர்களில்லை.

அப்பேர்ப்பட்ட பக்குவனாகி யடங்கியிருப்பவனிடத்தி
ற்கு நீ போவையாகில் உன் மனதிலிருக்கிற சங்கேதங்களை
யெல்லா மாற்றிவைப்பார் நீ அவரை நாடிப்போகிறபோது
பிரபஞ்சத்திற்கு வேறுபாடாய்ப் போகாமல் ஞானத்தை
யொளித்து லோகத்தை யனுசரித்து உலகிலுள்ள சாதாரண
மான ஒருவனைப்போல் போய்ப் பாரென்று வியாசர் உரை
த்தார். விஞ்ஞான வீறுபெற்ற சுகயோகியும் தன் பிதாவைப்
பணிந்து விடைபெற்றுக்கொண்டு சென்று தேவதைகள்
கொண்டாடப்பட்ட பரதகண்டத்திற் புகுந்து வானமளா
விய மலைகளும் காசினிநிறைந்தகாடுகளும் தண்ணீர்வறண்ட
சவுட்டுப்பூமியான பாலைநிலங்களும் முல்லை முதலிய மேடும்
பள்ளமுங் கடந்து தாமரைமலர்களானது ஸ்திரீகளுடைய
முகங்களுக் கீடுபடாமல் வெட்கி தண்ணீரில் ஒற்றைக்காலில்
நின்று தவமிழைக்கின்ற கோலமும் தேன்பெருகி அருகிலி
ருக்கும் ஆறுகளிலோடி மருதநிலத்தை வளர்க்கும்படியா
கிய வளமும் மண்ணாரம்பைகள் விண்ணரம்பையிடத்தில்
மருவியாடும் வண்மையும் மந்திகள் வீழ்ந்தபலாப்பழத்தை
மகிழ்ந்துண்ணுந் தன்மையுமுடைய விதேகநாட்டின் எல்லை

யளவைக் கண்டு மகிழ்ந்து சென்று மிதிலாபுரியைச் சார்ந்தபோது பரதநாட்டியங்களும் சுக்கியானங்களும் தாளங்களும் கிணங்கிய மேளங்களும் வீணை வேணு தம்பர் முதலாகிய கருவிகளைக்கொண்டு சங்கீதம்பாடுகின்ற சரசமாதர்களும் சகோரயாழ் மகதியாழ் பெரியாழ் செங்கோட்டியாழ் வாசிக்கின்ற புருடருடன் சரசசல்லாப உல்லாசங்களை யனுபவித்திருக்கிற ஸ்திரீகளும் நாயகனுடன் கலந்து பாடுகிறவர்களும் கலவியிற் புலந்து ஊடுகிறவர்களும் ஊடல்தவிர்ந்து கூடுகிறவர்களும் கொஞ்சுகிறவர்களும் மன்மதன்கணையால் வாடி இருவருயிரும் ஒன்று யிணைந்தபேரும் இத்தன்மையான வளங்கள் பலவாயிருக்கிற சின்னங்களைக் கண்டுங் காணாதவர்போல் தலைகுனிந்து சம்பரங்களைக் கேட்டு மாடமாளிகை கூடகோபுர மருவியது தெருவீதி கடந்து மிதிலைக்குட் பிரவேசித்து அங்கே வாழை கமுகு கரும்பு இளநீர் பலா மா தாழை மகரதோரணம் கொடி மேல்விதானம் இவைகளெல்லாம் அலங்கரித்திருக்கின்ற வீதிகளின் விநோதங்களையும் பொற்குடங்களால் பூரணகும்பம் இழைத்திருக்கின்ற மேடை வேதிகைகளின் சம்பிரமங்களையும் யானை குதிரை தேர் பதாதி முதலியவைக ணெருங்கிய பெருக்கமும் நவரத்தினங்களாற்செய்த குன்றுகளும் சிங்காரமண்டபங்களும் வசந்தமண்டபங்களும் ஆயிரக்காலுகந்த மண்டபங்களும் கமடை காடை கோழி கவுதாரி கடா முதலியவைகள் சண்டைபோட விட்டிருக்கிற கூத்தடியும் அன்னம் மயில் கிள்ளை குயில் நாரை மான்குட்டி மாடப்புறா முதலிய பட்சிகளைக்கொண்டும் இராஜஸ்திரீகள் முதலாகிய மற்றப்பெயர்களும் விளையாடுகின்ற அம்மனை கழங்கு பந்து முதலிய ஆரவாரமும் இன்னமுள்ள சம்பிரமங்க ளெல்லாவற்றையுங் கண்டு களித்து சித்திர விசித்திரமுள்ள இராஜ சிங்காசனக் கொலுக்கூடத்திற்கு வந்தார் அவ்விடத்திற் காவலாயிருந்த துவாரபாலகர் கண்டு ஆரையா போகிறது நில்லுமென் றதட்டினார்கள் அதைக்கேட்ட சுகரானவர் சந்தோஷத்தினால்

வாழ்த்தினாலும் தீவினைவசத்தாற் றிட்டினாலும் சமமாயனுபவிக்கப்பட்ட சாது அவ்விடத்திலேயே அசையாமல் நின்றுவிட்டார்.

உடனே துவாரபாலகர் போய் ஐயா யாரோ ஒருவர் வந்திருக்கிறாரென்று ஜனகராஜனுக்குத் தெரிவித்தார்கள் அப்படியா மகானுபாவராகிய சுகப்பிர்மமே வந்தாரென்று அறிந்துக்கொண்டு இன்று நமக்கு நல்லகாலமென்று கண்ணீருகித்துக் களித்து பக்கத்திலிருக்கப்பட்ட மந்திரிகள் சாஸ்திரிகளுடனே யெழுந்து எதிர்சென்று கண்டு பிரதட்சணநமஸ்காரம்பண்ணி மிகுந்த தேவதாவுபசாரத்துடன் அழைத்துவந்து ஆசனத்தி லிருக்கச்செய்து அர்க்கியபாத்தியம் ஆசமன்னியம் பாதோதகம் விஸ்திராலிங்கிதம் புட்பம் அட்சதை தூபம் தீபம் நைவேத்தியம் சோடசபூசைகளும் நடத்தி சுவாமி தேவரீர் இங்கெழுந்தருளியகாரணமியாதோ தெரிவிக்க விரும்புகிறேனென்று தெண்டனிட்டான் சுகர் சொல்லுகின்றார் என் தந்தை வேதவியாசர் உம்மிடத்திற்கு போகச்சொன்னார் என்னத்திற்காகவென்றால் இறப்புப்பிறப்புமில்லாத பேரானந்தஞானம் உம்மாலறிந்துகொள்ளுவதற்காகவென்று தெரிவிக்கவும் அந்த வார்த்தையைக் கேட்ட ஜனகன் பயந்து மகாரிஷிகளுக்கெல்லாம் மாயையின் லட்சணத்தை வகுத்துச் சொல்லி மாயை கடந்து அப்பாற் கரையேறுமார்க்கமுங் காட்டாநின்ற மகானுபாவர் தூய்மைக்குத் தூய்மையானவர் வேதவித்தாகவிளங்கிய வியாசப்பிர்மம் அவர் அறியாததும் ஒன்றிருக்கிறதோ.

ஆ என்னிடத்திற் கிருபைவைத்து மாயையின் புணர்ப்பையும் மறப்பையும் ஜனனமரணமற்ற திரஞானத்தையும் போதித்து ஆத்மதரிசனமாகும்படி செய்தருளி தன்னியனுக்கிவைத்த சர்வலோகநாயகன் தம்மிடமாகத் தெரிந்துக்கொண்டதை மறந்துவிடப்போகிறேனென்று பழம்பாடம்பார்க்கிறப்போல் தூண்டினாரோ ஐயோ பொய்யாகிய உலகமெ

ன்று உமது தந்தையினிடத்து மெய்யாகிய ரகசியம் படித்துக்கொண்டு கிர்தார்த்தனானேன் அவர் எனக்கு உபதேசம் பண்ணியிருக்கிறபடிக்கு தலையான ஞானமார்க்கத்தை உமக்குச் சாற்றுகிறேன் அதனுட்டிய கிரமங்களெல்லாம் கேட்டருளும் கர்த்தனுடைய காதலனே பிராமணாள் ஆச்சிரமம் நான்கையும் அநுசரிக்கவேண்டும் அதில் முதலாவதாச்சிரமம் வேதாத்தியயனம்பண்ணப்பட்ட உபாத்தியாயனை வணங்கி சிஷ்யபணிவிடைபுரிந்து வழிபட்டு சாங்கோபசாங்கமாய் வேதம் படித்துக்கொள்ளவேண்டும் பிராமணர் வீட்டுகளில் பிட்சைவாங்கி சாப்பிடவேணும்.

எண்ணெய்தேய்த்துக்கொண்டு முழுகப்படாது தரையிலே படுக்கவேணும் சந்தனதிவாசனைத்திரவியம் தாம்பூலமாகாது கோவணவுடை கூடாது ஈஸ்வரத்தியானம் என்னேரமிருக்கவேணும் இரண்டாவதாச்சிரமம் நற்குண நற்செய்கையையுடைய பொற்குடிப்பிறப்பாகிய பெண்ணை விவாகம்பண்ணிக்கொண்டு அவளுடன் மருவிச் சகல தருமங்களையுந் தாட்சியில்லாமற்செய்து பெரியவர்களுக்கு தொண்டுபுரிந்து புத்திரப்பேருற்று வருந்தி விருந்தினைப் பரிந்து உபசரித்து விரதபின்னம் வாராமல் அன்னமருந்தி சத்தியதருமம் நித்தியமென் றிருக்கத்தக்கது. மூன்றாவதாச்சிரமம் சந்ததியை இல்லறவாழ்க்கையில் யிருத்தி பந்தபாசங்களைச் சிந்தி நாட்டை யொருவி காட்டில் மருவி நாட்டம் பிரியாமலிருந்து தபசுபுரிந்து தியானஞ் செலுத்துதலாகும் இந்த வானப்பிரஸ்தத்தில் மருவியிருந்து இதனுடைய மார்க்கமறிந்து மனந்துறந்து நான்காவது ஆச்சிரமமாகிய படிமேலேறி மோட்சம் முடிபெறுவார்கள் இப்படி வரன்முறைதப்பாமலநுசரித்து ஒவ்வொன்றின் பலனையு முணர்ந்து ஞானம்பிறக்கவேணும் இஞ்ஞான விஞ்ஞானம் அஞ்ஞானத்தை அடிக்கடுக்கா யறுத்துப் படியேறினவர்கள் பாக்கியவான்களென்று ஜனகர் சொல்ல அதைச் சுகப்பிரம்மம் கேட்டு நிக்கடைக்கோலில் தேகம் தேகியாயிருந்த தீப்போன்ற சுகயோகி

இராஜனைக்குறித்து ஓ ஜனகனே வேதப்பிரகாரம் ஒவ்வொரு ஆச்சிரமத்துறையும் அனுசரித்து அந்தந்த வித்தியாசங்களைக் கண்டு வெறுப்படைந்து யதியாச்சிரமஞ்சேர்ந்து அதனால்தான் ஞானம் வரவேண்டுமோ ஒருவேளை நல்ல புண்ணியவசத்தால் முதலாச்சிரமத்திலே ஞானம் வந்துவிட்டால் அது பிரயோசனப்படாதோ வாராதென்கிறவழக்குண்டோ நல்லது நல்வினைப்பயனாற் கிடைத்ததானால் மற்ற மூன்றாச்சிரமத்தையும் அனுசரிக்கவேண்டிய முறையில்லையே.

இதனுடைய திறத்தைச் செப்பும் ஐயாவென்று சுகர் கேட்க ஜனகவரோதயன் சுவாமி தேவரீர் திருவாய்மலர்ந்தபடியே ஆச்சிரமதருமங்களை அனுசரித்துத் தேறாமல் பிறவிஞானம் பெற்றிருக்கப்பட்ட பெரியோர்களுமுண்டு அவ்வாறு சேரிட்டிருந்தபோதிலும் வேதத்தில் விதித்தவண்ணம் ஆச்சிரம நான்கையும் கைவிடாம லனுசரிப்பார்கள் ஞானம் வந்தவர்கள் நான்காச்சிரமத்தையுந் தழுவவேண்டியதென்னவெனில் தாங்கள் படியேறிவிட்டோமென்றும் பற்றில்லாத ஞானவான்களென்றும் அலட்சியமாய் விட்டுவிட்டால் அகப்பற்று புறப்பற்றையுடைய அக்கியானிகள் தவத்தை விரதத்தை அனுஷ்டிக்கமாட்டாத சோம்பேறிகள் பெரியோர்களெல்லாம் இந்த ஆச்சிரமத்திற் பிரயோசனமில்லையென்று விட்டுவிட்டார்களே பலனிருந்தால் விடுவார்களோ இல்லைவில்லை நாமேன் அந்த நான்காச்சிரமத்தையுங் கட்டிக்கொண்டழுவேண்டுமென்று விட்டுவிட்டு சீக்கிரம் கெட்டுப்போவார்கள்.

சர்வேஸ்வரன் சகல ஆத்மகோடிகளும் கடைத்தேறவேண்டுமென்று மோட்ச வீட்டுக்கு ஏறிப்போகின்றபடிபோல் சரியை கிரியை யோகம் ஞானம் இதற்கு முறையே பிரமச்சாரி கிரகஸ்தன் வானப்பிரஸ்தன் சகலமூ நாஸன் என்று சோபானக்கிரமமாய் ஏற்படுத்திவைத்திருக்கின்றார் ஆகையால் பிறவிஞானம் பெற்றவர்களும் அனுசரித்துத்தீர

வேணும் அப்படிக் கனுசரியாமல் விடும் பெரியோரால் உலகங் கெடும் அதனாற் பாவம் படும் ஆசைவிட்ட பெரியோரையுந் தொட்டுக்கொண்டாடும் ஈஸ்வரனுக்கும் அபராதியானவன் ஞானமுதல்வர்களுக்கு அக்கரையில்லாமற்போனாலும் உலகத்தாருக்காக தானடைந்துகாட்டி சிஷ்டாச்சாரத்தன்மையாய்ச் செய்விக்கவேண்டும் அதைக்கண்ட பூலோகத்தார் ஓ பெரியோர்களெல்லாம் அனுஷ்டிக்கிறார்களேயென்று பேய்போல விழுந்து பிடிவாதத்தினாற் றேறுவார்கள் சகலமுந் தெரிந்த தானாவே உமக்கு நான் சொல்லவேண்டியதென்ன வேதத்திற்குரிய தேவரீரோ வேதவிதிநிலை யிகழாமல் மூன்றாச்சிரமத்தை யனுசரித்து படிப்படியாயேறி நான்காவது ஆச்சிரமம் நன்னெறிநிலையிலிருப்பதே உத்தமமென்று ஜனகர் நவில சுகயோகி சொல்லுகின்றார் தலைமைஞானம் பெற்ற தபோதனர்கள் இவ்வுலகத்திலிருக்குங்காலத்தில் தங்களுடலை என்னமாய் வைத்துக்கொண்டிருப்பார்கள்.

அந்த முறைமையை எனக் கறையவேண்டுமென்ன அறுபகைகளையுங் களைத்த இறையாகிய ஜனகர் இசைக்கின்றார். உண்மைஞானமுணர்ந்த உத்தமர்கள் எந்த ஆச்சிரமத்திலிருந்தாலும் ஒரு உயிரைக் கொல்லார்கள் இடையூறு செய்யார்கள் குற்றங்களைத் தேடார்கள் குறை யெவருக்கும் புரியார்கள் கர்மிகளைப்போல பந்தங்களிற் பட்டுழலார்கள் பற்றுவைக்கார்கள் மனமும் வாக்கும் வேறுபடார்கள் உள்ளும் புறம்பும் ஒத்திருப்பார்கள் எல்லா உயிரிடத்திலும் பிரியங்கொண்டு ஒரு பதார்த்தத்தின்பேரில் விருப்பும் மற்றொரு பதார்த்தத்தின்பேரில் வெறுப்பும் வைக்கமாட்டார்கள் உபகாரம் பண்ணினவர்களென்று பட்சமும் அபகாரஞ்செய்தவர்களென்று அபட்சமும் நினையார்கள் ஒருவர்மேற் கோபமும் இன்னொருவர்மேற் சந்தோஷமுங் காட்டார்கள் ஒருவேளை நினைப்பும் பின்னொருவேளை மறப்புமாயிரார்கள் என்றைக்கும் ஒரேநினைப்பும் ஒரேசீருமா யுறுவார்கள்.

இறப்பும் பிறப்புமென்கிற அறியாமையை யகற்றி நன்னடக்கையுடையவர்களை மெய்ஞ்ஞானிகளென் றறிந்து விளம்புவது இன்னஞ் சொல்லுகிறேன் இரும்பு வேறு பொன் வேறென்று மெண்ணார்கள் கரும்பும் வேம்பும் சமமாய்க் கொள்வார்கள் மகமேருவையும் சிறிய துரும்பையும் சரியென்று மதிப்பார்கள் அதிதீவிரபக்குவமாய் நிர்மலசுத்தபரிபாகமாய் அரும்பாய் மொக்காய் மலராயிருக்கப்பட்ட மோட்சவீட்டைக் கண்டு அதனது முடிவைத் தெரிந்த பெரியோர்கள் இதுவுமல்லாமல் ஒருவர் திட்டினாலும் தோத்திரம்பண்ணினாலும் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும் அடித்தாலும் இடித்தாலும் சீறினாலும் தூறினாலும் உடலுக்கேயல்லது உயிருக்கு ஒன்றுமில்லையென்று கோபங்கொள்ளாதிருப்பார்கள் லௌகிகத்தி லழுந்தி மயங்கார்கள் தவப்பிரமானந்தத்திற் றங்கியிருப்பார்கள் இப்பேர்ப்பட்ட நல்ல ஆத்மாக்கள் முன் சொல்லிய நான்காச்சிரமத்தை நண்ணியிருந்தாலும் நாடாதிருந்தாலும் அதனால் அவர்களுக்கு யாதொரு குற்றமுமில்லை அவர்க ளிச்சாசுதந்தராள் ஓ சுகப்பிரம்மமே இதுதான் ஞானவரம்பு இதற்காதாரம் மௌனவரம்பு ஞானவான்கள் தேகத்தை எப்படி வைத்திருப்பார்களென்று நீர் கேட்டபடியால் இப்போ துரைத்த இயற்கையின்படியே தேகாபிமானஞ் சிதைத்து உடற்சார்பில்லாமல் தேகம் பிராரத்துவகர்ம போகத்தைப் புசிப்பதற் கெடுத்ததென்று பூர்த்தியாய்த் தெரிந்துக்கொண்டு உடலுக்கு நலம் இளப்பம் என்னவந்தாலும் தன் அபிமானமென் றில்லாமல் புளியும் ஓடும்போல் ஒட்டாமல் நின்று எல்லாவற்றிற்கும் உடலென்று காட்டி உண்மைஞானத்தால் நீயாரோ நானாரோவென்று விட்டு மீந்திருப்பார்கள்.

இனிமேல் உன் றந்தையாகிய வியாசரிடத்திற்குச் சென்று தன்னைத்தா னறியுந்தன்மையை விசாரித்து சம்பந்தமில்லாமல் தனியேயிருப்பது தகுதியென்று ஜனகமகாராஜன் சொல்லி சரணம்புகுந்தபோது பிரம்மரூட தீபமாகிய சுக

யோகியானவர் கிர்பாஜேக்கமாக ஆசீர்வதித்து ஆசாரியப த்தி செலுத்தி செலவுவாங்கிக்கொண்டு வேதவியாசரிடத்தி ற்கு வந்து பணிந்து ஜனகரிடத்திற்போய்க் கண்டதுமுதல் இப்போ திவ்விடத்தில் நின்றதுவரைக்கும் நடந்த விர்த்தாந் தங்களைச் சொல்லி தான் கேள்விப்பட்டுவந்த ஞானசாஸ்தி ரத்தினைத்தைச் சொற்ற சுகயோகியை குளிர்ந்தமுகமாய்க் காருண்யப்பார்வையுடன் கடாட்சித்து அப்பா ஞானசாஸ் திரங்களெல்லாம் நன்று யறிந்துக்கொண்டாய் நீ இங்கேதா னே யிருவென்று சொல்லவும் அவ்வாறே தகப்பனுடைய சிடர்களாகிய சுமந்தர் பயிலவர் வைசம்பாயனர் இம்மூவரு டனிருந்து செயல்வேறு சிந்தனைவேறில்லாமல் வேதமோதி க்கொண்டிருந்தார் இப்படி யிருக்கிறநாளையில் அருமையான வேதசாஸ்திரபுராணங்களையெல்லாம் ஐயமறப் படித்திருக்கி ன்ற சிடர் மூன்றுபேரும் ஆசாரியருக்குப் பிரதட்சணம்ப ண்ணி நமஸ்கரித்து சிரத்திற் கரத்தைக் குவித்து சுவாமி தேவரீரிடத்திற் கற்றுக்கொண்ட வேதமுதலியவற்றை தங்க ளுடைய போதனைசத்திப்பிரகாரம் பூலோகத்தி லிருக்கின்ற பேர்களுக்கெல்லாஞ் சொல்லிவைத்தால் லோகோபகாரமா யிருக்கும் தங்களுக்கும் பிரதிஷ்டையுண்டாம் ஆதலால் அ னுக்ரகம்பண்ணவேணும் ஐயாவென்று வணங்கிக் கூறவும் மலரகிதமான வேதவியாசர் நகைத்து உலகத்திலுள்ள யாவ ருங் கடைத்தேறும்படியாக மெத்தவும் நல்லவார்த்தையைச் சொன்னீர்கள் இது முக்கியஞ் செய்யவேண்டிய காரியந் தான் மேலும் நல்ல நூல்களைக் கற்றவன் தன்னைப்போல் பல்லோரும் நல்லவராகப் போதித்துவைக்கவேணும் அப்ப டிக்குச் சொல்லிவைக்காதபேர் படியாத மூடரிடத்திற் பய ன்பட்டு அவர்கள் செய்த தவங்கெட்டு குறுகிக் குன்றுவார் களென் றிருக்கின்றதை நீங்கள் ஒதியுணர்ந்திலீரோ அதற் கொரு திருஷ்டாந்தம் பாருங்கள் பஞ்சப்பிரணவமந்திரமா கிய மௌனத்திலிருக்கின்ற ரிஷிகள் மோட்சமடையும்போ து தன்னைச் சூழ்ந்த சகலரும் கதிபெறவேணுமென்று உப

தேசித்துப்போகிறார்கள் மறுவற்ற ஞானவிர்தயர்களாகை
யால் தன்னைப்போல மற்றையவரையும் பார்க்கிறார்கள் நீங்க
ளும் அப்படியே போதித்து உபசரிக்கவேண்டியது முறை
மையேயென்று புகன்ற வேதவியாசரைப் பார்த்து அப்படி
க்குத் தருமமிருந்தாலும் தங்களுடைய பேரருளைப் பெருந்
துணையாகக்கொண்டுபோனால் எங்களுக்குப் பெருமையுண்டு
ஆதலாற் செலவுகொடுக்கவென்று கேட்டார்கள்.

அச்சொல்லின் பொருளை யறிந்த வியாசர் மனமகிழ்
ந்து ஓ அன்பர்களே எல்லா நூல்களையுஞ் சாம்பிரதாயமா
ய்க் கற்று என்னினுஞ் சிறந்த கீர்த்திபெற்றிருந்தும் நாமே
போய் உலகத்திற் சொல்லிவைப்போமென்று வித்தியாகர்
வம் அடையாமல் ஆசாரியருடைய அருளைப்பெற்று அப்
பால் போதிக்கவேணுமென்கிற அன்புடனே பிரிந்தீர்களா
கையால் நீங்கள்தான் எனக்கு வந்த பிள்ளைகள் இப்பதான்
சந்தோஷப்பட்டேன் என்னிடத்திற் கற்ற நூலும் கேட்ட
கேள்வியுஞ் சிறக்கக்கடவதென்று புகன்று நான்கு பிள்ளைக
ளையும் எடுத்து மார்பிலணைத்து மூத்தமிட்டு சுகனைப்பார்க்கி
லும் அதிகமென்று சொந்த பக்த தொந்தங்காட்டி பூலோ
கத்தில் வேதங்களை விரிக்கும்படிக்கு அனுப்பிவிட்டு அகந்
தையற்றிருக்கும் போகியாகிய தன் குமாரனுடனே பர்ண
சாலையி லிருப்ப தனியென்னும் இசையை யாழிலேற்றி வா
சிக்கப்பட்ட நாரதர் வந்தார் அவரைக் கண்டு பெரியவருக்
குச் செய்யவேண்டுவனவெல்லாம் பிசகாமற்செய்து பூசித்த
வியாசரை நாரதர்நோக்கி சுவாமி வேதவியாசமூர்த்தியே நா
னிந்த வனத்திற்கு வரும்போதெல்லாம் சப்தமே முழக்
கம்போலும் சமுத்திர இரைச்சல்போலும் சற்றேனுமோயா
மல் சர்வதாய் முழங்கிக்கொண்டிருக்கிற வேதகோஷ்டம்
இப்போது தங்க ளாச்சிரமத்தி லில்லாம லிருப்பதற்குக்கார
ணமென்ன வித்திருக்குமிடத்தில் வேறிருக்கவேண்டுமே தே
வாள் வேதவித்தே இது என்ன நிமித்தத்தில் விட்டிருக்கின்
றது வேதவியாசனென்ற சிறந்த பெயரைப் பொருந்திய

வித்தகனே சொல்லுமென்று வினவ வியாசர் சொல்லுகின்னார், கர்மபூமியிலுள்ள பிராமணருக்கு வேதம் ஒதிவைக்கும்படிக்கு என்னிடத்தில் வாசித்த சிஷர்களை அனுப்பிவைத்தேன் இவ்விடத்திற் படிப்பவ ரொருவரு மில்லாமையால் வேதமோதுகிற சந்தடி யற்றிருக்கிறதென்று பராசருடைய குமாரர் வேதவியாசர் பேசி பின்னும் ஒய் பெரியவரே உம்முடைய கடாட்சவீட்சண்ணியத்தினால் என் பிள்ளையாகிய சுகனும் நானும் பூமியெல்லாந் திரிந்து வண்டுபோற்சுழன்று வேதங்களைப் போதிக்கப்போகிறேன் அப்படிக்குப் பிரயாசையெடுத்துக்கொள்ளாவிட்டால் வேதம் பரவுகிறதாயிருக்கவில்லையென்று சொன்னார்.

அந்தப் பேச்சைக் கேட்ட நாரதர் அப்பிரகாரஞ் சொல்லிப் போதித்துத் திரியவேண்டியது முறைமைதானென்று செலவுபெற்றுக்கொண்டு போய்விட்டார் இப்பால் வியாசர் சுகயோகியுடன் கடல்சூழ்ந்த காசினியை வலமாகத் திரிந்து பிள்ளைக்கும் பூமியிலுள்ள பிள்ளைகட்கும் போதித்து பிள்ளை ஆகாயமார்க்கத்திலும் தான் பூமியிலும் வேதாத்தியயனம் பண்ணிவைத்து சாங்கமாய் நான்குவேதமும் சுகயோகிக்கு வரும்படியாகப்பண்ணி வேதாந்தரகசியமும் விளம்பியருளினார் பிற்பாடு ஆகாயகங்கையில் ஸ்நானமாடவேணுமென்று பிள்ளையை ஒருபக்கத்தில் நிற்கவைத்து ஸ்நானஞ்செய்யப் போனார் இப்பால் சுகப்பிரம்மம் ஒரு சுசியாகிய பூமியிலிருந்து வேதபாராயணம் பண்ணும்போது சிவந்த சடாமகுடதாரியாகிய நாரதர் வந்து சுகனைப்பார்த்து அப்பா நீ பூரண சப்தமாய் தொனியாய் நாதமயமாய் ஒதலவிதமாய் வேதமோதுவதைக்கேட்டு உன்னைப் பார்க்கவந்தேன் மெத்தவுஞ் சந்தோஷமடைந்தேன் ஆனந்தமாச்சுது உனக்கு வேண்டிய காரியத்தை விரும்பிக் கேட்டால் நான் கொடுக்கிறேனென்னார் சுவாமி எனக்கு வேறொன்றும்வேண்டாம் என்னை இன்னானென்றறிந்து அப்பால் என்னையென்பதும் அறிந்தவனே

ன்பதும் அறியத்தக்கதென்பதும் அற்று சகமுற்றிருக்கும்படிக்கு வரங்கொடுக்கவேண்டுமென்று வாழ்த்தினான் அதைக் கேட்ட நாரதர் இவருக்குப் போதிக்கவேண்டுமென்று தன் மனதில் நினைத்து பருவகாலம்பார்த்திருந்த பொருளைக்குறித்துக் கேட்டபடியால் இப்பொருளுக் குரியவன் இவனே யென்று வேதமுடிவின் சாரத்தை விளம்பத்தொடங்கினார்.

நாரதர் சுகருக்குபதேசம்.

வேதாந்தசாரமறிவதற்கு மிகு மோகியாகிய சுகயோகியே கேளும் வர்ணாச்சிரமம் நான்கு அவையாதெனில் பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்பது இந்நான்கினுடைய பேதமாவது அஞ்ஞானப்போர்வையல்லது வேறில்லை உயர்ந்த ஜாதி யிதுவென்றும் அதுவே முக்கியமென்றும் தாழ்ந்தஜாதி யிதுவென்றும் இதுவே தாழ்மையென்றுமில்லை அஞ்ஞானமகன்ற விஞ்ஞானம் எந்தவிடத்தில் விளங்குகிறதோ அதுவே பிரதானம் தர்மத்தினாற் ஜாதியல்லது ஜன்மத்தினாற் ஜாதியில்லை ஜாதியென்பது பிறப்பு உயர்வு தாழ்வு பேசுவதெல்லாம் அஞ்ஞானம் பிரபஞ்சமயக்கம் பிரபஞ்சமாவது இல்வாழ்வோன் இவன் நாட்டில் கிரகத்தாச்சிரமங் கட்டிக்கொண்டிருப்பவன் இது இரண்டுகாலுக்கும் போட்டுக்கொண்ட விலங்கு பிள்ளை குட்டி யென்னும் கடையாணியினா லிறுக்கித் தறிக்கப்பட்டது பிரமச்சாரியாச்சிரமம் வானப்பிரஸ்தாச்சிரமம் இவ்விரண்டும் பெருமையுள்ளதென்று பெரியோர்கள் ஒப்புக்கொள்வது அதிலும் பயனில்லை அப்பால் யதியாச்சிரமம் தயாரசமும் சத்தியமும் இருக்கவேண்டியது இவ்விரண்டில் கடுகத்தனை தப்பிப்போனால் மலையத்தனை நரகம் வந்து முன்னிற்கும் தெரியாமல் தவறினவனுக்கு ஒருபங்கு தண்டனை ஆனபடியால் வண்டியுருளைபோல் கீழது மேலதா

ய்ச் சுழன்றுக்கொண்டிருக்கப்பட்ட ஜனனமரணமானது
தீராது அது என்றைக்குத் தீருமென்றால் நானென்பது நசி
ச்சு தானென்பன தவிர்ந்து ஆணவமல மகன்றுதானால் சரா
சரகோடி சகலாத்மாவும் தானேயல்லது வேறில்லை சமஸ்த
தேகாதிகளெல்லாஞ் சம்பந்தமாயை ஆத்மா பரிசுத்தம் மா
யாமயக்கத்தி லகப்பட்டு மருண்டுகிடக்கிறது மாயைவசத்
தாகிய உடலுக்கும் களங்கரகிதமான உயிருக்கும் சம்பந்த
மில்லையென்றறி இது என்றைக்கு வேறாகக் காண்பானோ அ
ந்தயிடமே மோட்சம் அப்போது நிராமயமும் நிட்களமும்
நிர்விகல்பமும் நிர்க்குணமும் தானேயாவான் அப்படிக்கு
இருளும் வெளிச்சமு மில்லாதயிடத்திலிருந்து பார்க்கையில்
சகலமும் எளிதில் வெளிச்சமாய்த் தோற்றும் அப்படிப்ப
ட்ட ஞானசொரூபியாய்த்தானிருக்க அதை விட்டுவிட்டு மா
யாமயக்கமாகிய உலகத்தைத் தானென்றெடுத்து மேற்போ
ட்டுக்கொண்டு தனக்குரிய ஞானசொரூபத்தை மறந்து எத்
தனைநாள் திரிகின்றானோ அத்தனைநாளும் தன்னைத்தா னறி
கிற தெளிவும் வரமாட்டாது பிரபஞ்சவாஞ்சைமயக்கத்திற்
படியாமல் தற்சுபாவ தற்சொரூபமான சுகயோகியேயென்று
ஞானோபதேசம் பண்ணிவைத்து அநுபோகமுங் காட்டிய
போது சோதிவிளக்கமான சுத்தஞான சமுத்திரத்தில்மூழ்கி
ஜனனக்கடலைத் தாண்டி எங்குந் தானாகிய பிர்மக்ஞானம்வி
ளங்கி பற்றிற்றியுற்ற உத்தமச் சுகயோகியானவர் நற்றவமு
டைய உத்தரதிசைக்குப் போகவேணுமென்று வியாசனைப்
பணிந்து சிலவுகேட்டார் அப்பா மகனே அடா சுகனே
என்னைப் பிரிய மனம் எப்படிக் கிசைந்ததோ பிரியமானவ
னேயென்று பேசியகாலையில் நாரதருணர்த்திய ஞானநிர்க்
கரிஷையை யெடுத்துக்காட்டவும் அதைக்கேட்டு பிர்மித்து
புகழ்ந்து மகிழ்ந்து சுகுணமான பிள்ளை தன்னைவிட் டகன்
றுபோகிறானேயென்கிற கிலேசத்தால் பெருந்துயரப்படுகிற
பிதாவைத் தேற்றி பொருமலை மாற்றி அதிதீவரமாகிய யோ
கப்பரியேறி பூலோகத்தைப் பிரிந்து ஆகாயமார்க்கத்திற்

போம்போது மேலோகவாசிகளாகிய தேவதைகள் கண்டு அனேகங்கோடி சூரியப்பிரகாசம்போல் சுகப்பிரம்மம் இதோபோகிறதென்று பூரித்து ஐயோ இவர் குலம் செய்த நலம் யாதோ வேதவியாசரிழைத்த தவ மெத்தன்மைத்தோ இந்தப் பிள்ளை பிறவிக்ஞானதேஜயமூர்த்தியாய் ஜனித்ததேயென்று யாவருங் கரத்தைச் சிரத்திலேற்றி சிவசிவவென்று தியானித்து தெரிசனங்கண்டு தெளிவுகொண்டிருந்தார்கள்.

சராசரங்களியாவுந் தானாயிருக்கப்பட்ட சுகயோகியும் பிரசண்டமாருதவேகம் பின்னிட்டுப்போகும்படியாய் தான் முன்னிட்டு வடமுகத்தைநாடி வருகிறவேளையில் சகல சராசரங்களையும் பார்த்து உங்களிலே ஒருவன்தானிவனென்றுரைத்து லோகோபகாரத் தந்தையாகிய வேதவியாசர் இந்த வழியேவந்து மைந்தாவென்று இவன் பெயரைச் சொல்லி கூப்பிடுவாராகில் நீங்களியாவரும் ஏன் ஏன் ஏனென்று சொல்லுங்களென்றியம்பி சோதிமயமாய்ச் சொல்லும்போது ஆகாயமளாவிய சிகரங்களையுடைய மலைச்சுனைகளில் தீர்த்தமாடவருகின்ற தேவஸ்திரீகள் வஸ்திரங்களைக் களைந்து வைத்து நிர்வாணமாய் நீராடியகாலையில் அவ்வழியாய்ப் போகிற சுகயோகியைப்பார்த்து நாணம் வெட்கம் அச்சமில்லாமல் தங்களிச்சையின்படிக்கு ஸ்நானம்பண்ணிக்கொண்டிருந்தார்கள் சுகப்பிரம்மம் விகல்பமில்லாமல் பிரமக்ஞானத்துடன் செல்லுகின்ற விசையினால் பர்வதங்கள் மலைகள் விருட்சங்கள் ஆறுகளெல்லாம் அசைந்தும் முறிந்தும் அறுந்தும் ஒடிந்தும் படிந்தும் பொடிப்பொடியாய்ப் போகத்தக்கதாக மகாமேருவுக்கு வடபாரிசத்திற் புகுந்துபோய்விட்டார் இப்பால் இரணியகருப்பனுக்குச் சமானமான வேதவியாசர் ஒப்பில்லாத புத்திரசோபத்தினால் அரணியிலுற்பவித்துப் பிரிந்துபோன மகன் சுகன் போன வழியைத் தொடர்ந்துபோகிறபோது இமையர்நாட்டத்தவர்கள் எல்லோரும் பார்த்து ஐயா உம்முடைய குமாரன் இளஞ்சூரியவிம்பம்

போல் ஆகாயமார்க்கமாய்ப் போனார் அவர் போன வேகத்தில் பர்வதங்களுங் குலுங்கி பட்சி மிருகங்களுங் கலங்கி விருட்சங்களும் விலகிப்போய்விட்டதுகள் இந்நேரம் நெடுந்தூரம்போயிருப்பார் நீர் நடக்கிற நடைக்கும் அவர் சென்ற வேகத்திற்கும் சரிப்படாது நீர் அவரை எந்தநாளிற் காணப்பேர்கிறீர் எதேது கண்டுபிடிக்கமாட்டீர் பூமியி விழுந்துப் போமென் றுரைக்க அவர்கள் சொல்லையுந் தட்டி பிள்ளையைப்பற்றி பெருங்காட்டைச் சுற்றி பெருமூச்சுவிட்டு ஒரு பர்வதத்திற்போ யிறங்கினார் அவ்விடத்தில் உள்ள சுனைநீரில் விளையாடிக்கொண்டிருந்த தேவஸ்திரீக ளியாவரும் வியாசரைக்கண்டு காண்பதற்குமுன்னே வெட்கப்பட்டு வஸ்திரங்களினால் மானத்தை மறைத்துக்கொண்டார்கள்.

அதை வியாசர் கண்டு சற்று நின்று இதற்குமுன் இந்த வழியிற்போன ரிஷியைப் பார்த்தீர்களாவென்றார் ஆமென்றார்கள் அப்போது இப்போதுடுத்திய ஆடையைத் தரித்தீர்களாவென்றார் இல்லையென்றார்கள் முன் சென்றவன் என் மகன் நானவனைத் தேடிவந்தேன் என்பெயர் வியாசன் அவனும் புருஷன் நானும் புருஷன் அப்படிக்கிருக்க அவன் போனபோது அச்சமில்லாமல் ஆடிக்கொண்டிருந்தீர் என்னைக்கண்டு லச்சைப்பட்டு உங்கள் பட்டுவஸ்திரங்களை யெடுத்து உடுத்திக்கொள்ளவேண்டிய பரிசென்ன இந்தப் பேதத்தைப் பகருங்களென்று கேட்கவும் உசித சுசித உத்தமஸ்திரீகள் ஐயா வியாசரே முன்னேபோன முனிவரானவர் சுத்த மாயையற்றவர் சொரூபக்ஞானமுற்றவர் அதனால் எங்கும் அவராயிருப்பாரென் றுணர்ந்து நிர்வாணதிசையில் நின்று ஸ்நானம்பண்ணினோம் மாயப்பிரபஞ்சமயக்கையறாத்த ஞானவானானதால் எங்களுக்கு அவரைப்பற்றி பேசவேண்டிய சம்பந்தமில்லை எங்களுக்கு அவர்புலம்ப அவருக்கு நாங்கள் புலம்ப நீர் அவ்வாறல்ல இப் பிரபஞ்சமாயையில் மூழ்கிய பெருங்கியானி உம்மைப் பார்த்தவுடனே உடலங் கம்பித்து

வெட்கமேவிட்டு புடவையை உடுத்திக்கொண்டோமென்றார்கள் அம்மொழியைக்கேட்டு வேதவியாசருக்குத்தெளிவுபிறந்து நிரம்பிய விசனமாய் நெடுமூச்செரிந்து பிள்ளையை நினைந்து பிரிவாற்றாமையால் பெருங்குரலிட்டு அப்பா மகனே ஐயா மகனேயென்று கூவப்பட்டார் அங்ஙனநிலைத்த மலைகள் மரங்கள் வனம் வனாந்திரங்கள் செடிகள் செட்டுகள்முதலியதும் ஓரறிவுமுதலாகிய ஆறறிவுடன்கூடிய ஆத்மகோடிகளியாவும் அண்டரண்டங்களும் ஏன் ஏனென்று எதிர்மொழியீந்ததுகள் வியாசர் வெருண்டு நமது புத்திரனைக் கூவினால் இந்தப் பூமிமுதல் மகாபூதங்களெல்லாம் ஏனென்று கேட்குது இதை யோசிக்குமிடத்தில் இப்பூமியாவும் பொருளாயும் பரவிய பரப்பிரம்மம் ஒன்று அதை நீ தெரிந்துக்கொள்ளாமல் தகப்பனென்கிற பெருமையும் தனயனென்கிற அருமையும் பாராட்டுகிறாயோ பிள்ளை யார் தந்தை யார் ஆருக்கு யார் தகப்பன் நீவேறு நான்வேறென்பதென்னை ஒன்றுமில்லை நாதம் பிர்மம் ஒன்றென்றே இன்றுமுதலொன்றுங் கண்டுகொள்ளென்று அறிவுறுத்துகிற மொழிகளும் பிறந்ததென்று தெளிந்துத் தெளியா மனத்தினையுடையவராய்ச் செல்வனே சிறுவனே சேயனேயென்று தின்மும் மனமுந் திகிலுமாயிருந்தார்.

இப்படிக்குப் பிரபஞ்ச ஆசாபாச ஆயாசமகற்றி வேதவியாசரும் புத்திரபாசப் பற்றுவிடாமல் தெய்வமே தெய்வமேயென்று தியங்கி மயங்கியநாளில் பிர்மா விஷ்ணு தேவேந்திரன் முப்பத்துமுக்கோடி தேவதைகள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் யட்ச கின்னர கருட காந்திருவர் சவுனகாதி முனீஸ்வரர் சிவகண பூதகண இராட்சதகணங்களுடன் பச்சைக்கொடிபடர்ந்த பார்வதிகலந்த பவளம்போன்ற பரமசிவன் இடபவாகனரூடராய் மான் மழு சதுர்ப்புஜம் காளகண்டம் திரிநேத்திரம் சூல டமரகம் கபாலமுடையவர் ஆலகாலவிஷத்தைப் பட்சித்து அரியபனுதிகளாகிய தேவர்களை

ஆதரித்த தனிமுதலானவர்கள் எல்லாவற்றிற்கும் மூலகாரண முதல்வனானவர் அற்புத வமுதனான ஆதிமூர்த்தி கிர்பாநோக்கமாய் வேதவியாசரிடத்திற்கு வந்து பெருங்காட்சியாய் நின்றபோது வேதவியாசர் எழுந்து அநேகவிதமாக விழுந்து சாமவேதக்கானஞ்சாற்றி பரவசமடைந்து பாயுங் கண்ணீருடன் என்புகளுருகி பட்சமாகக் கூத்தாடி தன்பிள்ளையைப் பிரிந்த வருத்தம் பாசபந்தநெருப்பு இவைகளெல்லாம் பறந்தோடிப்போகும்படியாய் சிறந்த தேவாதிதேவனைப் பணிந்து எழுந்திருந்து கைகட்டி வாய்பொத்தி பத்தியுடன் சித்தியாய்ப் பாடினார் அவ்விடத்திலிருந்த சாம்பவமூர்த்தி வியந்துபுகழ்ந்து சிரக்கம்பஞ்செய்து ஓ பேரறிவுடைய பெரியோனே நீர் பூர்வலோகத்தில் புத்திரன் வேண்டுமென்று நம்மைக்குறித்துத் தபசுபண்ணியபோது உமக்கு வேண்டியதென்னவென்று நாம் வந்து கேட்க பஞ்சபூதத்தையும் ஜயிக்கத்தக்க பாலகன் வேண்டுமென்றீர் நாமும் பட்சமாய் அநுக்கிரகம்பண்ணினோம் அவ்வாறே யிந்தப் புத்திரன் பரமானந்த ஞானத்தைப் பெற்று ஒருவரும் பெறுதற்கரிய புகழைக் கைக்கொண்ட பெரியவராகினார் நீர் பிரபஞ்சமாயையிலழுந்திய அறிவீனனைப்போல் துன்பப்படவேண்டிய துயரமென்ன வேதஞ் சுரக்கிற வாக்கினால் மெய்ஞானசொரூபமெல்லாம் விளம்பிப்போட்டு கான்முளையைக்குறித்துக் கவலைப்படுவது ஞாயமோ இப்பிரபஞ்சத்தில் அதீதமாகிய ஞானத்திலிருக்கிறபேர்கள் சமூகவிசாரத்திலும் தழுவி தாம் கொண்டகருத்திற்கு தவறுதல்வராமல் பிள்ளைப்பூச்சிபோல பூரணகலையுடன் பொருந்தி வாழ்வார்கள்.

அப்படிக்கில்லாமல் பரிபூரணஞானம்பெற்ற பாக்கியனைக் கண்டுபிடிக்கவேண்டுமென்கிற மனவலிமையுடன் அவனைத் தேடிப் புறப்பட்டது உமக்கு முறைமையோ அப்படிக்குப் போனாலும் அவன் உமக்கு அகப்படமாட்டான் ஒருவேளை யகப்பட்டாலும் உன்னுடனே கலந்திருக்க வரமாட்

டான் பூமி கடல் மலை மேகம் சந்திர சூரியர் முதலாகிய பிர்மாண்டமுள்ளவரையிலும் உன்பெயரும் உன் பிள்ளைபெயரும் நிலைநிற்கும்படிக்குக் கீர்த்தி தேடிக்கொண்டு மைந்தனைக்குறித்து மனதினில் சிந்தனைப்படுவதை மறந்துவிடு ஆனால் புத்திரவாஞ்சையால் பிள்ளையைக் காணவேணுமென்று எப்போது நீ அபேட்சிக்கின்றையோ அப்போது உன் பிள்ளையின் சாயை உனக்குத் தோன்றும்படியாய் வரங்கொடுத்தேன் நீர் பூலோகத்திற்குப் போமென்று செலவுகொடுத்து தருமசமுத்திரதாணுவானவர் மறைந்துவிட்டார்.

இப்பால் வியாசர் பரமேஸ்வரருடைய அனுக்கிரகத்தைப்பெற்று தம்முடைய பர்ணசாலைக்கு வந்து மனோநிச்சயம்வைத்து மைந்தன் பிரிவை மறந்து உலகத்தாருக்கு உண்மைக்ஞானத்தைத் தெரிவிக்காமல் ஒரு பரியாரமாய்ச் சொல்லி வேதநான்கையும் விரித்த புராணங்களையுந் தழுவி நடக்கும்படி போதித்து அவ்வாறு நடத்திக்கொண்டுவரும்போது மெய்மைக்ஞானம் விருதாவாய்ப் போய்விடுகிறதேயென்று விசனப்பட்டு இதை ஒருவருக்கும்விளம்பலாகாது ஏனெனில் நாரதர் நம்முடைய பிள்ளைக்குப் பூட்டைத் திறந்துக் காட்டிவிட்டுப்போயினார் நாட்டைத் தழுவிக்கொண்டிருந்த நமது மகன் நல்லறிவாளனாகிய சுகன் பக்குவப்பட்டிருந்தமையால் காட்டிய சோதி கற்பூரதீபம்போற் கலந்து பரிபூரணபாக்கியனானான் இனி நாம் செய்வதென்னவென்று அகத்தைத்தழுவி இதற்கு வேண்டிய சாஸ்திரங்களையெல்லாம் இதமா யேற்படுத்திக்கொண்டிருந்தார். இந்தச் சுகப்பிர்மத்தின் சரித்திரத்தைப் படித்தபேர் கேட்டபேர் லோகவாழ்க்கையில் மூழ்கியிருந்தபோதிலும் நொடிக்குநொடி மனத்தெளிவும் அப்போது நேரிட்டிருக்கிற வியாதியும் மனோவியாதியும் நீங்கும் தூய்மையும் பரிசுத்தமும் இரக்கமும் உடையவராவார்கள்.

தெய்வச்செயல்.

கோடிசூரியப்பிரகாசமாகிய சிங்காதனத்தில் ஜெனமேஜெயமகாராஜன் இனிதுவீற்றிருந்து அரசுசெலுத்தி பிரமச்சாரி வானப்பிரஸ்தன் சந்நியாசி ஆதாரமானவராலே துறக்கப்பட்டவன் ஆதுலர் தன்னிடத்துவந்திரந்தவர் தெய்வம் பிதுர்த்தேவதை விருந்தினர் சுற்றத்தார் முதலானவர்களுக்கு யாதொரு குறைவராமலிருக்க அவரவர்களுக்குத் தகுந்தபடி வேண்டியவற்றை யுதவி தன்னுயிர்போல் காப்பாற்றி வருகிறநாளில் ஒருநாள் மந்திரி முதலானவர்கள் புடைசூழ சிங்காதனத்தி லிருக்கிறதருணத்தில் பயிலவமுனிவர் வைசம்பாயனமுனி, ஜயமுனி, சுமந்தமுனி, நாரதமுனி, தேவலமுனி, சுகமுனி முதலாகிய மாணாக்கருடனே வேதவியாசர் வந்து தமது வரவைக் காவலாளிகளால் தெரிவித்தார் உடனே அரசன் எழுந்து எதிர்கொண்டுபோய் வணங்கி அழைத்துவந்து பொற்பீடமளித்து இருக்கச்சொல்லி சோடசவுபசாரஞ்செய்து வணங்கி எதிர்நின்றான்.

வியாசரும் அவருடைய மாணாக்கரும் அரசருக்குப் பல ஆசிகள்வழங்கிச் சிங்காதனத்திருக்கக் கட்டளையிட்டார்கள் அரசன் சிங்காதனத்திலிருந்து தவசிரேஷ்டராகிய வியாசமுனிவரைநோக்கி ஓ ஐயனே எங்கள் முன்னோர்களாகிய பாண்டவர்களும் சுயோதனன் முதலாகியவரும் ஒருவர்க்கொருவர் விரோதப்பட்டு வீணாய் மடிந்துவிட்டார்களாமே அக்காலத்தில் தாங்கள் ஒரு புத்திசொல்லித் தடுத்தால் அவர்கள் மீறுவார்களா (தெருச்சண்டை கண்ணுக்கின்பமென்ற பழமொழி) வேடிக்கை பார்த்திருந்தீர்கள் தாங்கள் வமிசகர்த்தாவாகவும் குலகுருவாகவு மிருக்கிறவருக்குத் தருமமாவென வியாசர் நகைத்து அரசனே நீ சிறுபிள்ளை என்ன சொன்னபோதிலும் எனக்கு மகிழ்வேயன்றி இகழ்வில்லை

நீ இப்போது உரைத்த சங்கதிக்கு அந்தத் திருமூர்த்திகள் வந்து தடுத்தபோதிலும் பாண்டவர்களும் சுயோதனர் முதலானவர்களும் கேட்கார்கள் ஏனென்றால் வினைப்பயன் யாரைவிட்டது அதை நீக்க ஒருவராலுங்கூடாது காலகதி அப்படியிருந்தது அதற்காக என்னைத் தூறிக்கொள்வது தகுதியல்லவென்றிசைக்க அரசன் சிரித்து ஓ சுவாமி சுயோதனன் முதலானவர்கள் ஒருவர் வார்த்தையைக் கேளாதவராயிருந்தபோதிலும் பாண்டவர்களென்ன சொற்புத்திகேளாதவர்களா நீங்கள்தடுத்தால் அவர்கள் மீறுவார்களா இது ஒரு உத்தரவாவென்றான்.

வியாசர் ஓ அரசனே நீ வீண்வழக்கிடுகிறாய் உனக்கு அது திருஷ்டாந்தப்பட ஒன்று சொல்லுகிறேன் அதைமாத்திரம் தப்பித்துக்கொள்வையேயாகில் அப்பாண்டவர்களும் சுயோதனாதியரும் மடிந்த குற்றத்தை என்பேரில் வைக்கலாம் அதைத் தப்பித்துக்கொள்ளாவிட்டால் காலகதியென்று உணர்ந்துக்கொள்ளுமென்று கழற அரசன் மகிழ்ந்து ஓ ஐயனே அதென்னவென வியாசர் ஓ அரசனே இன்றைக்குப் பத்தாநாள் உனக்கொரு பிரம்மஹத்தி வருகின்றது அதைமாத்திரம் தப்பித்துக்கொள்ளும் பார்ப்போமென்று சொல்லி அரசனிடத்து விடைபெற்றுத் தமது ஆசிரமத்துக்கு மாணாக்கருடன் எழுந்தருளினார்.

அரசன் சகல சாஸ்திரநிபுணராகிய வேதவேதியர்களையும் பண்டிதர்களையும் அழைப்பிக்கத் தனது மந்திரிகளுக்குக் கட்டளையிட்டான் மந்திரிகள் அக்கட்டளைப்படி அந்த க்ஷணம் வேதவேதியர்களையும் சாஸ்திரிகளையும் அழைப்பித்துவிட அரசன் வந்தவர்களுக்கெல்லாம் வந்தனைவழிபாடு செய்து பொற்பீடமளித் திருக்கச்சொல்லி அவர்களைப்பார்த்து சுவாமிகளே இன்றைய பத்தாநாளில் எனக்கொரு பிரம்மஹத்தி வருகிறதாயிருக்கிறது அது வாராமலிருக்க ஒரு

உபாயஞ் சொல்லுங்களென்று வினவ வேதியர்களும் சாஸ்திரிகளும் யோசித்து அரசனே ஓமங்களினாலும் யாகங்களினாலும் சகல பாபமும் நிவர்த்தியாதலால் அவற்றில் ஒன்றை இராப்பகலொழிவில்லாமல் இந்தப் பத்துநாளுஞ் செய்தால் அந்தப் பிரம்மஹத்தி வந்து அடையாதென்றருள அரசன் கேட்டு மகிழ்வடைந்து அப்படியே செய்வோமென்று அதற்குவேண்டிய கருவிகளை வருவிக்க மந்திரிகளுக்குக் கட்டளையிட்டான் மந்திரிகள் வேண்டிய சாமக்கிரிகைகளை வருவித்து ஒரு ஓமகுண்டமியற்றி அரசனுக் கறிவித்தார்கள் அரசன் பத்துநாள்வரைக்கும் இரவும் பகலும் ஒழியாமல் மந்திர முச்சரித்து ஓமஞ்செய்யவேண்டும் அப்படிச் செய்வதற்கு வேண்டியவற்றைக் கொடுக்கிறது இதற்குச் சம்மதித்தவர்கள் வருகிறதென்று பறைசாற்றிவித்தான். இவ்வோசையைக் கேட்டவர்கள் யாவரும் பத்துநாள் கண்விழிக்கவேண்டும் கனவருத்தமான வேலையென்று சும்மாயிருந்துவிட்டார்கள் அத்தருணத்தில் பிறவித்தரித்திரனாகிய ஒரு கிழப்பிராமணன் இவ்வோசையைக்கேட்டு நமது தரித்திரம் அதமாருங்காலம் இதுதானென்று தீர்மானித்துவந்து அரசனுக்கு ஆசீர்வாதஞ்செய்து ஓ அரசனே நானே உமது கருத்தின்படி பத்துநாளுமிருந்து ஓமத்தை நிறைவேற்றுகிறேன் என அரசன் மகிழ்ந்து அவ் வேதியனைக் குருவாகக்கொண்டு தானும் தன் மனைவியும் ஸ்நானஞ்செய்து ஓமமண்டபத்திற்சென்று வேதியன் மந்திரமுச்சரிக்க ஒன்பதுநாள்பரியந்தம் யாகத்தைச் செய்துவந்தான் பத்தாநாளிராத்திரி ஓமத்தை நடத்தும் வேதியன் தளர்ந்த வயதுடையவனாதலாலும் ஒன்பதுநாள்பரியந்தம் கண்விழித்திருந்ததினாலும் மிகுந்த தளர்ச்சியுடையவனாய் கலையின்மேல் வாயினால் மந்திரத்தையுச்சரித்துக்கொண்டே நித்திரைபோயினான் அந்த நித்திரையில் தான் ஒரு பெருங்காட்டிற் சென்றதாகவும் அந்தவிடத்தில் தன்னை ஒரு புலி பாய்ந்துக் கொல்ல யத்தனித்திருப்பதாகவும் கனவு கண்டுக்கொண்டிருக்கையில் அரசன் இதை

ன்ன மந்திரத்தை யுச்சரித்துக்கொண்டே வேதியன் நித்திரைசெய்கிறனென்று தன் கையிலிருக்கிற தருப்பையினால் அவ்வேதியனைத் தட்டினன் உடனே வேதியன் மிகப்பயந்து அலறி எதிரிலிருக்கும் ஓமத்தில் விழுந்தான்.

உடனே அந்த ஓமத்தீ வேதியனைப் பஸ்பீகரமாக்கிவிட்டது அரசனுக்கு வியாசரிட்ட கட்டளைப்படி கெடுவுதப்பாமல் பிரம்மஹத்திவந்து அடைந்தது அரசன் பிரமைகொண்டவனய் ஆ ஆ இதென்ன ஆச்சரியம் நாம் தருப்பையால் வேதியனைத் தட்டவும் அவ்வேதியன் திடுக்கிட்டு ஓமத்தீயில் விழுந்திறக்கவும் நேரிட்டதே இது வினைப்பயன் இதைவெல்வதற்கு ஒருவராலுமாகாது நமது குலகுருவாகிய வியாசமுனி கூறியதே சரி இனி நாம் அடைந்த பிரம்மஹத்தியை அவ் வியாசமகாமுனிவர்தான் அகற்றவேண்டுமென்றுகருதி அவ் வேதவியாசரைப் பலவாறு துதித்தான் அந்தவேளையில் அரசனையடைந்த பிரம்மஹத்தி நீங்க வியாசர் வருகிறது போல் உலகத்தையடைந்த இருள் நீங்கச் சூரியனும் உதயமானன்.

உடனே வியாசரும் முன்போலவே மாணக்கருடன் அரச னரண்மனைக்கு வந்து தன் வாவைக் காவலாளிகளால் தெரிவித்தார் அரசனறிந்து எதிர்கொண்டுபோ யழைத்து வந்து உதவியளித்தல், கைகழுநீர்தரல், கால்கழுநீர்தரல், முக்குடிநீர்தரல், நீராட்டல், ஆடைசாற்றல், முப்புரிநூல் தரல், தெய்வைபூசல், மலர்சூட்டல், மஞ்சளரிசிதூவல், நறும்புகைகாட்டல், விளக்கிடல், கற்பூரமேற்றல், அமுதமேந்தல், அடைக்காய்தரல், மந்திரமலரா லர்ச்சித்தல் என்று சொல்லப்பட்ட சோடசவுபசாரமுஞ்செய்து ஓ ஐயனே தங்கள்மகிமை தெரியாமல் தங்களைத் தூறிக்கொண்டேன் என் பேரில் கோபிக்காமல் கிருபைகூர்ந்து என்னைப் பற்றிய பிரம்மஹத்தி நீங்க ஒரு வழி காட்டவேண்டுவதுமன்றி இந்தப் பிரம்மஹத்தி வந்த விதத்தையும் கூறுமென்று வேண்ட

வியாசர் நகைத்து ஓ அரசனே ஓமஞ்செய்த வேதியன் நித்தி ரையில் தன்னைப் புலி அடிக்க யத்தனித்திருப்பதாகக் கனவு கண்டான் அந்தவேளையில் நீ தர்ப்பையால் தட்ட வேதியன் திடுக்கிட்டுப் பயந்து இறந்தானென்று கூறி இது வினைப்ப யன் இதை ஒருவராலும் வெல்லப்போகாது ஆதலால் ஐந் தாம்வேதமாகிய ஸ்ரீமகாபாரதத்தைக் கேள் அதனாலே இந் தப் பிரம்மஹத்தி நீங்குவதுமன்றி உங்கள் முன்னோர்களின் காலகதியும் இன்னதென்று விளங்கும் இந்தப் பாரதம் நமது மூதாதைகளுடைய சரித்திரந்தானேயென்று இலேசாக நினை க்காதே இது மகா செலாக்கியமானது நான்குவேதங்களோடு ஒப்புவமைப்பட்டு ஐந்தாம்வேதமென்று கூறப்பட்டது இதி ன் மகத்துவம் உனக்குத் தோன்றவேண்டுமானல் ஒரு கரிய வஸ்திரத்தைக் கொண்டுவந்து பேழையி லடக்கிவைத்து இந் தப் பாரதக்கதையைக் கேட்பாயாகில் கதை நிறைவேற நிறைவேற அந்த கரியவஸ்திரம் வெள்ளைவஸ்திரமாகிவரும் கரியவஸ்திரமே வெள்ளைவஸ்திரமானல் அக்கதையைக் கே ட்பவர்கள் அடையும் பயனுக்கு ஒரு அளவுண்டாவென்று சொல்ல அரசன் ஓ ஐயனே உங்கள் கருத்தின்படி அந்த ஸ்ரீமகாபாரதத்தைக் கேட்கிறேனென்றான்.

பஞ்சபாண்டவர்கள், திரௌபதை இவர்களின் பூர்வ ஜென்மம்.

ஐம்பத்தாறுதேசத்தரசர்களும் ஏககாலத்தில் புடைசூ ழ்ந்து உனக்கோ எனக்கோவென்று பொறாமைகொண்டு கச்சணிந்த திரௌபதைமேல் இச்சைகொண்டவர்களாய் மச்சயந்திரத்துடன் திண்டாடி ஒன்றுமாகாமல் விழிக்கை

யில் பிராமணரூபமாய் விளங்கிய அர்ச்சுனனெழுந்து விடைபெற்றுக்கொண்டு வில்லை வளைத்து நாணியேரிட்டு மச்சயந்திரத்தை அறுத்துத்தள்ளி வருத்தமில்லாமல் நின்றதைப் பெருத்த மன்னாதிமன்னரெல்லாம் பார்த்து வெட்கி விலகிவிட்டார்கள் மீண்டும் பொறாமைகொண்ட துரியோதனன் கும்பலில் தெரிவிக்கும்பொருட்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் தளர்ந்த பிராமணராகத்தோன்றி துரியோதனனிடத்திற்குவந்து ஆசீர்வதித்து நீங்கள் ஏன் வீண்பிரயாசைப்படுகிறீர்கள் பூர்த்தியாய் விசாரிக்கும்போது அவர்கள் பிராமணர்களல்ல வில்லை வளைத்தவன் அருச்சுனன் சல்லியனைக் குத்தினவன் வீமசேனனும் இதை நீங்க ளறியவும் வெளிவிடாதீர்களென்று கும்பலில் மறைந்துப்போய்விட்டார் அதேனெட்டாய் நடந்து பாஞ்சாலன் கும்புகளுக்குந் தெரியும்படி காற்றுவிசேஷமாய் அங்கொருபேச்சும் இங்கொருபேச்சுமாக இவர்கள் பஞ்சபாண்டவர்கள்தானென்று தூற்றிவிட்டு பழையபடியே கண்ணபிரான் பாண்டவர்களுடன் கலந்துக்கொண்டார்.

வெகுஜனப்பிரஸ்தாபமாய் விளங்கிக்கொண்டிருக்கும் இவ்வதந்தியைப் பாஞ்சாலதேசத்தரசனுகிய ரிதுபர்னமகாராஜன் கேள்விப்பட்டு மெத்தவும் நைந்து மனதுநொந்து ஐயோ பிறவிச்செல்வமாய் வளர்ந்த நமது குமாரத்தி வறுமையாளராகிய பாண்டவர்களுக்கா மாலையிட்டாள் ஆ ஆ இதுதான் ஆச்சரியம் இதுவரையில் தரித்திரம் இன்னதென்று அறியமாட்டாளே என் மடிமேல் வளர்ந்த வடிவழகிகொடிதாகிய வருமையை எப்படிசகிப்பாளோ இது தெய்வயெத்தனந்தானே தெய்வமே வருமையென்பது ஒருகாலத்தில் மறைந்தாலும் மறையும் ஒரு கன்னிகையானவள் ஐந்துபேருக்கு மாலையிட்டாளென்றால் இது எந்தகாலத்தில் மறையும் பொருமையாகிய தபோபலத்தாலும் அருமையாகிய அக்கினிவோமத்தியிலும் ஜெனித்த என் புத்திரிக்குத்தானு இப்பெயர் வாய்க்கவேணும் நம் முன்னோர்களிலும் இது

வழக்கமில்லையல்லவா அரசருக் கடுக்குமாவென்று பலவாறு மனவருத்தமுற்று தனக்குள்தானே யோசித்து தெய்வத்தைப் பூசித்து சொலுக்கூடத்திலிருக்கும் பாஞ்சாலராஜன் மனதைத் தேற்றுமாறு வியாசொரூபனான ஹரி என்றபடி திருகாலந்தெரிந்த வியாசபகவான் தோற்றுகிறார்.

சகல மகாரிஷிகளுக்கும் சிரோபூஷணமாகிய வியாசபகவான் கருக்கொண்ட மேகம்போன்ற திருமேனியும் செந்நிறமுள்ள சடாமுடியும் பொன்னிறமான தேஜசும் வெண்ணிறமுள்ள விபூதிதூளிதமும் புள்ளிநிறமுள்ள மான்றோலுடையுமாய் சூரியகிரண மேற்றிசையிற் பரவியிருக்க கீழ்த்திசையிலிருக்கும் உதயகிரிபோலும் விளங்கி தபோமகிமையாற் பிரகாசித்து தண்டுகமண்டல மிதியடியுடனே வியாசர் பாஞ்சாலனுடைய சபையிலெழுந்தருளினார் அவர் எழுந்தருளியதைப்பார்த்து பாஞ்சாலராஜனும் பாண்டவர்களும் எழுந்து அவர் பாதங்களில் விழுந்து அவரால் ஆசீர்வதிக்கப்பட்டு அவரை அழைத்துப்போய் ஆசனத்திலுட்கார வைத்து அவரனுமதியினாலே தாங்களும் உட்கார்ந்தார்கள் பின்பு வியாசபகவான் க்ஷணகாலம் க்ஷேமவிசாரணைசெய்து ஓய் பாஞ்சாலராஜனே உம்முடைய மனதிற் சந்தேகப்படவேண்டியதென்ன திரௌபதிக்கு ஐந்துபுருஷர்கள்தான் நேமிக்கப்பட்டிருக்கிறார்கள் குந்திதேவியின் வாக்கிலும் அப்படியே வந்திருக்கின்றது இந்தப் பாஞ்சாலிக்கும் இவ்வைந்துபேரிடத்திலும் மனதுண்டு இவர்களுக்கும் அவ்வாறே சம்மதி ஆனால் அது இந்தச் சனனத்தைப் பற்றியதல்ல முற்சனனத்தைப் பற்றியதாகையால் அதுசங்கதி உமக்குக் கேட்க மனதிருந்தால் விளம்புவேனென்று அரசனைத் தனியே அழைத்துப்போய் அந்தக் கதையைச் சொல்லத்தொடங்கினார்.

முற்சன்மத்தில் நளராஜனுடைய மகளாகப் பிறந்து நளாயினியெனப் பெயருடையவளாய்ச் சிறந்து மிகவும் சவு

ந்தரியத்துடனே பருவமடைந்திருந்தாள் இவளை வெகு ராஜாக்கள் வந்து விவாகத்துக்காகக் கேட்டதற்கு அந்தப் பெண் புருஷன்வேணுமென்றபோதுதான் அவளைக் கலியாணம்பண்ணிக்கொடுப்பனேயல்லது அதற்கு முன்னே கொடுக்கமாட்டேனென்று சொல்லிப்போட்டான். இப்படியிருக்க அந்தப் பெண் ஒருநாள் எனக்குக் கலியாணம் வேணுமென்று பிதாவுடனே சொல்ல பிதாவும் அதற்கு யத்தினமாயிருக்கையில் ஒருதினம் மவுத்கல்யரென்கிற மகாமுனி இராஜாவினிடத்திற்குவந்து ஓ மன்னவனே நானொருகாரியமாய் வந்தேன் அதை நீ நிறைவேற்றவேணுமென்றார் அந்த ராஜாவும் இவருடைய தபோமகிமைக்கு அஞ்சி மறுத்துச் சொல்லமாட்டாமல் அப்படியேயாகட்டுமென்று ஒப்பினார் இந்த ரிஷி உன் மகளை எனக்குக் கன்னிகாதானஞ் செய்யவேண்டுமென்று கேட்க அந்த ராஜா இவருடைய முதிர்ந்த வயதையும் கோரரூபத்தையும் தன் மகளுடைய மங்கைப் பருவத்தையும் நல்ல சௌந்தரியத்தையும் நிதானித்து சுவாமிகாள் அப்படியே செய்கிறேன் ஆனால் அந்தப்புரத்துக்குப் போய் என்மகளைச் சம்மதிக்கச்செய்து அதற்கு அடையாளமாக அவள் முத்திரைமோதிரத்தை வாங்கிவந்தால் உடனே தத்தம்பண்ணுகிறேனென்று சொன்னான்.

அதுகேட்டு அந்த முனிவரும் ஆகட்டுமென்று அந்தப்புரத்துக்குப் போகும்போது தான் நினைத்தமாத்திரத்திலே எதிரில்வந்து நின்ற மன்மதனைக் கேட்டு அவனுடைய வயதையும் அழகையும் வாங்கிக்கொண்டு ரூபத்தையும் தன்வயதையும் அவனுக்குக் கொடுத்து அப்பா சற்றுநேரத்திலே உன் சொத்தைச் சேர்த்துவிடுகிறேனென்று அவனுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு தாம் அந்தப்புரம்போய் அங்கிருந்த ராஜகன்னிகையைப் பார்த்தார். அவள் இவருடைய ரூபத்தைக் கண்டமாத்திரத்திலே மோகித்து இவரைப்பார்த்து நீர் யார் எங்கேவந்தீரென்று வினவினாள் அவரும் தம

க்கு அவளிடத்திலிருக்கிற ஆசை வெளிப்பட ஓ பொற்கொடியே உன்னை விவாகஞ்செய்யவேண்டுமென்று வந்தேன் உன் பிதா நீ சம்மதித்தால் அப்படியே செய்கிறேனென்றான் ஆகையால் என்னிடத்தில் ஆசையிருந்தால் உன் மனக்குவிந்ததற்கு அடையாளமாக நீ தரித்திருக்கிற முத்திரை மோதிரத்தை என் கையிற் கொடு அதை உன் தகப்பனுக்குக் காண்பித்து உன்னை விவாகஞ்செய்துக்கொள்ளுகிறேனென்று சொன்னார்.

அக்தப் பெண்ணரசும் புன்சிரிப்புடனே மௌனமாய் தன் மோதிரத்தைக் கழற்றி தபோதனர் கையிற் கொடுத்தாள் அவர் அதை வாங்கிக்கொண்டு மிகவுஞ் சந்தோஷத்துடனே மன்மதனுக்கு அவன் ரூபத்தைக் கொடுத்துப்போட்டு தம்முடைய எதாரூபத்தோடே அரசன்கையில் மோதிரத்தைக் கொடுத்தார் அரசனும் அதைப்பார்த்துத் தன் மகளை அழைப்பித்து மகளே இதோ நீ இஷ்டமாய் நினைத்த புருடன் இவருக்கே உன்னைக் கன்னிகாதானம் பண்ணுகிறேனென்று சொல்ல அந்தச் சுந்தரி இந்தப் புருஷனைப்பார்த்து நான் இச்சித்த புருஷன் இவரல்லவென்று சொல்ல மகாராஜனும் இவர்தான் உன் சம்மதிக்கு அடையாளமாக மோதிரங் கொண்டுவந்து என்கையிற் கொடுத்தார் இனி பே ய பேச்சு புரளக்கூடாதென்றான்.

அந்தப் பெண் திடுக்கிட்டு நமக்கு அமைப்பு இதுதானென்று நினைத்துக்கொண்டு ஐயா ஆனால் அப்படியே செய்யுமென்றுசொன்னாள் அப்புறம் அந்த ராஜாவானவன் அந்த மவுத்கலியருக்கே நளாயனியென்னுந் தன் மகளைக் கன்னிகாதானஞ்செய்து சிறப்புடனே விவாகத்தை நடத்தினான் விவாகம் நடத்தபின்பு அந்த முனிவர் இந்தப் பெண்பிள்ளையைப்பார்த்து பெண்ணே நீ என்னுடன் கூடியிருக்க மனமுடையவளா அல்லது உன் தகப்பனிடத்தில் விளையாடியிரு

க்கும் இனமுடையவளா என்று கேட்க அந்தப் பெண் கற்புடையவளாகையால் இனி நகப்பனால் எனக்கு என்ன இப்பருவம் புருஷனே டிருக்கத்தக்கதாதலால் தேவரீருடன் கூட வருவதற்கே மனமுடையவளென்று சொல்ல அப்படியானால் நான் கடினமாகிய ஆரணியத்திலிருந்து தவஞ்செய்யப்போகிறேன் அங்கே நல்ல உணவு கிடைக்காது காய் கிழங்கு தின்னவேணும் மெத்தென்னுஞ் சயனமில்லை கல்லிலும் முள்ளிலும் காட்டிலும் படுக்கவேணும் திவ்யமான வாத்தியகோஷ்டமில்லை பயங்கரமான மிருகங்களின் கர்ச்சிப்பு கேட்கவேணும் உயர்ந்த வஸ்திரமில்லை மரவுரி யுடுக்கவேணும் மாடமாளிகை மேடைகளில்லை தழைகளாற் கட்டப்பட்ட குடிசைகளி லிருக்கவேணும் உனக்குக் காலங்களில் அன்னபானங் கிடைக்கமாட்டாது மத்தியானத்துக்குமேல் கொஞ்சம் புல்லரிசிக்கஞ்சி கிடைக்கும் இராத்திரியில் போஜனங் கிடைக்காது அன்றியும் விடியற்காலமெழுந்ததுமுதல் நமக்கு ஸ்நானம் தேவபூசை அக்கினிஹோத்திரம் ஜாகாரமுதலான வைதிகங்களுக்கும் ஆதாரமுதலான வைதிகங்களுக்கும் வேண்டிய உபசாரங்களாலே மிகவும் மெய்வருந்தவேணும் நித்திரையற் றிருக்கவேணும் மேலும் நான் கிழவன் தவத்தில் நிற்பவன் ஒருவேளை சாப்பிடுகிறவன் உனக்குக் காமசுகம் பெரும்பாலும் நேரிடாது இதுவுமல்லாமல் நினைத்தபோது எங்கே போகவேணுமோ அங்கே போய்வி வேன் அனேகதினங்கள் ஆகாரமில்லாமல் தவத்தில் நின்று விடுவேன் அப்போதெல்லாம் நீ ஒருத்தியாய் ஆகார நித்திரைக ளில்லாம லிருக்கவேணும் இப்படிக்கு அதிக துக்கத்திற்கே காரணமாகிய வனவாசம் இந்தப்புரவாசத்தில் சுகத்தோடு சந்திரமண்டலம்போலே விளங்காநின்ற மாளிகைமீதில் யானைத்தந்தங்களினால் செய்து நவமணியிழைத்த மஞ்சங்களிலே இலவம்பஞ்சுபோட்டு பட்டினால் தைத்த சுகுமாரமாகிய பஞ்சணையில்தூங்கி திவ்ய ஆசனங்களிலிருந்து அநேகவித உபசாரங்களுடனே தகுந்த வேலைக்காரிகள் கொண்டு

வந்து கொடுக்கும் தேவாமிர்தத்துக்கு நிகராகிய அறுசுவையுண்டிகளை விளையாட்டாற் புசித்து ஏழிசைகூடிய வேணு வீணை முதலாகிய வாத்தியங்களின் மதுரமான ஒலியைக்கேட்டு அம்மானை கழங்கு பந்து விளையாடி உன்னிச்சையின்படி செய்துக்கொண்டிருக்கிற நீ என்னுடன் வருவதற்கு இசையமாட்டுவையோ என்று அம்மகாமுனி சொல்லக்கேட்டு அந்த ஸ்திரீயானவள் சுவாமி என்னகஷ்டம் நேரிட்டாலும் புருஷன் எப்படிப்பட்டவனானாலும் பதிவிரதையாயிருக்கிற ஸ்திரீகளுக்கு அப்புருஷனுடன் கூடயிருந்து கணவனுக்குச் சிசுருஷை செய்வதே சகல சாஸ்திரங்களுடைய விதி இதனாலேதான் இம்மையில் பிரதிஷ்டையும் கீர்த்தியும் மறுமையில் நற்கதியும் பிறந்தகுலத்துக்கும் புகுந்தகுலத்துக்கும் புகழும் நடந்து உலகத்தால் மகிழப்படுவள் அப்பெண்மையே பெண்மை சவுக்கியமுதலிய மற்றது சுகமல்ல பிறந்தவீட்டில் எத்தனைச் செல்வமிருந்தாலும் அதனாற் பெண்ணுக்கு கிஞ்சித்தும் பெருமையில்லை புகுந்தயிடத்தில் குடிப்பது கூழாயினும் அருமையான பெருமைதான் அன்றியும் கணவனோடுகூட வருத்தத்துடனாவது இருக்கிறதே சுவர்க்கபதி அதுநீங்கிச் சுவர்க்கம் புகுந்தாலும் நரகவாதனை ஆகையால் முன் இராமர்பின்னே ஜனகன் மகள் போனாள் நளனுடனே தமயந்தி சென்றாள் சுககன்னியென்பவளும் பார்க்கவச்சியவனரோடு ஆரணியவாசஞ்செய்தாள் அரிச்சந்திரனைச் சந்திரமதி அனுசரித்தாள் இப்படி அனேகம் பதிவிரதைகள் பதிசிசுருஷை என்னுங் கல்பத்தை யனுட்டித்து என்றும் நாசமுறாத கீர்த்தியுடைமையைப் பெற்று விளங்குகின்றார்கள் இதெல்லாமறிந்தயான் எப்பாடுபட்டாவது தேவரீரை அனுசரித்திருப்பனேயல்லது பிதாவின் வீட்டு போகபாக்கியத்தினுக்கு இச்சிக்கமாட்டேன் என்று சொல்லக்கேட்டு ஆனால் இவ் வாடையாபரணங்களை விட்டு என்போல மரவுரி யுடுத்திக்கொள்ளென்று முனிநாதனுரைக்க அவளும் அப்படியே செய்தாள்.

அதுகண்டு மனது களித்து அந்த மவுத்கல்யரிஷியானவர் நளாயினியை அழைத்துக்கொண்டு கங்காநதிதீரமாகிய ஒரு புண்ணியக்ஷேத்திரத்தில் போய் தவஞ்செய்ய ஆரம்பித்தார் அவளும் அவருக்கு வேண்டிய உபசாரஞ் செய்துக் கொண்டுவருகையில் அந்த ரிஷி இவளுடைய கற்பை இன்னம் நன்றாய்ச் சோதிக்கவேண்டுமென்று ஒருநாளாவது காமபோகத்தைக் கொடாமற்போனதுமன்றி தம்முடைய கிழத்தன்மையால் விகாரமுற்ற தேகத்தில் பெருவியாதியையும் வருவித்துக்கொண்டார் பின்பு அவர் தேகமானது அந்தக் கொடிய வியாதியினால் அழுகிக் குளுகுளுத்துப் புண்கள்வெடித்துச் சீழ்வடிந்து ஓர்புறத்திற் புழுக்கள் மொய்த்து துர்க்கந்தம் வீசி மகா கோரமான ஸ்திதியில் வந்தது அப்பொழுது அவள் அருவருக்காமல் உடம்பைத் தேய்த்துக் குளிப்பாட்டுகிறதும் புழுக்களையெல்லா மெடுத்து அப்புறம்போட்டு அந்தச் சீழ்முதலியவற்றை தன் வஸ்திரத்தினால் துடைக்கிறதும் அவர் போஜனம்பண்ணின பாத்திரத்தி லிருக்கும் சேஷங்களுடனே தான் உண்கிறதும் அவருடைய பாதமுதலிய அங்கங்களை வருத்தந்தீரப் பிடிக்கிறதுமாகப் பணிவிடைசெய்துவந்தாள்.

ஒருநாள் அவர் உண்கலத்திலே பெருவிர லற்றுவிழச் செய்தார் அன்றைக்கும் புழுக்களோடுஞ் சீழுஞ் சிலைத்தண்ணீர்களோடும் நாற்றமாய்க்கிடக்கிற விரலை எடுத்துப்போட்டு மீந்த அன்னாதிகளோடு புசித்தாள் இம்முனிவர் இதுகளையெல்லாம் பார்த்து மனதில் மிகுந்த ஆனந்தத்தை யடைந்திருந்தாலும் இன்னமும் பார்ப்போமென்று வெளிக்கு அவளைத் திட்டுகிறதும் கோபித்துக்கொள்ளுகிறதும் உதைக்கிறதும் அடிக்கிறதுமாகவே யிருந்தார் அப்படிக்கிருந்தும் அந்த மாது மனங்கோணாமல் நடந்தாள்.

இப்படி வருகிறநாளில் ஒருநாள் அந்த வைதிகரானவர் தன் மனைவியைநோக்கி அடி பெண்ணே நான் உன்னைக் களி

யாணம்பண்ணுகிறதற்குமுன்னே ஒருவியாதியு மில்லாமல்
சுகமாயிருந்தேன் துர்ப்பாக்கியவதியான உன்னைக் கலியா
ணஞ் செய்தபின்பு இக் கொடிய வியாதியினால் வருந்துகிற
துமன்றி நினைத்தபோது தீர்த்தங்களும் க்ஷேத்திரங்களும்
போகக்கூடாமல் இங்கேயே கிடக்கவேண்டியதாச்சுது என
னசெய்வேன் என் தலைவிதி அடி பாபிஷ்டி உன்னைத் தெரி
யாமல் விவாகஞ்செய்தேனென்று கண்ணீருதிர்த்துக்கொ
ண்டு விசனப்பட்டார் இதைப்பார்த்து அக் கற்புடைய மக
ளிர்மணியானவள் சுவாமி நீர் ஏன் விசனப்படுகிறீர் நான்
மகா பாபிஷ்டிதான் இந்த வியாதிக்குமாத்திரம் நான் ஒன்
றுஞ் செய்யமாட்டாமற்போனாலும் மற்றென்னாலாகிய பணி
விடைகளுக்கு ஒன்றுங் குறைவில்லை ஆகையால் தயைசெ
ய்து தேவரீருக்கு எவ்விடத்துக்குப்போக மனமிருக்கிறதோ
அதை அடியாளுக்குத் தெரிவித்தால் அவ்விடத்திற் கொண்
டுபோய் விடுகிறேன் தேவரீருக் குதவாத என் தேகமும்
பிராணனும் என்னத்துக்கு ஆதலால் கட்டளையிடவேண்டு
மென்று வணங்கிக் கும்பிட்டுக் கேட்டாள் அந்த முனி அடி
யே என்னைத் தீர்த்தங்கள்தோறுங்கொண்டுபோய் ஸ்நானம்
பண்ணிவைக்கவேண்டுமென் றுரைத்தார் அப்படியே அந்த
ஸ்திரீயானவள் அவரை ஒரு கூடையிலெடுத்துத் தலைமீது
வைத்துக்கொண்டு தீர்த்தயாத்திரை போகும்போது ஒரு
பட்டணத்திற்போ யிறங்கினாள்.

அவ்விடத்தி லிறங்கிய முனியானவர் ஓ பெண்ணே
நான் ஒரு வஸ்துவினிடத்திலே ஆசைப்பட்டேன் அது என
க்குக் கிடைக்கமாட்டாதென்று விசனப்பட்டார் அதைக்
கேட்டு அவள் சுவாமி அது என்னவஸ்து எனக்குச் சொன்
னால் கொண்டுவந்து கொடுக்கிறேனென்று சொல்ல அந்தத்
தபசி அதை யுனக்குச் சொல்வேனாகில் மனதிற்கு மிகவும்
வருத்தத்தை யுண்டாக்கும் கடைசியில் நிறைவேறமாட்டா
து வீணாகச் சொல்லமாட்டேனென்றார் அந்த ராஜபுத்திரி

சுவாமி உம்முடைய மனதுக்கு இஷ்டமாயிருப்பது என் மனதுக்கு விரோதமா யிருக்கமாட்டாது அதைத் தயவுசெய்து சொல்லவேண்டும் எவ்வாறாகிலும் அதை முடிக்கிறேனென்று சொன்னபின்பு ஆனால் கேளும் இந்தப் பட்டணத்தில் கீழ்ப்புறவீதியில் ஒரு வேசி யிருக்கிறாள் அவள் அரம்பையோ ஊர்வசியோ இரதியோவென்று சந்தேகப்படத்தக்கவளா யிருக்கிறாள் அவளைப் பார்த்ததுமுதல் மிகுந்த மோகமாகினேன் மையல் தலைக்கேறிற்று எனக்கு அன்ன பானங்கள்கூட வெறுப்பாயிருக்கிறது விசாரிக்குமளவில் அவள் ஓரிராத்திரிக்கு நூறுபொன் வாங்குகிறவளாம் எனக்குப் பொன்னுமில்லை பொன்னிருந்தாலும் அவளைப் போகிக்கும்படியான தேகமுமில்லை இப்படிப்பட்ட காரியம் எவ்விதமாக முடியுமென்று மவுத்கல்லியர் சொன்னார்.

அந்தப் பதிவிரதை தீர்க்காலோசனைசெய்து நல்லதென்று மனதில் ஒரு நிச்சயத்தை யடைந்து அந்த வேசியின் வீட்டுவாசலை விடியற்காலையிலே நன்னிலமெழுகி விசித்திரமாகக் கோலமிட்டு அவர்க ளெழுந்திருக்கிறதற்கு முன்னமே வந்துவிடுவள் இப்படிச் சிலநாள் செய்துவரும்போது அவளுடைய வேலைக்காரிகள் தங்களுடைய வேலையை யாரோ செய்துப்போகிறார்களென்று ஆச்சரியப்பட்டு தாசிக்கு அறிவித்தார்கள் அவளும் பார்த்து மிகவும் வியப்படைந்து யார் இப்படிச் செய்வது அவர்களைக் காணவேணுமென்றிருக்கும்போது ஒருநாள் அந்த வேலைக்காரிகள் பதுங்கியிருந்து விடியும்போதே மெழுகிக் கோலமிடுகிற இந்தப் பெண்பிள்ளையைக் கண்டு தங்கள் யஜமானிக்குத் தெரிவிக்க அவள் ஓடிவந்து இந்த முனியின் மனைவியைப் பார்த்து அம்மா நீ யார் மகாலட்சுமியோ யிருக்கிறாய் என்வீட்டுக்கு நீ பணி செய்வதேன் உனக்குத் தருமா தேவஸ்திரீகளும் பணிவிடை செய்யத்தகுந்த மகா தேஜசுடனே விளங்குகிற நீ என்னபயனைக்குறித்து எனக்கு ஏவல்செய்யப்புகுந்தாய் அடியாளு

டைய வீட்டைப் புனிதமாக்கவந்தாய் சொல்லம்மாவென்று நமஸ்கரித்துக்கேட்க அந்த வைதிகன்மனைவியும் இப்படியே என்னிஷ்டத்தையும் நிறைவேற்றுகிறதானால் யான் சொல்லுவேனென்றனள் அதுகேட்டு அந்த விலைமாது அம்மா என்னாற் செய்யத்தகும் ஊழியத்திற்குத் தடையொன்றுமில்லை ஐயமில்லாமற் பேசலாமென்றாள்.

முனிமனையாள் அம்மா என் கணவன் மகானுபாவர் சகலகலைகளுமறிந்தவர் தபோமகிமைவிளங்கியவர் அவருக்குச் சிலகாலமாய் நான் புரிந்த தீவினையாலே குட்டவியாதி சம்பவித்தது அவர் தீர்த்தயாத்திரையாய் இவ்வூருக்கு வந்தவிடத்தில் உம்மைக் கண்டு மன்மதன் போருக்கு வாணனைக் கொடுத்துவிட்டு மயங்கியிருக்கின்றார் அவரது மயக்கத்தை உன் முகவிலாசத்தினால் தீர்த்துக் காப்பாற்றித்தரவேண்டும் என்று மிகவும் வேண்டிக்கொண்டாள் அவ் விலைமகளும் யோசித்து இதென்னமோ காரணந் தெரியவில்லை நல்லது உன் பாக்கியம் எனக்குமாகட்டும் அழைத்துக்கொண்டுவாருமென்றாள் சந்தோஷத்துடன் விரைவிற்போய் இச்செய்தியைத் தன் புருஷனுக்குத் தெரிவித்து அவரைக் கூடையிலே வைத்துக்கொண்டு தாசிவீட்டுத் தலைக்கடையில்விட அவர் பெண்ணே நீ தெருவிலிரு நான் கூப்பிடும்போது ஓடிவாவென்று சொல்லி தெருக்கதவை மூடிக்கொண்டு மன்மதனை நினைத்து க்ஷணத்திலே அவ்வழகைப்பூண்டு உள்ளேபோனார் அந்தத் தாசியும் மன்மதன்போல் விளங்கும் இவரைப்பார்த்து பிரமித்து மோகித்து ஸ்தம்பித்து ஓடிவந்து ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு சகலவித உபசாரங்களுஞ்செய்து தேவேந்திரனுடைய சபைபோல் அலங்கரிக்கப்பட்டிருக்கிற தன் படுக்கையறைக்கு அழைத்துக்கொண்டுபோய் காமனுடைய பூஞ்சோலைபோலிருக்கிற அம்சதூளிகாமஞ்சத்தின்மீ திருத்தி நானாவித காமோபசாரஞ்செய்து கட்டி முத்தமிட்டு என்சாமி உம்மை உம்முடைய மனையாள் என் குட்டவியாதி பிடித்தவரென்று உரைத்தாள் பரியாசமாகச் சொன்னாளோ

நான் என்னதவஞ்செய்தேன் அந்தப் பாக்கியவதி யாரோ வழியில்வந்து எனக்குக் கற்கண்டை சர்க்கரைப்பாகை யூட்டினளே தன்னுயிரையும் பாக்கியத்தையும் கொடுத்தவளுக்கு நானென்ன உபகாரஞ் செய்யமாட்டுவேன் என் கண்ணே உம்மைக் குற்றமுடையவராகச்சொல்ல அவளுக்கு நாவுளப் படித் துணிந்ததோவென்று ஆலிங்கனஞ்செய்து காமக்கலை தாங்கினள்; இக் கபட மன்மதன் ஓ தாசிகுலமணியே யான் ஒரு காரணத்தினால் அவள் கண்ணுக்கு வியாதியுடையவன் போல் தோற்றுவேன் ஆகலால் அவள் அவ்வாறு உரைத்தனள் இந்த ரகசியத்தை நீ வெளியிடவேண்டாம் வெளியிடுவையாகில் உன் சிரசு வெடிக்குமென்று உரைத்தார் சுவாமி அப்படியேயாகட்டும் உம்முடைய கருத்துக்கு மாறுபட்டு நடக்கமாட்டேனென்று சொல்லி சிலகாலம்வரையில் அவருடன் மதனசாம்பிராச்சிய வைபவ ஐசுவரியத்தை அனுபவித்துவந்தாள் அவர் அவளை வேண்டி விடைபெற்றுக்கொண்டு நடையில்வந்து மன்மதனுக்கு அவன் ரூபத்தைக் கொடுத்து தன் கொடியவியாதியை யடைந்து கதவைத் திறந்து பெண்ணேயென்று மெலிந்த குரலுடனே கூப்பிட்டமாத்திரத்தில் இந்தப் பதிவிரதையானவள் சுவாமியென்று ஓடிவந்து கூடையி லுட்காரவைத்து தூக்கிக்கொண்டு வந்துவிட்டாள்.

இப்படி நடந்துக்கொண்டிருக்கும்போது கிருஷ்ணபட்சத் திராக்காலம் ஆகாயத்தில் மேகங்கள் கம்பிக்கொண்டு இடிமுழக்கத்துடனே தூற்றலைச் சொரிந்திருந்தபடியினால் வழிதெரியாமல் அலைந்து ராஜாவின் ஆக்கினையினால் (கழுவி லேற்றப்பட்டிருக்கிற) மாண்டவியனென்னும் மாமுனியிருக் கிறவிடஞ்சேர்ந்து அவர்பாதம் கூடையிற்படச் சென்றாள் இவள் பிடித்தமாத்திரத்திலே அவருக்கு நோய் அதிகமாய் திடுக்கிட்டு ஜாடையில் இவள் பெண்பிள்ளையென் றறிந்து பொழுதுவிடிந்தவுடனே உன் மங்கிலியம் அறக்கடவதென்று சபித்தார்.

இச் சாபங்கேட்ட ரிஷிபத்தினியானவள் இவராரோ ஒரு பெரியவர் இதற்கு என்னசெய்யலாமென்று நினைத்து பொழுது விடியாமற்போகக்கடவதென்று சொன்னாள் இப்படி இவளுடைய பதிவிரதாதருமத்தினாலே எட்டுநாள்வரையில் பொழுது விடியாமலிருந்தது அதனாலே லோகங்களெல்லாம் தொந்திரவடைந்து நிற்கக்கண்டு தேவதைகள் மாண்டவியமகாமுனியிடத்துக்குப் போய் சுவாமி இதென்னகாரணம் உலகம் அலைகிறதே ஆதலால் பொழுது விடியும்படி கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்திக்க அம்முனிவர் என்னால் ஒரு விரோதமுமில்லை ஒரு பதிவிரதையினுடைய மகிமையால் இப்படி நேரிட்டது ஆகையால் அவளைக் கேளுங்களென்று சொன்னார்.

அதுகேட்டு தேவதைகள் இந்தப்பதிவிரதையைக்கண்டு அம்மா தாயே உலகம் வருந்துதே அனுக்கிரகஞ் செய்யவேணும் இப்போது நீயேயல்லது வேறுகதியில்லை காப்பாற்றுமென்று பிரார்த்திக்க அந்தப் பதிவிரதை ஓ ஐயா தேவர்களே நீங்கள் சொல்வது சரிதான் என் மங்கிலியத்தையிழக்க நானே முயல்வது நியாயமா சொல்லுங்களென்று கேட்க அதற்குத் தேவர்கள் கேளம்மா நானொருத்தன் எவ்விதவருத்தமடைந்தாவது பலருக்கும் நன்மைசெய்வதேநன்று இது உனக்குத் தெரியாததன்றே என்று சொல்ல அவள் மெய்தான் ஆகிலும் எதையிழந்தாலுமிழக்கலாம் புருஷனையிழப்பது ஸ்திரீகட்கு நலமல்லவேயென்றாள் அவள் கணவனாகிய மவுத்கலியனைப் பிரார்த்திக்க அவர் அவளாலேயே அதுதீரவேண்டுமென்று சொல்லிவிட்டார் அவளை மாண்டவியரிடத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் சுவாமி இவள் மங்கிலியமிழக்காதிருக்கும்படி அனுக்கிரகஞ்செய்யுமென்று வேண்டினார்கள் அவரும் அப்படியே பிரதிசாபமளித்தார் பின்பு இவளும் பொழுது விடியும்படிச் சொன்னாள் அப்புறம் பொழுதுவிடிந்து உலகமெல்லாம் பூசைநைவேத்தியம் ஸ்நானசந்தி சபதபமுதலியயாகங்களுடன் மங்களகரமாயிருந்தது.

இப்படிப்பட்ட இவளுடைய பதிவிரதத்தன்மையை இ
ந்த மவுத்கலியரானவர் பார்த்துச் சந்தோஷித்து பெண்ணே
இவ்வளவுகாலம் நீ வருந்தியும் கற்பில் வழுவினவளல்ல ஆத
லால் மிகவும் உன்னிடத்தில் அனுக்கிரகம்வந்தது நானிப்
போது காணப்படுகிறபடிக்கு குரூபியுமல்ல குஷ்டியுமல்ல
மூப்பனுமல்ல உன்னை நான் எப்படி கிரீடைசெய்து சந்தோ
ஷிப்பிக்கவேணுமோ அப்படிப்பட்ட வரங் கேளென்று
சொன்னார் அதற்கு அவள் சுவாமி அடியாளிடத்தில் அனுக்
கிரகம்வந்து கட்டளையிடுகிறபடியினாலே விண்ணப்பஞ்செய்
கிறேன் அதாவது தேவரீரே ஐந்துரூபமாயிருந்துக்கொண்டு
என்னைப் போகிக்கவேண்டும் மறுஜனனத்திலும் நீரே என்
னை விவாகஞ்செய்து அனுபவிக்கவேணும் இதுதான் என
க்கு வேண்டிய வரமென்று கேட்டாள் அப்படியே அந்த
முனியானவர் உன் மனதின்படியே நடக்குமென்றுசொல்லி
இத்தனைகாலத்து வருத்தமும் ஒருநாளைய சுகத்துக்கு ஈடா
காதென்று சொல்லும்படி சிலகாலம் போகித்திருந்தும் அம்
முனிதிலகர் சுவர்க்கலோகமடைந்தனர் இந்தப் பதிவிரதை
யும் பதியுடன்போய்ச் சேர்ந்தாள்.

பின்பு அவள் இந்திரசேனையென்று பேருடையவளாகி
தன் புருஷனாகிய அம்முனிவருடனே மேருவின் சிகரங்களி
லும் நந்தவனத்திலும் சூரியலோகத்திலும் சந்திரலோகத்தி
லும் இன்னும் அனேக போகஸ்தானங்களிலும் காமரூபியா
கிய தன் கணவனுக்கு எந்தவேளையி லெந்தவடிவெடுத்துக்
கொண்டு கூடவேண்டுமோ அந்தப்படியே நெடுங்காலம் வெ
குபோகங்களெல்லாம் அனுபவித்துக்கொண் டிருக்கையில்
அந்தப் புருஷன் பெண்ணே இனி எனக்குப் போகத்தில்
வெறுப்புண்டாயிற்று ஆதலால் மேலாகிய பரப்பிரம்மயோ
கத்திற் பிரவேசிக்க மனதுண்டாயிருக்கிறது யான் கானகஞ்
சேருகிறேனென்று சொன்னார் அப்போது அந்தப் பெண்
என்னுயிர்போன்ற நாயகனே உம்மைவிட்டு ஒரு நிமிஷம்
பிரிந்து உய்வேனோ நான் உம்மை விடமாட்டேனென்று

மோகத்தாற் றடுத்தனள் அந்த மகாமுனிவர் கோபங்கொண்டு அடி நீ என் தவத்திற்கு விக்கினஞ்செய்கிறாய் ஆனபடியினாலே நீ மனுஷயோனியிற்பிறந்து ஐந்துபேரை விவாகஞ்செய்யக்கடவாயென்று சொல்லிப்போட்டு தவத்திற்குச்சென்றார் இந்தப் பெண்பிள்ளையும் அன்னாகாரமிழந்து வெயில் காற்று மழை முதலிய துன்பங்களையெல்லாஞ் சகித்துக்கொண்டு பரமசிவனைக்குறித்துத் தவஞ்செய்தாள்.

இப்படிச் சிலகாலம் இவள் தவஞ்செய்துகொண்டிருக்கும்போது அந்த ருத்திரமூர்த்தி பாலசந்திரனும் கங்கையும்புனைந்த செஞ்சடாமுடியும் திருநீற்றாலலங்கரிக்கப்பட்ட திருமேனியும் அக்கினிபோலொளிரும் நெற்றிக்கண்ணும் மான் மழு சூலம் அபயவரதம் இவைகள் தரித்த நான்கு திருக்கைகளும் மரகதப்பாவைபோல் விளங்கும் ஈஸ்வரியுடனே வெள்ளிமலைபோன்ற நந்தியின்மீதேறிச் சிவகணங்களெல்லாம் சத்திரசாமராதிகள்போட சிவயோகிகளெல்லாம் உருத்திரங் கோஷித்துத் துதிக்க மகாவிபவத்துடனே தவஞ்செய்யும் இப்பெண்ணுக்கு முன்வந்து நிற்க இவள் கண்ணுக்குக் காணாத காட்சியைக் கண்டு பேரானந்தத்திலழுந்தி எழுந்து அனேகபிரதட்சணங்களும் சாஷ்டாங்கமாகத் தண்டன்களுஞ்செய்து சுவாமி பரமசிவனே சங்கரனே சர்வலோகநாயகனே எல்லாம் படைத்தளித்தழிக்குங் காரணப்பொருளே வேதங்கள் துதிக்கும் வித்தகனே எட்டுதிருமேனியாய் விளங்குகிறவனே மகாதேவனே ஞானானந்த மாயவடிவினனே மலைமகள்பங்கனே பத்தருக்குக் கற்பகமே கருணைக்கடலே எனது முற்பவத்துத் தவப்பயனே உன் திருவடித்தாமரைகளே சரணம் வேறுகதியுண்டோ உலகத்தில் அடியாள் பெற்ற பேறு யார்பெறுவார்கள் என்னபாக்கியஞ் செய்தேன் தன்னிலையாயினேன் என் பஞ்சேந்திரியமும் பலித்தன அடியாளுக் கருளவேண்டுமென்று கைகூப்பி தலைமேலிட்டுத் துதித்துப் பிரார்த்திக்கப் பரமசிவனும் மந்தகா

சந்திரனாலே அமுதந்தங்கிய பவளக்கிண்ணம்போன்ற திருவாயை மலர்த்தி ஓ பெண்ணே நின் தவத்தினாலே மிகவுங் களித்தேன் உனக்கென்னவேண்டுங் கேளென்று அருளிச்செய்ய இப்பெண்ணும் சுவாமி தேவரீரைத் தரிசித்ததினாலே சகல பாக்கியங்களும் பெற்றேன் யாதெனக்குக் குறைவு நின்னைக் காணும்பொருட்டேயன்றோ யோகிகளெல்லாம் மெய்வருந்திப் பலகாலந் தவஞ்செய்கின்றனர்.

ஆதலால் இப்படிப்பட்ட நின் அரியகாட்சி எளிதிலெனக்குக் கிடைத்ததே போதும் ஆயினும் சுவாமி தயைசெய்து வேறுவரமளிக்கத் திருவுள்ளமுடையவராகையாலே எனக்குப் புருஷபாக்கியமே தரவேணுமென்று பிரதியுத்தரஞ் சொன்னாள் சுவாமியும் அதுகேட்டு குழந்தாய் அப்படியே உனக்கு மனுஷியலோகத்தில் உத்தமமான பிறப்பு கிடைக்கும் அப்பிறப்பிலே தேவராஜனது மகிமையுடைய ஐந்து மகாபுருஷர் உனக்குக் கணவராவார் அவர்களைச் சேர்ந்து நீ தேவர்களுக்கு மிகவும் அநுகூலமாகிய காரியஞ் செய்வாயென்று வரமளிக்க இத்தவஞ்செய்யும் பெண்ணும் சிவனைப் பார்த்து சுவாமி நான் ஒரு கணவனையன்றோ வரித்தது அப்படியிருக்க அடியா ளொருத்திக்கு ஐந்து பர்த்தாக்கள் எப்படி உண்டாவார்களென்று கேட்க சம்புதேவனும் பெண்ணே நீ ஐந்துதரம் என்னை (பதிந்தேகி) என்று கேட்டபடியினாலே அப்படியே உண்டாகும்படி யனுக்கிரகஞ்செய்தேனென்று சொல்ல இந்திரசேனை எனது கடவுளே முன்னமே சாஸ்திரங்களிலே பெண்பிள்ளைகள் ஒரு புருஷனையே விவாகஞ்செய்யவேண்டுமென்றும் ஆண்பிள்ளைகள் அநேகம்பெண்களை விவாகஞ்செய்யலாமென்றும் அந்தப்பெண்கள் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து உபசாரஞ் செய்துவரவேண்டுமென்றும் இப்படியெல்லாம் தருமநிச்சயஞ் செய்திருக்கிறார்களே ஒரு ஸ்திரீயானவள் ஆபத்துகளில் நியோகமென்னும் ஓர் விதியல்லது வேறு புருஷனைச் சேர்ந்தால் பிராயச்சித்தமும் மூன்றாவதுபுருஷனைச் சேர்ந்தால் மகாபிராயச்சித்த

மும் விதித்துச் சேர்த்துக்கொள்ளலாமென்றும் நான்காவது புருஷனைச் சேர்ந்தால் அவள் பதிதை அவளுக்குப் பிராயச் சித்தஞ்செய்து சேர்த்துக்கொள்ளக்கூடாதென்றும் ஐந்தாவதுபுருஷனைச் சேர்ந்தால் அவள் பந்தகியென்றும் சொல்லப்படுவள் அவளுக்குப் பிராயச்சித்தமுமில்லை. அவள் வேசிக்குச் சமானமாகியவளென்று காலத்தைப்பற்றியும் சாதியைப்பற்றியும் தக்கபடி பிராயச்சித்தங்களையும் விதித்திருக்கிறார்களே உலகத்திலும் பலபுருஷரை மகளிர் தழுவுதலைக்காட்டிலும் இழிந்த செய்கை வேறு கூறப்படவில்லையே.

இப்படியிருக்கத் தேவரீருடைய கிருபையென்னும் ஊன்றுகோலைப்பெற்ற நான் அந்தக் கொடிய துஷ்டச்செய்கையென்னுங் குழியில் விழலாமோ ஆதலால் அப்படிப்பட்ட சங்கடம் நேரிடாமலிருக்கவேணுமென்றுபிரார்த்திக்க சுவாமியானவர் பெண்ணே நம்முடைய வாக்கில் வந்ததற்கு இரண்டாவதில்லை நீயும் அஞ்சவேண்டாம் நீ ஐவரை விவாகஞ் செய்துகொள்வதை உலகத்தில் நிந்திக்கமாட்டார்களென்றருளிச்செய்தார் மறுபடியும் அவள் சுவாமி அப்படியானால் அந்த ஐந்து புருஷர்களுக்கும் என்னுடைய சங்கமகாலந்தோறும் கவுமாரவயதே யிருக்கும்படி அனுக்கிரகிக்கவேணுமென்று பிரார்த்தித்தாள்.

அதுகேட்டு பரமேஸ்வரனும் நல்லது அப்படியே நீ சன்மாந்தரத்தில் விசேஷமான ரூபமும் குணமும் மேன்மையும் போகமும் அடைந்து மகாநுபாவையாய் அதோ அந்தக் கங்காநதியிற்போய் மூழ்கியெழுந்து எந்தப் புருஷனைக் காண்கிறாயோ அவனை என்னிடத்துக்கு அழைத்துக்கொண்டுவாவென்று கட்டளையிட அந்தக் கட்டளையைச் சிரசில்வகித்துக்கொண்டு சுவாமியைப் பிரதட்சணம்வந்துதண்டனிட்டு அருகிலிருக்கிற கங்கையில் மூழ்கினாள் அப்போது சுவாமியும் மறைந்துவிட்டார் இம்மைப்போகத்தை விரும்பிய பூங்குழலாளும் நதியில் மூழ்கியெழுந்து சுவாமியைப்பார்த்தாள்.

அப்பொழுது அவளைக் காணாமையாலே திகைத்துக் கோ வென்று கதறி அழுதுக்கொண்டிருந்தாள் அவளழுத கண்ணீர்த்துளி கங்கையில் விழுந்து விசித்திரமாகிய பொற்றாமரைமலராகப் பூத்திருந்தது அந்தக்காலம் தேவதைகள் நைமிசாரணியத்தில் ஒரு யாகம் பண்ணிக்கொண்டிருந்தார்கள் அந்த யாகத்துக்கு இயமன் சாமித்திரமென்னும் ஆர்த்துவிச்சியத்தைசெய்துக்கொண்டிருந்தான் அதனாலே பூமியில் மனிதர்கள் பெருகி விர்த்தியாய் ஒருவரையொருவர் மதிக்காமலிருந்தார்கள் அதுகண்டு இந்திரன் வருணன் குபேரன் முதலாகிய சில தேவர் பிரம்மதேவனிடத்திற்குப்போய் சுவாமி இதென்ன தேவர்களுக்கெல்லாம் அபாயகாலம் நேரிட்டதென்று முறையிட்டுக்கொள்ள அந்தப்பிரம்மா இவர்களைப் பார்த்து என்னபயம் உங்களுக்கென்று கேட்க சாதலையுடைய மனிதரெல்லாம் சாகாதவர்களோடு சமானராகித் தேவர்களை லட்சியஞ் செய்யாம லிருக்கிறார்கள்.

இதுதானென்று சொல்ல ஓ தேவதைகளே இதற்குப் பயப்படவேண்டாம் இயமன் சாமித்திரத்தி லிருக்கிறபடியினாலே இப்போது மனிதர் ஆயுசு வளர்ந்திருக்கிறார்கள் அது முடிந்தவுடனே அவர்களெல்லாம் நசிப்பார்கள் அன்றியும் அந்த யமதேவனுடைய தேகமே உங்களுடைய சக்தியோடு கூடி இவர்களுக்கெல்லாம் நாசகாரணமாகப்போகிறது போங்களென்று சொல்லக்கேட்டு மறுபடியுந் திரும்பி தேவதைகள் யாகஞ்செய்கிற விடம் வந்து ஒரிடத்தி லுட்கார்ந்திருக்கும்போது இந்திரன் முதலாயினோர் அந்தக் கங்கையிலிருக்கும் விசித்திரமான தாமரைமலரைக் கண்டார்கள் அதைக் கண்டு ஆச்சரியமடைந்து இந்திரனானவன் கங்கைக்கரையில் வந்துபார்த்தவுடனே அங்கே அழுதுக்கொண்டிருக்கிற இந்திரசேனையைக்கண்டு அவளுடைய கண்ணீர்த்துளி நீரில்விழுந்து பொற்றாமரையாகியதையும் நோக்கி மிகவும் வியப்படைந்து மின்னலுக்கொப்பாகிய பாவாய் நீயார் இங்கு ஏன் வந்தாய் எதுக்கு கண்ணீர் சொரிகிறாய் இதையெல்லாந் தெ

ரியச்சொல்வாயென்று கேட்க நான் யாரோ எந்தக்காரியத்
துக்கு இவ்விடம் வந்தேனோ இதுகளை நீரே விவரமா யறிந்
துக்கொள்ளலாம் என்பிறகே வாருமென்று அப் பெண்பிள்
ளைசொல்ல இந்திரனும் அவ்வாறே அவள்பின்போய் அங்கு
ஒருமலையின்மீதில் ஞாயிறுபோல் விளங்கிக்கொண்டிருக்கும்
ஒரு மகாபுருஷனைக் கண்டாள் அந்த மகாபுருஷன் இந்த
அம்மனுக்கொப்பாகிய ஒரு ஸ்திரீயுடனே அந்த மலையின்மீ
தில் சிம்மாசனத்தி லுட்கார்ந்து பாச்சிகை யாடிக்கொண்டி
ருக்கத் தேவராஜனானவன் மூன்றுலோகங்களுக்கும் ஈஸ்வர
னாகிய தன்னைக் கண்டு அவள் மரியாதை செய்யவில்லையென்
று கோபங்கொண்டு ஆடா நீ நான் லோகனாதனாச்சுதே நீ
என்ன கர்வப்பட்டிருக்கிறாயென்று சொல்ல அந்த மகாபுரு
ஷன் சிரித்து மிர்துவாக இந்திரனை நோக்கினார் அவரால்
நோக்கப்பட்டமாத்திரத்திலே இவன் ஸ்தம்பித்து நின்றான்
அந்தப் பாச்சியையாட்டம் முடிந்தவுடன் அழுகிறபெண்ணை
நோக்கி அவனை இங்கு அழைத்துவாவென்று சொல்ல அவ
ளும் அவனைத் தொட்டமாத்திரத்திலே அவனங்கங்கள் தள
ர்ந்து கீழேவிழுந்தான் அப்படி வீழ்ந்த அவனைப் பரமசிவ
னாகிய அந்தப் புருஷனானவர் ஒ இந்திரனே இனிமேலிப்படி
செருக்கடைந்து பேசாதே அடா மூடா இதோ இந்தக் குன்
றைப் புரட்டு அதில் உன் பெருமையைக் காட்டுகிறேனென
அந்த வானவர்கோனும் இந்தப்புருஷன் சாட்சாத் ஈஸ்வரன்
இந்த அம்மன் பார்வதிதேவியென்று அறிந்து முறுக்கழிந்
து அவர் சொற்படி அக்குன்றைப் புரட்டினான் சிவன் அடா
இந்திரா இப்பிலத்தைப் பாரென்று சொல்ல அவனும் அந்
தப் பிலத்தில் மகா தேஜசுடைய நான்கு இந்திரரைக்கண்டு
ஒ ஒ நமக்குக்கூட இப்படிப்பட்ட கதி வந்து நேரிட்டதே
யென்று விசனப்பட்டான் பின்பு சுவாமியானவர் அப்பா
தேவர்கோனே நீ மதத்தினாலே என்னை அவமதித்தா யாகை
யால் இவர்களுடனே நீயும் இந்தக் குகையில் பிரவேசியென்
று கட்டளையிட இந்திரன் பயமடைந்து காற்றினால் உலுக்க
ப்பட்ட அரசஞ்சருகுகள்போற் குலுங்கி விடவிடத்த அங்க

ங்களுடனே கைகளைக் கூப்பிக்கொண்டு சுவாமி அடியேனுக்கு இவ்வளவு தண்டனையே போதும் இனி சிட்சை வேண்டாமென்று வேண்டிக்கொள்ள அதற்கு ருத்திரதேவன் அது கூடாது உன்போலே இவராலும் ஐசுவரியம் நடத்தவேண்டியிருக்கிறபடியினாலே இந்தக் குகையில் அடைத்தனர்.

ஆதலால் நீயு மிவரோடேகூடச் சேர்வாயென்று இதோ இந்தப் பெண் உங்களைவர்க்கும் பாரியையாகிறாள் நீங்கள் எல்லோரும் மானிடசனனமடையுங்கள் அப்படியாகச் சன்மித்து தேவராலுஞ் சாதிக்கக்கூடாத சில காரியங்களை முடித்து அனேகரைச் சம்மாரஞ்செய்து மிகவுங் கீர்த்திபெற்று வானவரால் கொண்டாடப்பட்டு மறுபடியுஞ் சுவர்க்கஞ் சேருவீர்கள் இப்படி நடக்கவேண்டியது அவசியமாயிருக்கிறபடியால் நம்மாலே இவ்வாறு உரைக்கப்பட்டதென்றுசொன்னார் அப்போது முன்னிந்திரர்கள் அதனைக்குறித்து எதினாலே எங்களுக்கு இச்சிறை விடுமோ அந்தச் சனனம் நாங்களடைகிறோம் ஆனால் தருமராஜனும் வாயுவும் இந்திரனும் அசுவினிதேவதைகளும் மனிதயோனியை அடையும்போது நாங்களும் அவர்களிற் சேருகிறோமென்றார்கள் இந்திரனும் தேவகாரியத்திற்காக என்னுடைய அம்சத்தினாலே ஒரு புருஷனை இந்த ஐவரிலொருவனாகத் தருகிறேனென்றான்.

மகாதேவனும் அவர்களிஷ்டத்தின்படியே செலவு கொடுத்து இவர்களுக்கு நாயகியாயிருக்குஞ் சம்பத்தென்னும் லட்சுமியையும் பூமியிற் பிறக்கும்படி செய்தார் அவன் இவர்களோடேகூடவே வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத மகிமையையுடைய நாராயணமூர்த்தியினிடத்திற்குச் சென்று இச்செய்தியெல்லாஞ் சொல்ல அவரும் அப்படியே அங்கீகரித்து தம்மிடத்திலிருக்கிற நரனென்பவனை இவர்களிலொருவராகும்படி கட்டளையிட்டார் அவர்களெல்லாம் அப்படியே பூமியிற் பிறந்தார்கள் அந்த விஷ்ணுவானவர் வெளுத்ததேகமொன்றையும் கறுத்ததேகமொன்றையும் எடுத்

துப் பூமியிற் போக்கினார் அவைதான் யதுகுலத்திலுதித்த வசுதேவருடைய பாரியாளாகிய ரோகணி கற்பத்தி லொன்றும் தேவகிகற்பத்தி லொன்றுமாய்ப் பிரவேசித்து பலராமனாகியும் கிருஷ்ணனும் அவதரித்தார்கள் இப்படி அந்த இந்திரரெல்லாம் இயமன்முதலான தேவர்களுடைய சுயரூபத்தில் கலந்து பாண்டவர்களாகப் பிறந்தார்கள் அந்த இந்திரனுடைய அம்சமாகிய புருஷன்தான் அருச்சுனன் அவனிடத்திலேதான் நரனுடைய அம்சம் கலந்தது அந்த லட்சுமிதான் முந்திய இந்திரசேனையிற் கலந்து அவர்களுக்குப் பாரியையாகத் திரௌபதையாயினாள் அப்படி லட்சுமியின் அம்சமில்லாவிட்டால் யாகத்தின் முடிவில் அக்கினிவேதிகையினின்றும் புறப்படுவாளா சூரியசந்திரரோடொத்து பிரகாசமாருக்கும் இப்படிப்பட்ட பாக்கியங் கூடுமா ரூபந்தானிருக்குமா சண்பகப்பூவாசனை இவளங்கத்தினின்று ஒரு கோசு தூரம் வீசுமா ஓய் துருபதமகாராஜனே உன்னிடத்திலிருக்கும் பிரீதியினாலே ஞானநேத்திரத்தைத் தருகிறேன் முன் தேகத்தோடுகூடிய இந்தப் பாண்டவர்களையும் திரௌபதையையும் பாரென்று சொல்லித் தம்முடைய தபோமகிமையாலே அந்த ராஜாவுக்கு விவேகநேத்திரங்கொடுத்தார்.

அந்தப் பாஞ்சாலராஜன் வியாசருளினாலே இவ்வைந்துபேரையும் தேவதேகங்களோடு தேவர்க்குரிய காந்தியடைந்து பிரகாசமுள்ள பொற்கிரீடங்கள்தாங்கி சூரியன்போல்விளங்கி பொற்றாமரைமாலைதரித்து உயர்ந்தும் பருத்துமிருக்கிற தேகமுள்ளவர்களாய்த் தேவலோகப் பட்டுடுத்திக்கொண்டு இந்தரூபமாய் விளங்குகிறவர்களாகக் கண்டான் அந்தப் பெண்ணையும் அப்படியே இலக்குமியைப்போலிருக்கக் கண்டான் இப்படி பார்த்தமாத்திரத்திலே அதிக வியப்புஞ் சந்தோஷமும் ஆனந்தமுங்குடிகொண்டு அங்கேநிற்கிற மகானுபாவரான வியாசமகாமுனியினது திருவடித்தாமரைகளிலே கிரீடகாந்தி சேர்த்திகுலவ கைகூப்பிநின்று சுவாமி தேவரீரிடத்தில் இது அதிசயமன்று தேவரீருடைய மகிமைக்கடலில் சகல விசித்திரமும் விளங்கிக்கொண் டிருக்கின்றதென்று மதித்துத் துதித்தான் அந்த மகாரிஷியும் அனுக்கிரகித்து உடனே பின்னும் இந்தராஜனைப்பார்த்து ஓ ராஜனே இந்தச் சரித்திரத்தையும் கொஞ்சங் கேளும்.

முற்காலத்தில் நிதந்து என்று ஒரு மகானுபாவனாகிய இராஜரிஷி யிருந்தார் அவருக்கு மகா பலசாலிகளாகிய ஐந்துகுமாரர்கள் பிறந்தார்கள் அவர்களுடைய நாமதேயங்கள் சால்வேயன், சூரசேனன், சுவிதசேனன், நிந்துராஜன், அதிசாரன் இவரெல்லாம் தருமநிலையுடையவர்கள் ஆதலால் ஒருவருடனொருவர் நட்புக்கொண்டு அதிக்கிரமிக்காமலிருந்தார்கள் இப்படியிருக்க உசீநரதேசத்துச் சக்கிரவர்த்தியாகிய சிபியென்னும் மகாராஜன் தன் மகளாகிய பவுமாசுவியென்பவளுக்குச் சுயம்வர மேற்படுத்தினன் அதற்கு எல்லாதேசத்தரசர்களும் இந்த நிதந்துராஜன் மக்களும்வந்தார்கள் அந்தச் சுயம்வரமண்டபத்திலே சிபிராஜகுமாரியானவள் இவ்வைந்து குமாரர்களையும் இச்சித்தாள் அப்படியே அந்த ஐவரும் விவாகஞ்செய்துக்கொண்டார்கள் அவளுக்கு ஐவராலும் ஐந்து மைந்தர்கள் பிறந்து விளங்கினார்கள் அதனாலே உலகத்தில் சாலவேயரென்றும் சூரசேனரென்றும் சுவிதசேனரென்றும் நிந்துசாரரென்றும் ஐந்து க்ஷத்திரியவம்சஸ்தர்கள் பிறந்து அப்பெயரையுடைய தேசங்களை ஆண்டுவருகிறார்கள் இப்படி ஒருத்தி ஐவருக்குப் பெண்சாதியாகி மகா தருமநிலையிலிருந்து கீர்த்திபெற்றாள் ஆகையால் உன் மகளும் பாண்டவர்களை விவாகஞ்செய்து பதிவிரதாமகத்துவத்துடனே விளங்கட்டும் உன் மனதிற் சந்தேகம்வேண்டாமென்று சொல்லி மறுபடியுஞ் சொல்லுகிறார்.

கவுதமகுலத்திற் பிறந்த ஜடிலையென்னும் ஒருவருடைய மகள் மகா தருமநிலையுடையவள் அவள் மகானுபாவர்களாகிய ஏழு ரிஷிகளை விவாகஞ்செய்துக்கொண்டாள் இன்னும் தக்ஷருடைய பெண் மாரிஷையென்பவள் பிரசேதசரென்கிற பெயருடைய சகோதரர்களாகிய பத்து ரிஷிகளை விவாகஞ்செய்துக்கொண்டாள் மற்றும் ஓர் காரணங் கேள் முன்னே தபோவனத்தில் ஒரு ரிஷியினுடைய மகள் ரூபவதியாய் மங்கைப்பருவத்தை யடைந்திருந்தாள் அவள் தனக்குத்தகுந்த புருஷன் வேண்டுமென்று ஈஸ்வரனைக்குறித்து தவஞ்செய்யும்போது அவர் பிரத்தியட்சமாகி உனக்கு என்னவேண்டுமென்று கேட்க அவள் மிகவும் யோக்கியனாகிய புருஷனைத் தரவேண்டுமென் றிரந்தாள் அதற்கவர் உன் மனதுக்குத் தக்கவராகிய ஐந்து புருஷர்க ளுண்டாவார்களென்று சொன்னார் அவள் சுவாமி சங்கரனே நான் ஒரு நாயகனை யாசி

க்க ஐவரைத் தந்தவித மென்னவென்றுகேட்டாள் நீ எமது
ஐந்து முகத்தையும் காதலித்தமையால் அப்படியே ஐந்து
புருஷரைக் கொடுத்தேனென்று சொன்னார் ஓய் துருபத
மகாராஜனே அந்தப் பெண் உன் மகளைப்போல் தவஞ்செ
ய்த பாக்கியவதி இவள் சுவர்க்கலோகஐஸ்வரியலட்சுமிதான்
ஆதலால் தன்மகள் பாண்டவர்களைச் சேரவேண்டுமென்று
நீதானே தவஞ்செய்து இப்படி பிறந்தாள் இவளைக்குறித்து
இந்திரசேனையிடத்தில் பிரவேசிக்கும்படி ஈஸ்வரன் சொல்லி
யது இதுகளை நன்று யோசித்துப்பார் தெய்வசங்கல்பம் இவ
ளுக்கு ஐந்து புருஷர் கிடைக்கவேண்டியதாயிருக்கிறது அப்
புறம் புத்தியை விசாலப்படுத்திப்பாரென்று புகன்றனர் இப்
படிச் சொல்லிய வியாசபகவானைத் துருபதமகாராஜன் கும்
பிட்டு சுவாமி ரிஷிகுலக்குருவே தேவரீர் வார்த்தையைக்
கேட்பதற்கு முன்னமே பாண்டவர்களெவர்க்கும் என்பெ
ண்ணை விவாகஞ் செய்விக்கவேண்டுமென்று சித்தமாயிருந்
தேன் தேவரீர் வாக்கினாலே சகல பந்துக்களும் யானும் தற்
பூர்வஜனனமுணர்ந்து சம்சயம் நீங்கினேன் தெய்வச் சங்கல்
பத்தைக் கடக்க யார்திறம். அவரவர் கருமத்தினால் நேரிடுவ
தற்கு எதிருண்டோ, இதற்காக எத்தனையோ காரணங்கள்
தேவரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன இது தருமமானா
லும் அதர்மமானாலும் தெய்வத்தின்மூலமாய் வந்ததை மனு
ஷியன் செய்தேதீரவேணும் ஆதலால் குந்திபுத்திரரைவரும்
என் மகளைப் பாணிக்கிரகணஞ் செய்யட்டுமென்று சொல்
லிப்போட்டு வியாசமுனியுடன்கூடச் சபாமண்டபத்திற்கு
வந்தான்.

இப்பால் அந்தச் சபையிலிருந்த குந்திதேவி பாண்டவ
ர்கள் திருஷ்டத்யும்மன் முதலானபேர்களெல்லாம் தாங்
கள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்த பேச்சை
நிறுத்திப்போட்டு பயபக்தியுடனே கைகட்டிநிற்க அம்முனி
வர் எல்லாரையும் உட்காரும்படி நியமித்து தருமபுத்திரனை
நோக்கிக் குழந்தாய் நீங்களைவரும் இந்த ராஜகுமாரியைக்
கலியாணஞ்செய்யவேண்டியதாய் தேவநிபந்தனை யேற்பட்
டது உங்கள் மாதாவாகிய குந்திதேவியின் வாக்கும் அப்ப
டிவந்தது ஆகையால் இனி தாமசம் வேண்டியதில்லை இப்
போது சந்திரன் உரோகணிநட்சத்திரத்தோடே கூடுகிறான்
இந்த திவ்வியமான நாளிலே உங்கள் புரோகிதரை முன்னி

ட்டுக்கொண்டு க்ஷத்திரியதருமத்தை அநுசரித்து சாஸ்திர விதியின்படியே நீங்களைவரும் திரௌபதையை விவாகம் பண்ணிக்கொள்ளுங்களென்று நியமித்தருளினார்.

ஓய் பாஞ்சாலராஜனே கலியாணத்திற்கு வேண்டியதெல்லாஞ் சீக்கிரம் ஜாக்கிரதையாய்ச் சேகரியுமென்று செப்ப அவனும் சுவாமி அடியேனால் எவ்வளவும் தடையில்லை முன்னமே விவாகத்துக்காக எல்லாஞ்சித்தப்படுத்தியிருக்கிறேன் இன்னமேதாவது சேகரிக்கவேண்டியதும் ஒருநிமிஷத்திலே தருவிக்கிறேனென்று சொல்லி தன் குமாரனையழைத்து நம்முடைய பெண்ணுக்கு மங்களஸ்நான முதலியவைகளையும் சீக்கிரத்தில் நடத்தவேண்டுமென்று கட்டளையிட்டு வியாசரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சபையைவிட் டெழுந்திருந்தான் அந்தப் பராசர்புத்திரரும் பாண்டவர்களுக்கு விடைகொடுத்து எழுந்தருளினார் சபையிலிருந்தவர்களும் எழுந்தார்கள்.

அப்பால் சகலமான பந்துக்களுக்கும் சிநேகிதர்களுக்கும் தனது பட்டணத்திலும் தேசத்திலுமுள்ள பிராமண உத்தமர்களுக்கும் நானாஜாதிப் பெரியமனிதருக்கும் கலியாணசமாச்சாரந் தெரிவித்தார்கள் அவரவர்கள் வினோதமாகிய வஸ்திராபரணங்களைத் தரித்துக்கொண்டு சந்தோஷத்துடனே அந்தப் பட்டணம்வந்து சேர்ந்தார்கள்.

திருக்கலியாணம்.

சகல ஜனங்களும் பாண்டவர்களுக்கும் திரௌபதைக்கும் நடக்கும் கலியாணம் தங்கள்வீட்டுக் கலியாணமாகவே நினைத்து உச்சாகத்துடன் மனக்களிப்படைந்து லக்கினத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள் இப்படிப் பட்டணமெல்லாம் அலங்கரித்தவுடனே மறுபடியும் ராஜகிரகத்தையும் கலியாணமண்டபத்தையும் விசித்திரமான வஸ்திரங்களாலும் பூமாலைகளாலும் அகிற்புகையினாலும் பொற்றோரணங்களாலும் புதுக்கினார்கள் அந்தச் சிறப்புகள் நாம் இந்தக் கலியாணத்திற் கிடமாயினோமென்று சந்தோஷமடைந்

தபோற் பிரகாசித்தன அம்மண்டபத்தினடுவிலே விவாக
வேதிகைசெய்து பொற்றட்டினு லலங்கரித்து சுருக்கு சுரு
வம் சங்குபாத்திரம் தர்ப்பங்கள் அட்சதைகள் முதலான
சுபவஸ்துக்களாலே நிறைத்துப் புரோகிதர்கள் சிறந்த வே
தியர்கூட்டத்தோடு நிறைந்தார்கள் பாண்டவரும் தமது
புரோகிதரை அழைப்பித்து சமாவர்த்தனஞ்செய்துக்கொ
ண்டு அநேக வஸ்திரங்கள் பசுக்கள் சுவர்ணங்கள் முதலிய
வைகளை வேதியருக்கு வழங்கி மங்களஸ்நானஞ்செய்து நவ
ரத்தினங்களிழைத்த குண்டலமுதலிய ஆபரணங்களையும் வி
லையுயர்ந்த பட்டுவஸ்திரங்களையும் அணிந்து சுகந்தபரிமளமி
குந்த கந்தம் பூசிக்கொண்டு புஷ்பசரங்களும் புனைந்து மண
வாளக்கோலத்துடனே விளங்கினார்கள் அப்போது திரௌ
பதைக்கும் கோகிலாதேவி முதலானவர்கள் வேதியரைக்
கொண்டு மங்களஸ்நானமும் சாந்தியுஞ் செய்வி[illegible] அவர்க
ட்கு அன்னங்களாலும் தட்சணைகளாலும் திரு[illegible]ண்டா
க்கி அவர்களுடைய ஆசிர்வாதத்தினாற் சிறந்து [illegible]ங்கும்
அப்பெண்மணிக்குப் பாதமுதல் கேசம்வரைக்கும் ரத்னாப
ரணங்களினாலே அலங்கரித்தனர்.

அந்தக் கலியாணப்பெண் ஒருபொற்கொடியாவது ரத்
தினமயமான பூங்கொத்துகளினால் வளங்கெழுமியதுபோல்
விளங்கினாள் அன்றியும் புன்னமையின் இராத்திரியானது தீ
பங்களினால் ஒளிர்வதுபோலவு மிருந்தாள் கனகசித்திர மினு
மினுக்கிட்ட வெண்பட்டுடுத்திக்கொண்டவள் மகாபரிசுத்த
மாகிய இவளது தேகத்தைக் கட்டிக்கொண்டு பாதகரால்
தனக்கு வந்த அசுத்தியை நீங்கும்பொருட்டு பொற்சிறகு
டைய அன்னங்கள்போல் விளங்கினாள். பரிமளதிரவியங்கள்
இவளுடைய தேகவாசனைக்குத் தோற்றதினாலேயோ விற்ப
னைக்குரிய பற்பல சுகந்தவஸ்துக்களைச் சேர்த்ததினாலேயோ
அவைகளை யனைத்துத் தேகத்திற் பூசப்பட்டு பிரகாசித்தாள்
இவளுடைய தேகத்தின் மேன்மைக்குத் தோற்றதினாலே
யோ அல்லது பூர்வத்தினாலேயோ உயர்ந்தமலர்களைநாரினாற்
கட்டியிறுக்கி முடியிலும் கழுத்திலும்பூட்டிச் சூட்டினார்கள்.

இப்படிக்கெல்லாம் சிங்காரிக்கப்பட்ட பாஞ்சாலகன்
னிகையைப் புரோகிதபத்தினி முதலாகிய பிராமணப்பெண்க
ளுடனே கோகிலாதேவி க்ஷத்திரிய சுமங்கலிகள் கந்தபுஷ்ப,

தாம்பூலமுதலிய மங்கலவஸ்துக்களுள்ள பொற்பாத்திரங்களையேந்திக்கொண்டு அழகிய கலியாணப்பாடல்களைப் பாடி சகல தேவஸ்திரீகளும் லட்சுமிதேவியைச் சூழ்வதுபோல் சூழ்ந்து வாத்தியங்களும் சங்கீதங்களும் முழங்க மெள்ளமெள்ள அந்தப்புரத்தினின்றும் கல்யாணமண்டபத்திற் கழைத்துவந்தனர், அப்படி அநேக சுந்தரிகள் சூழ வருந் திரௌபதையைப்பார்த்த மின்னல்களானது இவளுடைய தேககாந்திக்குத் தாழ்ந்தமையாலே விசேஷமயத்திலே இவளிடத்தில் சேவகம் பண்ணி அனுக்கிரகம் பெறவேண்டுமென்று பூமியிலிறங்கிவந்து சஞ்சலத்தன்மையைவிட்டு பின்செல்லும் பான்மையைத்தொட்டு முன்செல்லும் விசாலத்திலகப்பட்டு இவளைச் சூழ்ந்ததுபோலிருந்தது.

திருக்கலியாண விருத்தம்.

கேள்விக்கொருவனெனுந்தௌமியன்கிதவேத
வேள்விக்குவேண்டுவனயாவும்விதியினீட்டி
மூள்வித்தசெந்தீக்கிரியாகமுராசுயர்த்த
தாள்வித்தகர்க்குவரமானசடங்குசெய்தான்.

பன்மங்களமுமுடன்வைகியபண்பினளை
நன்மங்களப்பூண்டுகிலோடுநயந்துசாத்தித்
தன்மங்கலந்தமனத்தோனையத்தையலோடுந்
தென்மங்கலஞ்சுடர்த்தீவலஞ்செய்வித்தாரே.

இந்த ஸ்திரீகளால் மலிந்த அக் கலியாணமண்டபமானது அப்சரசுகள் விளங்கிய இந்திரன் சபைக்கு நிகராயிருந்தது இவ்வாறு கலியாணப்பெண்ணை விவாகச்சபைக்கு அழைத்துக்கொண்டுவந்து நிறுத்தினவுடனே தவுமியர் முதலாகிய மகாமுனிகளும் கிருஷ்ணன் முதலிய பந்துக்களும் மித்திரர்களும் சூழ்ந்திருக்கிற பாண்டவர்களைத் துருபதமகாராஜன் சுற்றத்தாருடனேயும் வேதநாதகீத பரதநாட்டிய ஸ்திரீகளுடனும் அவர்களிருக்குமிடத்திற்குப் போய் தகுந்த மரியாதைகள்செய்து பின்புறத்தில் சுவஸ்திவாசகங்களும் முன்புறத்தில் வாத்தியங்களுங் கோஷிக்க வெகு சிறப்பாய் அழைத்துக்கொண்டுவந்து சபையிலமர்த்தினன்.

இவ்வித வாத்தியங்களும் சங்கீதங்களும் ஜயசப்தங்களும் முழங்கிக்கொண்டிருக்கிற அந்தச் சபாமண்டபத்திலே

வேதிகையைச்சுற்றிப் பிராமணரும் அவர்களைச்சூழ்ந்து இரண்டுவகை பந்துக்களும் சுற்றும் மந்திரிமுதலாகியவர்களும் ஜரூர்தபடி ஆசனங்களி லுட்கார்ந்தபின்பு பாண்டவர்களுக்கும் புரோகிதராகிய தவுமியமுனிவர் ஒதுருபதமகாராஜனை லக்கினம் வந்துவிட்டது விவாகத்துக்குச் செலவுகொடுக்க வேண்டுமென்று கேட்க அவ்வாசன் அடியேனால் செய்ய வேண்டியகாரியம் ஒன்றுமில்லை தேவரீரிக்கு இஷ்டமாகிய படி நடத்துமென்று சொன்னார்.

அதுகேட்டு அந்த முனிவர் தருமபுத்திரனை யழைத்து பக்கத்தில் வைத்துக்கொண்டு சபைக்குப் பூசையும் சங்கல்பமுஞ் செய்வித்து அங்குரார்ப்பணமும் பிரதிசரங்களும் நடத்தி திரௌபதையின் பாணிக்கிரகணங்கூட்டி பெரியோர்களாலும் ஆசீர்வாதஞ் சொல்லிவைத்துப் பின்பு அவ்வேதிகையில் அக்கினியின் உபசமாதானஞ்செய்து விதிப்படியே ஓமம்வளர்த்தி தருமபுத்திரர் கையினால் அந்த ராஜகுமாரிக்கு மங்கலசூத்திரம் தரிப்பித்து வேதியருடைய ஆசீர்வாதமும் வேதவாத்தியமு முழக்குவித்தார் பின்பு புரோகிதருடைய ஆக்கினையினாலே தருமபுத்திரரும் அந்தக் கன்னிகையினுடைய கையைப் பிடித்துக்கொண்டு அக்கினிவேதிகையைப் பிரதட்சணமாகவந்து மந்திரத்துடனே அம்மி மிதித்து அருந்ததி தரிசித்து சாயாதேவியுடனே சூரியன் மேருபருவதத்தைப் பிரதட்சணம் வருவதுபோல் அஷ்டமங்கலத்துடன் பிரதட்சணஞ்செய்து உட்கார்ந்துக்கொண்டு அப்பெண்ணுக்குச் சுமங்க்லியத்தன்மை வளரும்பொருட்டு புரோகிதருடைய அனுமதியின்படி மந்திரங்களை யுச்சரித்துக்கொண்டு பொரிகளை கைகளால் வாரி அக்கினியில் ஓமஞ்செய்வித்தார் அப்பெண்ணரசியானது கைகளினின்றும் அக்கினியிற் பொரிகள் சொரியும்போது செழித்த தாமரைகளிலிருந்து முத்துகள் விழுவதுபோலிருந்தது இப்படிக்கு ராஜஓமமுஞ் ஸப்தபதியும் ஆனவுடனே புரோகிதர் இந்தப் பிள்ளையையும் பெண்ணையும் கோலமணையில் உட்காரவைத்து மகாசபைக்குச் சந்தனம் புட்பமுதலியவைகளால் பூசைசெய்து மங்கள அட்சதைகளைப் பெரியோர் கையிற் கொடுத்து வேதவாக்கியங்களாலே ஆசீர்வாதஞ் செய்வித்தார் சுமங்கலிகளும் மங்களகீதங்கள் பாடிக்கொண்டு ஆலாத்தியும் சுற்றினார்கள்.

இப்படி விவாகமஹோற்சவம் நடந்தவுடனே தருமபுத்திரராஜன் பிராமணர்களுக்கு வஸ்திரங்களும் ஆபரணங்களும் பசுக்களும் பூமிகளும் வீடுகளும் இன்னும் அநேக திரவியங்களும் தட்சணையாகக் கொடுத்து பந்துக்களையும் அப்தர்களையும் தகுந்தபடி மரியாதையுடனே விசாரித்தான ஸ்திரிகளுக்கும் பிராமணஸ்திரிகளுக்கும் வஸ்திராதிகளும் ஆபரணங்களும் கொடுத்துப் பூசித்து சம்பந்திகளையும் உபசரித்தான் இன்னும் ஒருக்கண்ணமுதுபாயசம் அதிரசபருவர்க்கங்களுடனே திருப்தியாகும்படி வேதியர்க்கு சமாராதனை செய்தான் சகல சம்பந்திகள் பந்துக்கள் சிநேகிதர்கள் பரிவாரங்களுடனே விசித்திரமாகிய கதைகள் சொல்லி சிரித்துக்கொண்டு போசனஞ்செய்து எல்லோருக்கும் சகல சுகந்தமிட்டிருக்கிற சந்தன தாம்பூலங்கள் கொடுப்பித்துச் சபையில் அநேகம் பெரியோர்களுடனே சம்பாவித்துக் கொண்டிருந்தான் சூரியன் அஸ்தமித்தவுடனே புரோகிதர் வந்து பிரவேச ஓமமுஞ் செய்வித்தார்கள்.

மறுநாட்களிலே முறையே பீமசேனன் அருச்சுனன் நகுலன் சகாதேவனென்ற நால்வருக்கு திரௌபதையை விவாகஞ்செய்வித்து [illegible] அனுஷ்டிக்கவேண்டிய அவ்யாகங்களெல்லாம் மற்றுமுள்ள சேவைகளையும் நடத்தி வைத்தார்கள். இப்படி நடந்த விவாகமஹோற்சவத்துக்கு வந்த சகல ஜனங்களும் அன்னத்திலும் அமிர்தத்தையும் தானத்திலும் கற்பகத்தருக்களிடம் சங்கீத நாட்டியம் வாத்தியங்கள் வீடுகள் தோட்டங்கள் முதலியவைகளாலே போகங்களையும் அழகிய ஆண் பெண் பிள்ளைகளாலே கந்தருவர் அப்சரசுகள் முதலானவர்களையும் வித்துவான்களாலே தேவகுரு முதலானவர்களையும் வியாசர் முதலிய மகாரிஷிகளிலே நாரதர் முதலிய சப்தரிஷிகளையும் ஒத்திருந்தபடியினாலே சுவர்க்கலோகத்தில் ஒரு மகிமையையும் கீர்த்தியும் அந்த யாகசேனமகாராஜனும் மருமக்களுக்கும் அநேகம வரிசைகளெடுத்து சீதனங்கள் கொடுத்து மனங்களிக்கச் செய்தார். இவ்விதமாக திரௌபதை கல்யாணம் நிறைவேறியது.

வியாசன் விபரீதம்

சுபமஸ்து.

சுகத்த பரிபான சாஸ்திரம்			
சிவசொரூபசாஸ்திரம்	0	[illegible]	
ஸ்ரீசாஸ்திரம்	0	8	
விவு[illegible]சாஸ்திரம்	0	8	
[illegible]சாஸ்திரம்	0	8	0
[illegible]ஞானசாஸ்திரம்	0	4	0
[illegible]	0	4	0
[illegible]	0	8	0
பதிவிரதை [illegible]	0	[illegible]	0
உலகவிசித்திரங்[illegible]			
இங்கிலீஷ் தமிழ் [illegible]			
பிரபஞ்ச உற்பத்தி			
சண்டாளர் சகவாசம்			
வேதாந்த ஜட்ஜ்மெண்ட்			
குடும்ப சனியனென்னும் [illegible]			
ருஷியா ஜப்பான் யுத்தம்			
வியாசர்விபரீதம்			
கண்கட்டுவித்தை 1000			
காமதர்க்கம்			
௸ 2-ம் பாகம்			
தெய்வகுணவெளிச்ச[illegible]			
இந்தியா சபையல் [illegible]			
நூதன கலியா[illegible]			
போலீசு [illegible]			
தேவஸ்[illegible]ட்டு			
ஸ்டாம்பு ஆக்ட்டு			
8-வது ஆக்ட்டு			
சாட்சி ஆக்ட்டு	0	12	0
[illegible]ஆக்ட்டு	1	4	0
[illegible]ப்ளின்கோட்டு	3	0	0
முன்சிப் கோட்டு	3	0	[illegible]
இந்திய[illegible]	2	0	

இப்படிக்கு.

சி. முனிசாமி முதலியார் கம்பெ[illegible]

பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு.